தொல்காப்பியத் தமிழர்

இலக்கிய வரிசை

2

இலக்கிய வரிசை 2.

தொல்காப்பியத் தமிழர்

ஆக்கியோன்:

சாமி. சிதம்பரனார்

*

விற்பனை உரிமை:

ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி
சென்னை 5.

மேலக்கோபுரத் தெரு
மதுரை

முதற்பதிப்பு பிப்ரவரி 1956

விலை ரூ. 2-4-0

வெளியிட்டோர்:
சாமி. சிதம்பரனார்
எண். 9, ஏழாவது தெரு, சவுராஷ்டிர நகர்
சென்னை-24.

பாரதி பிரிண்டர்ஸ், சென்னை-1

பொருள் அடக்கம்

ஆக்கியோன் முன்னுரை

தமிழரைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் எத்தனை எத்தனையோ வெளிவந்திருக்கின்றன : தமிழ் மொழியைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களும் எத்தனையோ வெளிவந்திருக்கின்றன. தமிழரைப்பற்றிய உண்மை வரலாற்று நூல்கள் இன்னும் வெளிவரவேண்டும். தமிழ்மொழியைப் பற்றிய நூல்களும் இன்னும் வெளிவர வேண்டும்.

பழந்தமிழர் வரலாற்றைக்காணத் தமிழ் இலக்கியங்களையே ஆதரவாகக்கொள்ள வேண்டும். தமிழ் இலக்கியங்களில்தான் பழந்தமிழர் பண்பாடுகளையும், வரலாறுகளையும் தெளிவாகக் காணமுடியும். பழந்தமிழர் நாகரிகத்தை விளக்குவன பழந்தமிழ் நூல்களே தான்.

தமிழர்களைப் பற்றித், தமிழ் இலக்கிய உண்மைகளை உணராதவர்களால் எழுதப்பட்ட வரலாறுகளே இன்று மலிந்து கிடக்கின்றன. ஒரு பழமையின் உண்மையைக் கண்டறிய வேண்டுமானால் அதற்குத் துணைசெய்யும் கருவிகள் இரண்டு ; ஒன்று உள் ஆதரவு , மற்றொன்று வெளி ஆதரவு. உள்ளாதரவை அகச்சான்று என்பர் : வெளி ஆதரவைப் புறச்சான்று என்பர். உண்மையை அறிவதற்குப் புறச்சான்றை விட அகச்சான்றே சிறந்தது.

தமிழர் வரலாற்றைப் பற்றி வெளி நாட்டினர் பலவாறு கூறுகின்றனர். பழந்தமிழ் இலக்கியங்களிலே பயிற்சியில்லாத சரித்திரக்காரர்கள் என்னென்னவோ சொல்லுகின்றனர். இவர்கள் கூறுவதைவிடப் பழந்தமிழ் நூல்களைக்கொண்டு தமிழர்நாகரிகத்தை ஆராய்ந்தறிவதே சிறந்த முறையாகும். இவ்வுண்

மையை ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

தொல்காப்பியர் காலத்துத் தமிழர் வாழ்வைப்பற்றி அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். குறிப்பாகத் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். இதனால் பழந்தமிழர் வாழ்வைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம்; பழந்தமிழர் வரலாறு; நாகரிகம்; ஆகியவைகளைப்பற்றி அறிந்துகொள்ளலாம். தமிழ் இலக்கியத்தின் சிறப்பைப் பற்றியும், வளர்ச்சியைப் பற்றியும் புரிந்து கொள்ள முடியும். இதுவே இந்நூலை எழுதியதன் நோக்கம்.

தமிழகத்திலே இன்று இன வெறுப்புத் தலைவிரித்தாடுகிறது. மொழி வெறுப்பு முறுக்கேறி நிற்கின்றது. நாகரிக வெறுப்பு நடனமாடுகின்றது. வரலாறு, நாகரிகம், பண்பாடு, என்ற பெயர்களைச் சொல்லித் தமிழ் மக்களிடையிலே கலகத் தீயை மூட்டி விடுகின்றனர் சிலர். இத்தகைய வெறுப்புத் தீ அணைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் தமிழர் முன்னேற்றமடைவர் ; தமிழ்மொழி வளர்ச்சியடையும்.

சில ஆராய்ச்சிக்காரர்கள் பண்டைத் தமிழர்கள் நாகரிகம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தாமாகவே ஒரு முடிவு செய்து கொள்ளுகின்றனர். அவர்கள் முடிவு இன்று உருவாகி வரும் புதிய சமுதாயத்தை மனத்தில் வைத்துக் கொண்டு செய்யப்பட்ட முடிவாகும். இன்று உருவாகி வரும் புதிய சமுதாய முறை பண்டைத் தமிழகத்தில் இருந்தது என்று காட்டவே அவர்கள் முயல்கின்றனர். ‘‘இன்று உருவாக வேண்டும் என்று நாம் நினைக்கின்ற புதிய சமுதாய முறை புதுமையானதன்று. பண்டைத் தமிழர்களிடமிருந்த சமுதாய முறைதான்’’ என்று மெய்ப்பிக்கவே அவர்களுடைய அறிவையும் ஆராய்ச்சியையும் பயன் படுத்துகின்றனர்.

‘‘பண்டைத்தமிழர் உன்னதமான உயர்ந்த வாழ்க்கையிலே இருந்தனர். அந்நியரால் அவர்களுடைய உன்னத வாழ்க்கை நாசமாக்கப்பட்டது. ஒற்றுமையும் நாகரிகமும்

நிறைந்த தமிழர் சமுதாயம் வேற்றூரால் உருக்குலைந்தது. தமிழர்களின் பண்டைப் பண்புகள் மறைந்தன. மாற்றூர்களின் பண்புகள் தமிழரிடம் குடிகொண்டன." இக்கொள்கையைப் பரப்புவதே இந்தப் புதிய ஆராய்ச்சியாளர்களின் நோக்கம்.

ஒரு சமுதாயம் எவ்வளவுதான் நிலை குலைந்தாலும், எத்தனை ஆண்டுகள் மாற்றானுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தாலும் அச்சமுதாயத்தின் பண்பாட்டை அடியோடு மாற்றிவிட முடியாது. பழய பண்பாடு, புதிய நாகரிகத்துடன் கலந்து வளர்ந்து கொண்டுதான் வரும் இந்த உண்மையை ஆராய்ச்சியாளர்கள் மறந்துவிடக் கூடாது.

மக்கள் வாழ்வு நாளாக நாளாக நாகரிகப் படியிலே முன்னேறிக் கொண்டுதான் வருகின்றது. கீழேயிருந்து மேலே போவதுதான் நாகரிகம் ஆகும். உயர்ந்த நிலையிலிருந்த நாகரிகம் வரவரத்தாழ்ந்துகொண்டே வருகிறது என்பது வரலாற்று முறைக்கு மாறான கருத்து. ஒரு பழய சமுதாயத்தைப் பற்றி ஆராயும்போது இந்த உண்மையையும் உள்ளத்தில் வைத்துக் கொண்டுதான் ஆராயவேண்டும். அப்பொழுதுதான் அச்சமுதாயத்தின் உண்மைப் பண்பாட்டைக் கண்டறிய முடியும்.

உலகில் பல நாடுகள்—பல நாட்டு மக்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் தமிழ் மக்கள் உயர்ந்த நிலையிலே வாழ்ந்திருந்தனர். தமிழ் மக்களுடைய நாகரிகம் மற்றவர்களைக் காட்டிலும் சிறந்திருந்தது. தமிழர்கள் விவசாயத்திலே தேர்ச்சி பெற்றிருந்தனர். நல்ல அரசியல் அமைப்பைக் கொண்டிருந்தனர். வாணிகம், கைத்தொழில் முதலியவைகளில் உயர்ந்திருந்தனர். நல்ல கட்டுத்திட்டமுள்ள சமுதாயமாகவாழ்ந்தனர். இந்த உண்மைகளைப் பண்டைத் தமிழ் நூல்களால் நாம் காணலாம். தமிழ் நூல்களில் முதல் நூலாகிய தொல்காப்பியமும் இவ்வுண்மைகளை நமக்குக் காட்டுகின்றது.

இன்று நடப்பது விஞ்ஞான யுகம். விஞ்ஞான வளர்ச்சி காரணமாகப் பண்டைப் பழக்கங்கள் சிலவற்றைத் தவறு என்று

சொல்லுகின்ருேம். பண்டை மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை கள் சிலவற்றை மூடநம்பிக்கைகள் என்று மொழிகின்ருேம். விஞ்ஞான அறிவுக்கு ஒத்துவராத சில பழக்கங்களும், நம்பிக் கைகளும் பண்டைக்கால மக்களிடம் இருந்தன. நாகரிகம் பெற்ற எல்லா இனத்தினரிடமும் இவைகள் இருந்தன. தமிழர்களிடமும் இத்தகைய பழக்கங்களும், நம்பிக்கைகளும் இருந்தன வென்பதில் வியப்பில்லை.

தமிழ் இலக்கியங்களை நன்ருகக் கற்றவர்களுக்கு இவ் வுண்மை தெரியும். இவ்வுண்மையை உணர்ந்த புலவர்களில் கூடச் சிலர் இதை மறைக்கின்றனர். " தமிழர்களிடம் எவ் விதமான பொருந்தாப் பழக்கமும் இருந்ததில்லை. எந்தக் குருட்டு நம்பிக்கையும் இருந்ததில்லை. இன்றைய விஞ்ஞான அறிவு பெற்ற பகுத்தறிவாளர்களைப் போலவே அன்றும் வாழ்ந் தனர். தமிழ் நாட்டிலே புகுந்த ஆரியர்கள் தாம் பொருந்தாப் பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் தமிழர்களி டம் புகுத்தினர் " என்று கூறுகின்றனர். இவர்கள் கூற்று வெறுப்பையே அடிப்படையாகக் கொண்டது. இவர்கள் வட மொழியில் கொண்டிருக்கும் வெறுப்பும் இதற்கொரு காரணம்.

ஆரியர்கள் தாம் பொருந்தாப் பழக்க வழக்கங்களையும், மூட நம்பிக்கைகளையும் தமிழரிடையிலே புகுத்தினர் என்பது உண்மையன்று. இது உண்மையாளுல்—இன்றுள்ள பழந்தமிழ் நூல்களிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நூல் ஒன்றுகூட இல்லை என்று தான் கொள்ளவேண்டும். தொல்காப்பியமும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் தோன்றிய நூல் என்று தான் கருதவேண்டும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தான் ஆரியர்கள் இந்நாட்டுக்கு வந்தார் கள் என்று பெரும்பாலான சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். ஆதலால் இந்த முடிவுதான் ஏற்படும்.

" நமது முன்னேர்களிடம் இருந்த பழக்க வழக்கங்களிலே சில இக்காலத்திற்கு ஏலாதன : நம்பிக்கைகளிலே சில, அறிவுக்

குப் பொருத்தமற்றவை ; இவ்வுண்மை தமிழ் நூல்களில் காணப்படுகின்றன" என்று கூறுவதனால் நமக்கு இழுக்கு ஒன்றும் இல்லை. முன்னோர்களைப் பழிப்பதாகவும் ஆகாது. மக்களின் பழக்க வழக்க நம்பிக்கைகள் அவர்கள் வாழ்ந்த காலத்தின் நிலைமையை ஒட்டியே வளர்ந்து வந்தன; என்ற வரலாற்று உண்மையைத்தான் இது காட்டும். ஆதலால் பழய நூல்களில் காணப்படும் தமிழர்களின் உண்மை நாகரிகத்தை எடுத்து காட்டுவதே சிறந்தது. இதுவே நமதுமுன்னோர் வரலாற்றை அறிவதற்குந் துணை செய்யும். நமக்குப் பிடிக்க வில்லை யென்பதற்காக. உண்மையை மறைப்பது தவறு. இது வரலாற்றையே சிதைப்பதாகும.

தொல்காப்பிய காலத்திலே தமிழர்களிடம் இருந்த நாகரிகம் தமிழர்நாகரிகம் என்றுதான் எண்ண வேண்டும். அந்த நாகரிகம் ஆரியருக்கும் தமிழர்க்கும் ஒத்த நாகரிகமாகத்தான் காணப்படுகின்றது. தொல்காப்பியத்தில் ஆரியர் என்றபெயரோ திராவிடர் என்ற பெயரோ காணப்படவில்லை.

இந்தியாவின் அடிப்படை நாகரிகம் ஒன்றுதான் என்று கூறும் சரித்திராசிரியர்கள் உண்டு. " **இந்திய மக்கள் வணங்கும் தெய்வங்கள் ; பிறப்பு, இறப்பு பற்றிய நம்பிக்கைகள். நீதி அநீதி இவைகளைப் பற்றிய முடிவுகள், பாவ புண்ணியம், மோட்ச, நரகம், பற்றியகொள்கைகள், இவைகள் எல்லாம் ஒன்ருகவே யிருக்கின்றன. இந்திய மக்கள் அனைவர்க்கும் இவைகளைப் பற்றிய கருத்து ஒன்றுதான். இவைகள் தான் பண்பாட்டுக்கு அடிப்படையானவை. அவரவர்கள் வாழும் இடத்தைப் பொறுத்து நடை, உடை, பாவனைகளும், மொழிகளும் வேறுபட்டிருக்கலாம். இதனுல் இந்திய மக்களின் பண்பாடு வெவ்வேறு என்று சொல்லிவிட முடியாது**" என்பதே இச் சரித்திராசிரியர்களின் கொள்கை. இந்தக் கொள்கைக்குத் தொல்காப்பியம் ஆதரவளிக்கிறது.

தமிழ் நாட்டு உண்மை வரலாறு ; பண்டைத் தமிழர்களின் பண்பாடு ; செந்தமிழ் இலக்கியங்களின் சிறப்பு; இவைகளைத்

தெரிந்து கொள்ளுவதற்கு இந்நூல் பயன்படும். இவ்வாறு பயன் பட வேண்டும் என்ற எண்ணத்துடனேயே இந்நூல் எழுதப் பட்டது.

தொல்காப்பியத்தில் காணப்படும் உண்மைகளையே இந் நூலில் திரட்டி எழுதப் பட்டிருக்கின்றது. தொல்காப்பியத்தில் காணப்படும் உண்மைகள் அனைத்தையும் அப்படியே ஒன்று விடாமல் எழுதப்பட்ட நூல் என்று இதைச் சொல்ல முடியாது. இன்னும் எழுத வேண்டியவை எவ்வளவோ உண்டு. எழுதா மல் விடுபட்டுப் போனவை எவ்வளவோ உண்டு. குறிப்பிடத் தக்க செய்திகள் மட்டுமே இதில் கூறப்பட்டிருக்கின்றன.

இந்நூலில் உள்ளவை பெரும்பாலும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தையே அடிப்படையாகக் கொண்டவை. தமிழர் நாகரிகத்தைக் காணுவதற்குப் பொருளதிகாரமே பெருந்துணை செய்கின்றது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரங்களில் உள்ள சில பகுதிகளும் இவ்வாராய்ச்சிக்குத் துணை செய்திருக்கின்றன. ஆயினும் இது தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சியா கவே முடிந்திருக்கின்றது.

இந்நூலில் விளக்கப்படும் செய்திகள் கற்பனையோ, ஊகமோ அன்று. ஒவ்வொரு செய்தியும், தொல்காப்பியச் சூத்திரத்தின் மேற்கோளுடன் எழுதப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு சூத்தி ரத்தின் இறுதியிலும் அச்சூத்திரத்தின் எண், அதிகாரம், இயல் ஆகியவை குறிக்கப் பட்டிருக்கின்றன.

சூத்திரத்தின் எண்கள் தொல்காப்பிய மூலத்தில் உள்ளவை இது காலஞ் சென்ற கா. நமச்சிவாய முதலியார் பதிப்பித்த தொல்காப்பிய மூலத்தைப் பின்பற்றியது. தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணை இயல், ஐந்தாவது சூத்திரம் என்று குறிக்கப் படவேண்டிய இடத்தில் (தொ. பொ. அக. 5) என்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தான் ஒவ்வொரு சூத்தி ரமும் குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

சூத்திரங்களைப் பற்றி—தொல்காப்பியத்தில் அவைகள் எங்கே யிருக்கின்றன என்பதைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரங்களை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் ஒவ்வொரு அதிகாரத்திலும் உள்ள இயல்களையும் நினைவில்வைத்துக்கொள்ள வேண்டும். தொல்காப்பியச் சூத்திரங்களை எளிதில் கண்டு பிடிக்க இதுதான் வழியாகும். அதிகாரங்களும், இயல்களும் கீழ் வருவன.

I எழுத்ததிகாரம்

1. நூல் மரபு
2. மொழி மரபு.
3. பிறப்பியல்.
4. புணரியல்
5. தொகை மரபு.
6. உருபியல்.
7. உயிர் மயங்கியல்.
8. புள்ளி மயங்கியல்.
9. குற்றியலுகரப்—புணரியல்.

II சொல்லதிகாரம்

1. கிளவியாக்கம்.
2. வேற்றுமையியல்.
3. வேற்றுமை மயங்கியல்
4. விளி மரபு.
5. பெயரியல்.
6. வினையியல்
7. இடையியல்
8. உரியியல்
9. எச்சவியல்

III பொருளதிகாரம்

1. அகத்திணையியல்-
2. புறத்திணையியல்.
3. களவியல்
4. கற்பியல்.
5. பொருளியல்.
6. மெய்ப்பாட்டியல்.
7. உவமவியல்.
8. செய்யுளியல்.
9. மரபியல்.

இவைகளே தொல்காபபியத்தில் உள்ள அதிகாரங்களும், இயல்களுமாகும் மூன்று அதிகாரங்கள். ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது இயல்கள்.

இந்நூலில் கூறப்படும் ஒருசில செய்திகள் புதுமையாகத் தோன்றலாம். ஆனால் தொல்காப்பியத்தை ஆராய்வோர் அக் கருத்துக்களைக்கண்டு வியப்புற மாட்டார்கள். உண்மை என்று ஒப்புக்கொள்வர். மனித சமுதாயத்தின் ஒற்றுமையையும் முன் னேற்றத்தையும் விரும்பும் அறிஞர்கள் இந்நூலை வரவேற்பார் கள் என்பதில் ஐயமில்லை.

சாமி. சிதம்பரன்

நெ 9. ஏழாவது தெரு
சவுராஷ்டிர நகர்
சென்னை-24

15—2—56

தொல்காப்பியத் தமிழர்

1. ஆசிரியர் வரலாறு

தொல்காப்பியம்

தொல்காப்பியம் ஒரு பழந்தமிழ்ப் பெரும செல்வம். தமிழில் இன்றுள்ள நூலகளில் இதுவே பழமை யானது; முதன்மையானது; காலத்தால் முற்பட்டது; ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னே எழுதப்பட்ட அரிய நூல். நமது முன்னோர்களால் நமக்குச் சேமித்து வைக்கப் பட்டிருக்கும் செல்வங்களில் இதுவே தலை சிறந்தது. தொல்காப்பியத்திற்கு முன்னும் பல நூல்கள் தோன்றி யிருந்தன. ஆனால் அப்பழந்தமிழ் நூல் களில் ஒன்றேனும் இன்று நமக்குக் கிடைக்க வில்லை.

பண்டைத் தமிழர் நாகரிகத்தைப—பழக்க வழக்கங் களைத் தெரிந்து கொள்வதற்குத் தொல்காப்பியமே துணை. தொல்காப்பிய காலத்திலே தமிழர்கள் வாழ்க்கை முறை எப்படி இருந்தது? அவர்கள் எந்தெந்தத் துறைகளிலே முன்னேறி யிருந்தார்கள்? அவர்களுடைய சமுதாய அமைப்பு எத்தகையது? இவைகளைக் கண்டறிவதுதான் இவ்வராய்ச்சியின் நோக்கம்.

தொல்காப்பியம் என்றால் என்ன? தொல்காப்பியம் என்ற பெயரைக் கேட்டவுடன் அது ஒரு காவியமோ என்று கருதலாம். தொல்காப்பியத்தைப் பற்றி அறியாத வர்கள் இப்படி நினைப்பது இயல்புதான். இவர்கள் தொல்—பழமை. காப்பியம்—காவியம். தொல்காப்பியம்-

பழமையான காவியம்; என்று பொருள் பண்ணிக் கொள்ளலாம்.

தொல்காப்பியம் காவியம் அன்று; புராணம் அன்று; சரித்திரம் அன்று; திருக்குறள், பகவத்கீதை போல மக்களுக்கு நல்லுரைகளைத் தெரிவிக்கும் நீதிநூலும் அன்று; தத்துவ நூலும் அன்று.

தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல்: செந்தமிழுக்கு இன்றுள்ள பழமையான சிறந்த இலக்கணம் இது ஒன்றுதான். நன்னூல், நேமிநாதம், வீரசோழியம், இலக்கண விளக்கம், இறையனார் அகப்பொருள், நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, போன்ற இலக்கண நூல்கள் எல்லாம் பிற்காலத்தே தோன்றியவை; தொல்காப்பியத்திற்குப் பின்னே தோன்றியவை; இவ்விலக்கண நூல்கள் எல்லாவற்றுக்கும் தொல்காப்பியமே தாயகம். தமிழிலே இன்றுள்ள இலக்கண நூல்கள் அவ்வளவும் தொல்காப்பியப் பேராற்றிலிருந்து பிரிந்து நிற்கும் சிற்றோடைகள்தாம்.

இந்தத் தொல் இலக்கணம், தொல்காப்பியம் என்று பெயர் பெற்றது ஏன்? எவர்க்கும் இந்த ஐயம் தோன்றுவது இயல்புதான். தொல்காப்பியர் என்பவரால் செய்யப்பட்ட நூல் அது. ஆகையால் அதைச் செய்த ஆசிரியர் பெயரையே அந்த நூலுக்குப் பெயராக வைத்துவிட்டனர். இவ்வாறு ஆக்கியோன் பெயரையே நூலுக்குப் பெயராக அமைப்பது பழய வழக்கம். இவ்வழக்கம் எல்லா மொழிகளிலும் உண்டு.

சேரர்குடி, சோழர்குடி, பாண்டியர்குடி என்பது போலக் காப்பியக்குடி என்பதும் ஒரு பழமையான தமிழ்ப் பரம்பரை. காப்பியனார் என்ற மற்றொரு புலவரும் உண்டு. இவர் காப்பியாறு என்ற ஊரிலே, காப்பியர் குடியிலே பிறந்

தவர். ஆதலால் காப்பியாற்றுக் காப்பியனுர் என்று பெயர் பெற்ருர். இவர் பதிற்றுப்பத்திலே நாலாம் பத்தைப் பாடி யவர். சேககிழார் எனபதும் குடிப் பெயர். பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் குடியிலே பிறந்தவர். பிறந்த குடி யைப் பெயராக வைத்து அழைப்பதற்கு இவைகள உதாரணம். ஆகையால் தொன்மையான காப்பியக் குடி யில் தோன்றிய ஒரு பெருந்தமிழ்ப் புலவரைத தொல்காப பியர் எனற பெயரால அழைத்தனா.

தொன்மை—பழமை தொல்காபபியரால் ஆக்கப் பட்ட அருநதமிழ் இலககணம் தொல்காப்பியம்.

ஆசிரியர்

தொல்காப்பியரைப பற்றிப் பிற்காலத்தா வேறு பல கதைகள் தொடுத்து விட்டனா.

ஜமதக்கினி முனிவரின் புதல்வர் தொலகாப்பியர். அவர் பெயர் திரணதூமாக்கினி முனிவர். இந்தத் திரண தூமாக்கினி முனிவரும பரசு ராமரும் உடன பிறந் தவர்கள்.

அகததியர் என்னும் முனிவா சிவபெருமானிடம் தமிழ் கற்றவர். அந்த அகத்தியருக்குப் பன்னிருமாணவர்கள். அவர்களிலே இந்தத திரணதூமாகனி முனிவராகிய தொல்காப்பியரும் ஒருவர். இது ஒரு கதை. இக் கதையி லிருந்து முளைத்த கிளைக் கதை ஒன்றுண்டு.

சிவபெருமானுக்குத திருமணம. அதுபோது தேவர் களெல்லாம் இமயத்திலே ஒன்று கூடினர். இதனுல் வட திசை தாழ்ந்தது. தெனதிசை உயர்ந்தது. இந்த உயர்வு தாழ்வைச சரிப்படுதத அகததியரைத தெனறிசைக்குச் செல்லும்படி தேவர்கள் வேண்டிக்கொண்டனர். அவரும் தென்றிசைககுப் புறப்பட்டார். புறப்படும்போது கங்கை யாரிடம சென்று காவிரியாரை வாஙகிக கொண்டார்.

பின்னர் ஜமதக்கினியாரிடம் சென்று அவர் மகனார் திரண தூமாக்கினியாரை வாங்கிக் கொண்டார். பிறகு புலத்தியனாரிடம் சென்று உலோபாமுத்திரையாரைத் தனக்கு மனைவியாக ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர் துவராபதிக்கு வந்து நிலங்கடந்த நெடுமுடி யண்ணலின் வழியிலே வந்த பதினெட்டு அரசர்களையும், பதினெட்டுக் கோடி வேளிர்களையும், அருவாளரையும் அழைத்துக் கொண்டு தென்றிசைக்கு வந்தார். காடுகளை அழித்து நாடாக்கிப் பொதிகை மலையிலே தங்கினார். இராவணனை இசையால் வசமாக்கி அவனையும் அரக்கர்களையும் அங்கு நடமாடாமல் செய்தார்.

பிறகு அகத்தியர் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரைப் பார்த்து "நீ சென்று குமரியாரைக் கொண்டு வருக" என்று கூறினார். அவர் "எம்பெருமாட்டியை எங்ஙனம் கொண்டு வருவது" என்று கேட்டார். "முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகல நின்று அழைத்து வருக" என்றார். திரணதூமாக்கினியாரும் குமரியாரை இவ்வாறு அழைத்து வரும்போது வையையிலே வெள்ளம் பெருகிறது. வெள்ளம் குமரியாரை இழுத்துக் கொண்டு போயிற்று. திரணதூமாக்கினியார் ஒரு மூங்கிற் கோலை முறித்துக் குமரியாரிடம் நீட்டினார். குமரியார் அக்கோலைப் பற்றிக் கரையேறினார்.

இச்செய்கையைத் தன் கட்டளையை மீறிய கடுங் குற்றமென்று கருதினார் அகத்தியனார். "நீங்கள் சுவர்க்கம் புக மாட்டீர்கள்" என்று திரணதூமாக்கினியாரையும், குமரியாரையும் சபித்தார் அவர். "நாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை. எங்களைச் சபித்தீர். எம்பெருமானும் சுவர்க்கம் புகமாட்டீர்கள்" என்று திரணதூமாக்கினியாரும் உடனே சபித்தார்.

இது தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரையிலே உரையாசிரியர் நச்சினார்க்கினியர் நுழைத்திருக்கும் கதை

இக்கதைகள் எல்லாம் ஆதார மற்ற வெறும் கட்டுக் கதைகள். இந்தக் கதைகள் உண்மையாக இருக்குமானால் தொல்காப்பியத்தின் பெயர் வேறாக இருந்திருக்கும். **தொல் லிணக்கணம்** அல்லது **திரணதூமாக்கினீயம்** என்ற பெயர் களில் ஒன்றுதான ஏற்பட்டிருக்கும். இப்பெயர் ஏற்படாத தைக் கொண்டே மேலே காட்டிய கதைகள் பொருத்த மற்ற புனைந்துரைகள் என்று அறியலாம்.

தொல்காப்பியர் தமிழ் நாட்டிலே, தமிழ்ப் பழங்குடியிலே தோன்றிய ஒரு சிறந்த தமிழர். பழமையான காப்பியக்குடி என்னும் தமிழர் பரம்பரையிலே பிறந்தவர். இதனால் தொல்காப்பியனார் என்ற பெயர் பெற்றார். அவர் பழந்தமிழ் நூல்களையும் வடமொழி நூல்களையும் கற்றறிந்த சிறந்த தமிழ்ப்புலவர். அவரால் இயற்றப்பட்ட அரிய தமிழிலக்கணமே தொல்காப்பியம். இதுதான் தொல்காப்பிய ஆசிரியரைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மைச் செய்தியாகும்.

2. தொல்காப்பிய காலம்

தொலகாப்பியம் எப்பொழுது தோன்றியது? அது தோன்றி எத்தனை ஆண்டுகள் இருக்கலாம? இன்ன ஆண்டில்தான தொல்காப்பியம் தோன்றியதெனறு திட்டமாக வரையறுததுச சொலல முடியாது. இந்தனை ஆண்டு களுக்கு முன்னே தோன்றி யிருக்கலாம் என்று ஒரு உத்தேசமாகத்தான் உரைக்க முடியும்.

தொல்காபபியம் தோன்றிய காலத்தைப பறறிக் கருத்து வேறுபாடுகள் பலவுண்டு. ஆண்டிலே முற்பட்டதென்று கூறுவோர் பலர்; பிற்பட்டதென்று கூறுவோர் சிலர்.

1. வேத வியாசர் காலத்திற்கு முன்னே தொல் காபபியம் செய்யபபட்டது. இன்றுள்ள இருக்கு, எசுா, சாமம், அதர்வணம் என்ற நானகு வேதஙகளும் எழுதப் படுவதற்கு முன்னே தொல்காப்பியம் எழுதபபட்டது.

தொலகாப்பியத்தில் குறிக்கப்படும் வேதஙகள் இப் பொழுதுள்ள இருககு, எசுர், சாமம், அதர்வண வேதங் கள அலல. இவ்வாறு நான்காக வகுத்தெழுதியவர் வேத வியாசா. வேத வியாசருக்கு முன்னிருந்த நான்கு வேதங் கள் தைததிரியம், பௌடிகம், தலவகாரம், சாமம் என்பன. இந்த நானகு வேதங்களையே தொல்காப்பியனுர் கற்றவர்.

இதனைத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில் உள்ள நான்மறை என்ற தொடருக்கு நச்சினுர்க்கினியர் எழுதியிருக்கும உரையினுல் உணர்ந்து கொள்ளலாம்.

ஆகவே "இன்றுள்ள நானகு வேதங்களுக்கும முற்பட்டது தொல்காப்பியம்" என்பது உரையாசிரியர் நச்சினுர்க்கினியரின் கருத்து.

2. முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்என்ற மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன. இந்த முத்தமிழ்ச் சங்க வரலாற்றை இறையனார் அகப்பொருள் உரையிலே காணலாம். அந்த வரலாற்றைக் கொண்டு கணக்கிட்டால் ஏறக்குறைய 7300 ஆண்டுகளுக்கு முன்னே தோன்றியது தொல்காப்பியம் என்று முடிவு கட்டலாம்.

தொல்காப்பியம் இடைச்சங்ககாலத்து இலக்கணம். இடைச்சங்கம் 3700 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது. கடைச் சங்கம் 1850 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரையிலும் கடைச்சங்கம் நின்று நிலவியதாக நம்புகின்றனர். முச் சங்க வரலாறு உண்மையென்று ஒப்புக் கொள்ளப் பட்டால், இந்தக் கணக்கின்படி தொல்காப்பியம் தோன்றிய காலம் 7300 ஆண்டுகளுக்கு முன்பு என்றே முடிவு செய்யப்படும்.

3. தொல்காப்பியம் 5000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்று கூறுவோர் உள்ளனர்.

தமிழ் நாட்டின் பருவ காலத்தை ஆறாக வகுத்துக் கூறினர் முன்னோர். அவை கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் என்பன. ஆவணியும், புரட்டாசியும் கார்காலம். ஐப்பசியும், கார்த்திகையும் கூதிர்காலம். மார்கழியும், தையும் முன்பனிக்காலம். மாசியும், பங்குனியும் பின்பனிக்காலம். சித்திரையும், வைகாசியும் இளவேனிற்காலம். ஆனியும், ஆடியும் முதுவேனிற் காலம். கூதிர்—குளிர்: வேனில்—கோடை.

தொல்காப்பியர் கார்காலத்தையே முதலில் கூறியுள்ளார். இதனை

காரும் மாலையும் முல்லை: குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்.

(தொல். பொருள் அகம். 6.)

என்ற சூத்திரத்தால் காணலாம். "ஆவணி, புரட்டாசி மாதங்களாகிய கார்காலமும், மாலைக்காலமும் முல்லை நிலத்திற்குரிய பொழுதாகும். ஐப்பசி, கார்த்திகை மாதங்களாகிய குளிர்காலமும், யாமம் என்னும் நடுவிரவும் குறிஞ்சி நிலத்திற்குரிய பொழுதாகும."

ஒரு காலத்திலே ஆண்டின் முதல் மாதம ஆவணியாகவும். இறுதிமாதம ஆடியாகவும் வைதது எண்ணப்பட்டு வந்தது. இதனை

"காலவுரிமை யெய்திய ஞாயிற்றுக்குரிய சிங்கவோரை முதலாகத், தண்மதிக்குரிய கற்கடகவோரையீருகவந்து முடியுந்துணை ஓர் யாண்டாமாதலின், அதனை இம்முறையானே அறுவகைப் படுத்து, இரண்டு திங்கள் ஒருகால மாக்கினர்."

எனறு நச்சினாக்கினியர் மேலே காட்டிய சூததிரத்தின் உரையிலே குறிப்பிட்டுள்ளார். சிங்கஓரை—ஆவணி மாதம. கற்கடகஓரை—ஆடிமாதம்.

பிற்காலததிலேதான் சித்திரையை முதல் மாதமாக வைத்து எண்ணினர். ஆவணி, ஆண்டின் முதல் மாதமாக இருந்த காலம் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னுகுமாம். இவ்வாறு வான நூல் ஆராய்சசியாளர் கூறுகின்றனர்.

தொல்காப்பியத்தில் கார்காலம் முதலில் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால் இந்நூல் ஆவணிமாதத்தை ஆண்டின் முதல் மாதமாக வழங்கிய காலத்தில் எழுப்பட்டிருக்க வேண்டும். இதுவே தொல்காப்பியம் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்போர் காட்டும் காரணமாகும்.

4. மககள், இரும்பு பொன முதலிய உலோக வகைகளைக் கண்டு பிடித்தகாலம் கி.மு. ஐயாயிரத்திற்குப் பின் எனபர். தொல்காபபியத்திலே உலோகஙகள் குறிப் பிடபபட்டுள்ளன. ஆதலால் அதன்காலம் கி. மு. ஐயாயி ரத்திற்குப் பிற்பட்டதுதான எனபதில் ஐயமில்லை என்பர்

5. தொல்காப்பிய காலம் 2400 ஆண்டுகளுக்கு முனனெனறு மொழிவோரும் உளளனர். இவர்கள் காட்டும் காரணஙகளைக காண்போம.

"ஐந்திரம நிறைந்த தொல்காப்பியன" என்ற சொற் றொடர் தொல்காபபியச் சிறப்புப்பாயிரததிலே காணப்படு கினறது. "ஐந்திரம எனற இலககண நூலறிவு நிரம்பிய தொல்காப்பியன" எனபதே இதன பொருள். ஐந்திரம் என்பது இந்திரனால் இயற்றப்பட்ட ஓர் இலக்கணம். தமிழிலே இப்பெயர்கொண்ட ஓர் இலக்கணம இருந்த தாக எண்ண இடமில்லை. இப்பெயர் கொணட இலக் கணம் வடமொழியிலே இருநதிருக்கலாம்.

பாணினி இலககணம் தோன்றுவதற்கு முன் இந்த ஐநதிரம் வடமொழியில இருந்திருக்க வேண்டும். பாணினிக்கு முன்னே இதுவே வட மொழியிலக்கணமாக இருந்திருக்கலாம்.

பாணினி இலக்கணததிற்கு முன்னேயிருந்த ஐந்திர இலக்கணத்தைப் படித்தவர் தொல்காபபியர். ஆகவே தொல்காப்பியர் பாணினி காலத்திற்கு முனனே வாழ்ந்தவா. பாணினியின் காலம் கி. மு. நான்காம் நூற் றுண்டு. தொல்காப்பியர் கி. மு. நானகாம் நூற்றுண்டுக்கு முனனிருந்தவர்.

இந்தக கணககு உண்மையானுல் தொல்காப்பியம் 2400 ஆண்டுகளுககு முன்னே தோனறியதாகும்.

6. தொல்காப்பியம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் தான் தோன்றியது; 1800 ஆட்டுகளுக்கு முன் தோன்றிய நூல்தான் தொல்காப்பியம்; இதற்கு ஆதரவு உண்டு; என்போரும் உள்ளனர். இவ்வாறு கூறுவோர் சிறுபான்மையினர்.

7. எந்த வகையில் பார்த்தாலும், தொல்காப்பியம் கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும். ஆகையால் நாலாயிரம ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலேயன்றிப் பிற்பட்ட நூல் அன்று என்போர் பலர். இது தொல்காப்பியர் காலத்தைக் கணக்கிடும், பலராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றதோர் முடிவு.

தொல்காப்பியர் காலததைக கணக்கிடும் இவவாராய்ச்சிகளில் எது பொய்? எது மெய்? என்ற கவலை நமக்கு வேண்டாம். தமிழிலே இன்றுள்ள நூல்களிலே தொல்காப்பியந்தான் பழமையான நூல். இதற்கு முற்பட்டநூல் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை, இதுமட்டும் எவராலும் மறுக்கமுடியாத உண்மை. தமிழ நூல் ஆராய்ச்சியாளர் அனைவராலும் ஒருமனதாக ஒபபுக்கொள்ளும் முடிவு.

3. தொல்காப்பியம் முதல் நூலா?

தொல்காப்பியம முதல் நூலா? வழிநூலா? வழி நூலாஞல் எந்த நூலைப் பின்பற்றி எழுதப்பட்டது?

"தொல்காப்பியம் முதல் நூல அன்று. வழிநூல்தான். ஐந்திரம் எனபது இந்திரஞல் செய்யபட்டதோர் இலக்கணம். இத்தகைய இலக்கணம் இனறு வடமொழியிலும் இல்லை; தமிழிலும் இல்லை. இது தமிழிலோ வடமொழியிலோ இருந்து மறைந்துபோன ஒரு இலக்கணமாக இருக்கலாம். "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்று தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திலே கூறப்படுகினறது. இநத ஐந்திரததை அடிப்படையாகக கொண்டு எழுதப் பட்டதே தொல்காப்பியம்" இவ்வாறு கூறுவோர் உண்டு. இக் கொள்கைக்குத் தொல்காப்பியச சிறப்புப்பாயிரத்தைத் தவிர வேறு ஆதரவில்லை. ஆயினும் இக்கூற்று தொல் காபபியம் வழி நூலே என்பதை மெய்ப்பிக்கும்.

அகத்திய முனிவரால் செய்யபபட்ட நூல் அகத்தியம். அது இயல, இசை, நாடகம் என்னும முத்தமிழுக்கும இலககணம் கூறப்பட்ட முழு முதல்நூல், இந்த அகத்தியமே தொலகாபபியத்திற்கு முதலநூல்.

"ஆஞப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதல்நூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப்பியனும்"

"அழியாத பெருமையுடைய அகத்தியன என்னும் அருந்தவ முனிவஞல் ஆக்கப்பட்டது. அகத்தியம் எனனும் முதல்நூல். அதனை நன்ருகக் கற்றுக் குற்றமற அதன்

பொருளை அறிந்தோருள் நல்ல புகழை நிலை நாட்டிய தொல்காப்பியனும "

இது பன்னிரு படலததின் பாயிரச் சூத்திரம். இதில அகத்தியததைக் கற்றவருள்ளே தொல்காப்பியா சிறந்தவர் என்பதைக் காணலாம்.

முதற் சங்கததார்க்கு இலக்கணம அகத்தியமே.

இடைச் சங்கததார்க்கு அகத்தியமும, தொலகாப்பி யமும இலககண நூல்கள்.

கடைச் சங்கத்தார்க்கும் அகததியமும் தொலகாப்பி யமுமே இலக்கண நூலகள்.

அகததியம தமிழ் நூல் என்பதில் ஐயம இலலை. அது இலக்கண நூல்தான் என்பதும் எல்லோராலும் ஒப்புக் கொள்ளும் முடிவு.

அகத்தியம பேரகத்தியம் சிற்றகததியம என இரு வகைப்படும் என்று கூறுவர் சிலர். பேரகததியம் முதல் நூலாக இருக்கலாம். சிற்றகத்தியம் அதன சுருக்கமாக இருக்கலாம்.

ஆகவே தொலகாபபியம, தமிழ முதல் நூலாகிய அகத் தியம் என்னும் இலக்கணத்தின் வழிநூலாகத்தான இருக்க வேண்டும். இதுவும் தொலகாப்பியம் வழிநூல் என் பதையே மெய்ப்பிக்கின்றது.

முதறசங்கம், இடைச்சங்கம், கடைசசங்கம் மூனறு காலங்களிலும நினறு நிலவியது அகத்தியம். இனறு அது நமக்குக் கிடைக்கவில்லை. அகத்தியம் என்ற பெயரில் சில சூத்திரங்களே காணப்படுகின்றன.

இலக்கியமே முதலில் தோனறியது. இலக்கியம் பிறந்த பின்னர்தான் இலககணம் பிறநதது. தொல் காப்பியம் இலக்கண நூல்தான். அகத்தியமும், தொல்

காப்பியமும் அவைகளுக்கு முன்னிருந்த இலக்கியங்களை வைத்துக் கொண்டு எழுதப்பட்ட இலக்கணங்கள் தாம்..

தொலகாப்பியர் தனக்கு முனனிருந்த இலக்கணங களையும், இலக்கியங்களையும் ஆராய்ந்தவர். அவைகளை வைத்துக்கொண்டே தனது இலககணததை எதினார். அவர் தமிழ்ப புலமையோடு வடமொழியறிவும வாய்ந்தவர் எனபதில் ஐயம் இல்லை. வட சொறகளும், வேதத்தைப பற்றிய குறிப்பும தொல்காப்பியததிலே காணப்படு கினறன. இதைப் பினனர் விளக்கிக் கூறுவோம்,

' என்மனார் புலவர்;
'' என்ப வாய் மொழிப் புலவர்;
மொழிப யாப்பறிபுலவர்;
என்ப சிறந்திசினோர்''

என்பவை போன்ற சொற்றொடர்களும், ''என்ப, மொழிப'' என்பவை போனற சொற்களும் தொல்காப்பியச் சூத்தி ரங்களிலே காணப்படுகின்றன. ''முன்னைய நூலாசிரியர் கள் இவவாறு கூறுவார்கள'' என்பதே இந்தச் சொற் றொடர்களுக்கும், சொற்களுக்கும பொருள்.

தொலகாப்பியர் தனக்கு முன்னிருந்த இலக்கண, இலக்கிய ஆசிரியர்களின் கொளகைகளையே தனது நூலில் தொகுத்து எழுதியிருக்கிறா என்பதை இதனால் அறியலாம். ஆகவே தொல்காபபியம முதல்நூல் அல்ல. வழிநூலதான் இதறகு முதல்நூல் அகத்தியமாகததான் இருககவேணடும்.

4. தொல்காப்பிய அமைப்பு

ஐவகை இலக்கணம்

தமிழ் இலக்கணம் ஐவகைப்படும் என்பது பிற்காலத் தினர் கொள்கை. எழுத்திலக்கணம், சொலவிலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்பன அவை.

இந்த ஐவகை முறையைப் பின் பற்றியே பிற்காலத் தில் இலககண நூல்கள எழுதப்பட்டன. நன்னூல், நமபியகப்பொருள், புறப்பொருள் வெணபா மாலை, யாப் பருங்கலக்காரிகை, தணடியலங்காரம இவைகள பிற்கா லத்தினரால் ஆரம்பத்தில் படிககப்படும ஐவகை இலக் கணங்கள்.

நனனூலில் எழுததிலக்கணமும், சொல்லிலககண முமே நவிலப்படுகின்றன. நமபியகப் பொருள் எனபது பொருள இலககணத்தின ஒரு பகுதியான அகப்பொரு ளைப் பற்றி மட்டும் கூறுகின்றது. அகப்பொருளை மட்டும் கூறும் இறையனார்அகப்பொருள என்ற இன்னொரு நூலும் உணடு. புறப்பொருள்வெண்பா மாலை எனபது பொருள் இலக்கணத்தின் மற்றொரு பகுதியான புறப்பொருளைப் பற்றி மட்டும் கூறுவது. யாப்பருங்கலககாரிகை எனபது செய்யுள் இலக்கணததைப் பற்றி மட்டும் சொல்வது. தணடியலங்காரம எனபது அணியிலக்கணத்தைப பற்றி மட்டும் அறிவிப்பது. யாப்பருங்கலம் என்ற பொருடன் மற்றொரு செய்யுள் இலககண நூலும உண்டு.

இவவாறு, எழுதது, சொல, பொருள், யாப்பு அணி களைப்பற்றிப் பிற்காலத்தார தனிததனி யிலககணங்களை

எழுதிவைத்தனர். இத்தகைய தனித்தனி யிலக்கணங்கள் எழுதப்பட்ட பிறகுதான் "தமிழ் இலக்கணம் ஐவகைப் படும். அவை எழுத்துச் சொற்பொருள் யாப்பணி" என்று கூறும் கொள்கை வழக்கத்தில் வந்திருக்க வேண்டும்.

மூவகையிலக்கணம்

தொல்காப்பியர் தமிழ் இலக்கணத்தை மூன்று பிரிவாகவே பிரித்தார். அந்த முப்பிரிவைக் கொண்டதே தொல்காப்பியம். எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் என்பவை தாம் அம் முப்பிரிவுகள்.

எழுத்துக்களைப் பற்றி இயம்புவது எழுத்திலக்கணம். அந்த எழுத்துக்களால் ஆகிய சொற்களைப் பற்றிக் கூறுவது சொல்லிலக்கணம். அந்தச் சொற்களில் அடங்கி யுள்ள பொருள்களைப் பற்றிக் கூறுவது பொருள் இலக்கணம்.

பொருள் இலக்கணம் என்பதிலே செய்யுள் இலக்கணமும், அணியிலக்கணமும் அடங்கியிருக்கின்றன. பொருளும் அணியும் அடங்கி யிருப்பதே செய்யுள். எந்தப் பாடலை எடுத்துக்கொண்டாலும் அதில் அடங்கியிருக்கும் பொருள், அகப்பொருள் தழுவியதாக இருக்கும். அல்லது, புறப்பொருள் தழுவியதாக இருக்கும். அதில் அணியும் அமைந்திருக்கும். அணி—அழகு.

அணியும் பொருளும் அமைந்ததே பாட்டு. அணியும் பொருளும் இல்லாவிட்டால் அது பாடலாகாது. ஏதேனும் ஒரு பொருளைப் பற்றிப் புகல்வதற்குத் தான் பாட்டு எழுதப்படும். அந்தப் பொருள் அகப்பொருளாகவோ, புறப்பொருளாகவோ தான் இருக்கும். அகப்பொருள் தழுவிய காதற்பாடல்களையும், புறப்பொருள் தழுவிய அரசியல், வாணிகம், அறிவுரை போன்ற செய்திகளைப் பற்றியுமே முன்னோர்கள் செய்யுட்களையும் நூல்களையும் செய்து வந்தனர். இந்தப் பாடல்களுடன், ஆடையும்

இழையும் ஒன்றாக அமைந்திருப்பதுபோல் அணியும் பொருந்தியிருக்கும். ஆகையால் தான யாப்பையும், அணியையும், பொருளையும், ஒன்றாகக் கருதியே அதறகுப பொருள் இலக்கணம என்று பெயர் வைத்தார் தொல்காப்பியர்.

தொலகாப்பியத்திலே எழுத்ததிகாரம, சொலலதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பகுதி உண்டு. பிற் காலத்திலே தோனறிய **இலக்கண விளககம்** எனனுமநூல் தொலகாப்பியத்தைப் பின் பற்றி எழுதப்பட்டது; எழுத் ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனற மூன்று பகுதிகளையுடையதே இலககண விளககம். இதனைக் " குட்டித் தொலகாபபியம் " எனறு கூறுவர்.

தொல்காப்பியம எழுததிகாரத்தில ஒன்பது இயல கள் உண்டு. இவை எழுததிலககணத்தை ஒன்பது வகையாகப் பிரிததுக் கூறுகினறன. சொல்லதிகாரமும் ஒனபது இயலகளைக கொணடது. இந்த ஒன்பது இயல் களும் சொலலிலக்கணத்தை ஒன்பது வகையாகப பிரித் துச்சொலலுகின்றன. பொருளதிகாரத்திலும ஒனபது இயல் கள் உணடு. பொருளைப் பற்றிக் கூறுவதற்கான இலக கணததை இநத ஒனபது இயலகளும உரைக்கின்றன.

ஆகவே தொலகாப்பியம் மூன்று அதிகாரங்களைக கொணடது. ஒவ்வொரு அதிகாரததிலும ஒனபது ஒன்பது இயலகள் உணடு.

தவறான கொள்கைகள்

பண்டைததமிழர் நாகரிகம் பற்றி இன்று பலர் எழுது கின்றனர்; பேசுகின்றனர். பண்டைத்தமிழர் நாகரிகத்தைப் பற்றித் தெரிநது கொள்ள வேண்டும எனற முயற்சியிலே இன்று இளைஞர் பலர் ஈடுபட்டிருக்கின்றனர்.

பண்டைத் தமிழர் பண்பாட்டைப் பற்றிக் கூறுவோர்க்குள் கருநது வேறறுமைகள் காணப்படுகினறன. இக கருதது வேற்றமை யுடையவர்களை இருவகையினராகப பிரிககலாம.

"பண்டைத் தமிழர்க்குத் தனி நாகரிகம் இல்லை. அவர்களைத் திருத்தி நாகரிகமுடைய மக்களாக வாழச் செய்தவர்கள வடக்கிலிருந்து தெற்கே வந்த ஆரிய முனிவர்களும், அறிஞர்களுமே"

என்றுரைபபர் ஒரு சிலர். தொலகாப்பியப் பொருளதிகார ஆராய்சசியை எழுதிய பெரும புலவர் மு. ராகவய்யங்கார் அவர்கள் இக் கருததை வெளியிட்டிருக்கின்றார்.

"உலகிலே தமிழர் நாகரிகமே மிகப் பழமையானது. தலை சிறந்தது. நாம இக்காலத்தில் என்னென்ன வேண்டும் என்று நினைக்கின்றோமோ இவைகள் எல்லாம் பண்டைத் தமிழர் நாகரிகத்திலே படிந்து கிடந்தன. பழந்தமிழர்கள சாதி வேற்றுமை பாராட்டாதவர்கள். கடவுள் நம்பிக்கை அற்றவர்கள். மூடப்பழக்க வழக்கங்களை அறியாதவர்கள். ஏழை பணக்காரன் என்ற வேற்றுமை யில்லாதவர்கள். ஆணுக்குப் பெண் அடிமையென்ற கொள்கை அவர்களிடம் இருந்ததில்லை. ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த பின்னர் தான் தமிழர் நாகரிகம் சிதைந்தது. அவர்கள் தமிழகத்தில் குடிபுகுந்த பின்னர் தான்தமிழர் நாகரிகமே தலைகீழாகப்புரண்டு விட்டது.பல தெய்வவணக்கம், விக்கிரகவணக்கம், மூடநம்பிக்கைகள் மூடநம்பிக்கையை நிலைநாட்டும் சடங்குகள் எல்லாம் ஆரியர்களால் நுழைக்கப் பட்டவை"

என்று இவ்வாறு சொல்லுகின்றனர்; எழுதுகின்றனர்; மற்றொரு பிரிவினர். இநத இரு பிரிவினரும் எடுததுக் கூறுகின்றவைகளிலே உண்மை எவை? பொய்மை எவை? இவைகளைக் கணடறியவேண்டும்.

தொல்காப்பிய காலத்திலும், அதற்கு முன்னும் தமிழர்களின் வாழ்வு எவ்வாறு தழைத்திருந்தது? அவர்களிடையிலே படிந்திருந்த பழக்க வழக்கங்கள் யாவை? அவர்களுடைய அரசியல வாழ்வும், சமுதாய வாழ்வும் எத்தகைய நிலையிலிருநதன? இந்த உண்மைகளை நாம் தெரிந்து கொண்டால் போதும். தமிழர் நாகரிகததைப் பறறி—திராவிடர் நாகரிகத்தைப பற்றி—ஆரியர் நாகரிகத தைப் பற்றி இன்று தலை விரிததாடும் ஆராய்ச்சிகளின் உண்மைகளை அறிந்து கொள்ளலாம். இவைகளை அறிந்து கொள்ளுவதன் மூலம இன்று தமிழரிடையிலே வளர்ந்து வரும் இன-மொழி—கலை வெறுப்புணர்ச்சிகள் வீழ்ந்து அனபும நண்பும கூட்டுறவும் வளர வழியுண்டாகும்.

இந்த உண்மைகளை உணர்ந்து கொள்வதற்குத் தொல காப்பியத்தின் மூன்றும் பகுதியான பொருளதிகாரமே பெரிதும துணை செய்வதாகும். ஆகையால் எததகைய விருப்பு வெறுப்பும் இன்றி அதனை ஆராய்வது தமிழர் கடமையாகும்.

5. மக்கள் வாழ்வும் ஒழுக்கமும்

மக்கள் வாழ்வு . அகவாழ்வு புறவாழ்வு என இரு வகைப்படும். இவ்வாறு இரண்டாகப் பகுத்துரைப்பதே தமிழ் நூல் முறை. அகவாழ்வைப் பற்றிக் கூறுவதே அகத்திணை; அல்லது அகப்பொருள்; புறவாழ்வைப்பற்றிப் புகல்வதே புறத்திணை ; அலலது புறப்பொருள்.

ஆணும் பெண்ணும் அன்போடு ஒன்று பட்டுக் கூடி வாழும் காதல வாழவே அகவாழ்வாகும். ஒரு ஆணும பெணணும இணைந்து வாழ்வதில் ஏற்படும் இன்பத்தை எவராலும வெளிப்படையாக எடுத்துரைக்க முடியாது. அது அவர்கள உள்ளத்தால் உணரும் ஒப்பற்ற இன்பமாகும். இவவாறு அகத்திலே நிகழும் இன்பத்தையே அகத்திணை என்றனர். திணை — ஒழுக்கம். அகத்திலே நிகழும் ஒழுககம் அகத்திணை. அகம் — மனம்.

அரசாட்சி, போராட்டம், விவசாயம், வாணிகம், மறற தொழில்கள் எல்லாம் புறததிலே நிகழ்வன. இவைகளைப்பற்றியும், இவைகள் எப்படி நடைபெறவேண்டும எனற வழிதுறைகளைப் பற்றியும் வாயினாற் சொல்ல முடியும். ஒவ்வொருவரும் இவற்றைப் பற்றிப் புறத்தார் உணரும்படி உரைக்க முடியும். இவ்வாறு எல்லோரும் அறியுமபடி சொல்லவும் செய்யவும் கூடிய செய்திகள் எல்லாம் புறப்பொருளாகும். புறத்திலே நிகழும ஒழுக்கம் புறத்திணை.

தமிழிலே உள்ள நூலகள் எல்லாம் இருவகைப்படும். அவை அகப்பொருள் நூல, புறப்பொருள் நூல் என்பன. உலகிலே உளள எல்லா இலககியஙகளும் இந்த இரண்டு

வகையுள் அடங்கிவிடும். காதல் வாழ்வைப்பற்றிக் கூறும் நூலகள் அகப் பொருள் நூல்கள். அரசியல்நூல், பொருளாதார நூல், நிலநூல், வரலாற்றுநூல், விஞ்ஞானநூல், கணக்கு நூல், சிற்ப நூல், மருத்துவநூல் போன்ற பல வகைக் கலைகளும் புறப்பொருள் நூல்கள். மக்கள் வாழ்க்கையும் அகத்திணை வாழ்வு, புறததிணை வாழ்வு என்ற இந்த இரண்டினுள் அடங்கி விடும்.

தொல்காபபியப் பொருளதிகாரம அகத்திணை இலக்கணத்தையும், புறத்திணை இலக்கணததையுமே விரித்துரைககின்றது.

அகவாழ்வு

கைக்கிளைத்திணை, குறிஞ்சித திணை, பாலைத திணை, முல்லைததிணை, மருததத்திணை, நெய்தல்திணை, பெருந்திணை என்று அகத்திணை ஏழுவகைப்படும்.

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப

(தொ. பொ. அக. 1)

"கைககிளைததிணை முதல பெருந்திணை இறுதியாக உள்ள முன்னே சொலலபபட்ட ஏழு திணைகளையே அகததிணையென்று சொல்லுவார்கள்" தொலகாப்பியருக்கு முன்னிருந்த தமிழர்கள் தங்கள் அகவாழ்வை வகுத்துக்கொண்ட முறையிதுவாகும் இந்த ஏழுவகைத திணையில் தமிழரின் காதல் வாழ்வு—குடுமப வாழ்வு அடங்கும்.

கைக்கிளை யெனபது ஒரு தலைக் காமம். அதாவது ஆண்பெண் இருவருள் ஒருவரிடம மட்டும் காதல் உணர்வு தோன்றுவது. காதல உணர்ச்சி கொண்ட ஒருவன் பருவமடையாத இளம்பெண் ஒருத்தியிடம் காதல் கொள்ளுவது. இதுவே கைக்கிளைத் திணையாகும். இதனல் பருவமடையாத பெண்களை மணந்துகொள்ளும்

வழக்கமும பண்டைத் தமிழகத்தில் இருந்ததென்று கொள்ளலாம்.

பெருந்திணை யென்பது பொருந்தாக காமம். பிறர் பழிக்கும வகையிலே கணவனும் மனைவியும் காம வெறி கொண்டு வாழ்தல். இந்தககைககிளை, பெருந்திணைகளைப் பறறிச கருககமாகவே கூறபபடடுள்ளது. ஆதலால் இந்த இரு திணைகளும தொல்காபபிய காலத் தமிழர்களால் அவவளவாகப் பாராட்டப்படவிலலை யென்பதை அறியலாம்.

குறிஞசி, பாலை, முல்லை, மருதம், நெயதல என்ற ஒழுககங்கள அந்தநத நிலங்களிலே நடைபெறுவன. இவைகளைப போலக கைககிளைததிணைககும, பெருந் திணைக்கும் தனித்தனி நிலங்கள் குறிக்கப்படவில்லை. இதுவும் குறிப்பிடத தக்கதாகும்.

குறிஞ்சித்திணை; குறிஞ்சி நிலத்திலே நிகழும ஒழுக் கத்தைப்பற்றி உரைபபது. மக்கள் வாழும் மலையும், மலைச் சாரலும் குறிஞசி நிலம. சேயோன் என்பவன குறிஞ்சிநிலத்தின தெயவம். சேயோனை முருகனஎனபர். 'சேயோனமேயமைவரை உலகமும் (தொ. பொ. அக. 5) என்பது தொல்காப்பியம.

கண்ணுககினிய காட்சிகள் நிறைந்த மலையிலோ, மலைச் சாரலிலோதான் முதலில் காதலன் காதலிகளின் சநதிப்பு ஏற்படும்; இருவரும் ஒருமனப்பட்டுக் கணவன் மனைவிகளாய் இணைநது வாழ்வார்கள். இவர்களுடைய சந்திப்பைப் பற்றியும், இதற்கான காரணஙகளைப் பற்றியும் எடுத்துரைப்பதே குறிஞ்சித்திணை. குறிஞ்சி யொழுக்கம், தம்பதிபதிகளாதல்.

பாலைத்திணை; பாலை நிலத்திலே நிகழும் ஒழுக்கத்தைப் பற்றி உரைப்பது பாலைததிணை. நீரற்று வறண்டுபோன

நிலப்பகுதியே பாலைநிலம். தொல்காப்பியர் பாலைக்குத் தனி நிலம் குறிககவில்லை. முல்லையிலும் பாலை தோன்றலாம்; குறிஞ்சியிலும் பாலை தோனறலாம்; மருதத்திலும் பாலை தோன்றலாம; நெய்தலிலும் பாலைத் தோன்றலாம்; வானம் பொயத்து வறண்டுபோன எந்த நிலத்திலும பாலை தோன்றும். பாலைகருத் தனித் தெய்வமும கூறப்பட விலலை. எந்த நிலத்தில் பாலை தோன்றுகிறதோ அந்த நிலத்துத தெய்வமே பாலைக்கும் தெய்வமாகும்.

காதலன தன காதலியை விட்டுப் பிரிநது செலலு வதைப்பற்றிச சொலலுவதும், பிரிவதறகான காரணங் களைச் சொல்லுவதும் பாலைததிணை. பாலைத்திணையின் ஒழுக்கம் பிரிவாகும்.

முல்லைத்திணை; முல்லை நிலத்திலே நிகழும் ஒழுக்கம் முல்லைததிணை. காடும் காடுசார்ந்த நிலமும் முல்லை நிலம். முல்லை நிலத்தின் தெயவம மாயோன. மாயோனைத் திருமால் என்பர். "மாயோன மேய காடுறை உலகமும்" (தொ. பொ. அக. 5) என்பது தொல்காப்பியம்.

பிரிந்துபோன காதலன திரும்பும வரையிலும் காதலி தன் கறபின் வலிமையால் தன் துயரத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பது முலலையொழுக்கம். அவள் ஆறுதலோடு இருப்பதற்கான காரணங்களைக் கூறுவதும் முல்லைத் திணையே. முல்லைத்திணையின் ஒழுக்கத்தை **இருத்தல்** என்று சுருக்கமாகக் கூறுவர்.

மருதத்திணை ; மருத நிலததிலே நடைபெறும் ஒழுக்கம் மருதததிணையாகும். நீர்வளமும், செல்வங் கொழிக்கும் நிலவளமும் அமைந்த நிலப்பகுதிகளும், ஊர்களும் மருதநிலமாகும். மருத நிலத்தின தெய்வம் வேந்தன். மருதநிலத்தின் தெய்வம் வேந்தன் என்றதனல்

நலல அரசும், நாகரிகமும் அமைந்த இடமே மருதநிலம் என்பதைக காணலாம். வேந்தனை இந்திரன என்றனர் பிற்காலத்தவர். "வேந்தன்மேய தீம்புனல் உலகமும்" (தொல. பொ. அக. 5) எனபது தொலகாப்பியம்

காதலன காதலிகளிடையே தோனறும் ஊடல்; ஊடல் உண்டாவதற்கான காரணங்கள்; பாணன், கூததன், பாங்கன், தோழி, விறலி, பார்ப்பான முதலியோர் தூதர்களாயிருந்து இவர்கள் ஊடலை நீக்கிக கூடி வாழச் செய்யும் நிகழ்ச்சிகள்; ஆகிய இவைகளைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறுவது மருதத்திணை. மருததிணையின் ஒழுககம ஊடல் ஆகும்.

நெய்தல் திணை; நெயதல நிலத்திலே நடைபெறும் ஒழுககத்தைப்பற்றிக் கூறுவது நெய்தல்திணை, கடற்கரையும் கடற்கரையைச் சேர்நத இடஙகளும் நெய்தல்நிலம். நெய்தல்நிலத்திற்குத தெய்வம வருணன." வருணன்மேய பெருமணல் உலகமும்" (தொ. பொ. அக. 5) என்பது தொலகாப்பியம.

காதலன் பிரிவை எண்ணிக் காதலி மனம் வருந்துதலும, தன உள்ளத் துயரத்தை வாய்விட்டு உரைப்பதும் நெய்தல ஒழுக்கம. இதற்கான காரணங்களைக் கூறுவதும் நெய்தலதிணையே. **இரங்கல்** எனனும் செய்தியே நெய்தல் ஒழுக்கம்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம, நெய்தல் எனனும் இந்த ஐந்திணை நிகழ்ச்சிகளைப் பற்றியே தொல்காப்பியம் விரிவாகக் கூறுகின்றது. அகப்பொருளைப் பற்றிக் கூறும் நூல்கள் அனைத்தும் இநத ஐநதிணை நிகழ்ச்சிகளையே அழகுபட எடுத்துரைக்கின்றன.

ஒதத பருவமும், ஒதத உருவமும், ஒத்தகுணமும், ஒத்த அறிவும், ஒத்த நிலமையும உடைய ஒரு ஆணும்

பெண்ணும் இணைந்து வாழ்வதே காதல் மணமாகும். இவ் விருவருள் பெண்ணைக்காட்டிலும் ஆணின் தரம் உயர்ந்த தாகவும் இருக்கலாம். இத்தகைய மனமொத்த இரு தம்ப திகளுக்குள் நடைபெறும் காதல் நிகழ்ச்சிகளைப் பற்றியே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைகளும் கூறுகின்றன.

பண்டைத் தமிழர் திருமணம், களவு, கற்பு என்று இரு வகைப்படும். இதன் விரிவை **மணவாழ்க்கை**; என்ற பகு தியிலே விரிவாகக் காணலாம். இந்தக் களவு, கற்பு மணத் தம்பதிகளிடமே மேலே கூறிய ஐவகை ஒழுக்கமும் நடைபெறும்.

கைக்கிளையும், பெருந்திணையும் சிறந்த ஒழுக்கமல்ல. ஆயினும் அவ்வொழுக்கங்களும் தமிழ மக்களிடையிலே நடைபெற்று வந்தன. அவைகளும் வெளியில் சொல்ல முடியாத அகவொழுக்கங்களாகவே கருதப்பட்டன. ஆகையால் அவைகளையும் அகத்திணையுடன் சேர்த்தனர் முன்னோர். அதைப் பின்பற்றியே தொல்காப்பியரும் கூறினார்.

புறவாழ்வு

அகத்திணையை ஏழாக வகுத்தது போலவே புறத் திணையையும் ஏழாக வகுத்துக் கூறியுள்ளார் தொல் காப்பியர்.

வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பனவே ஏழுவகைப் புறத்திணை. இந்தப் புறத்திணைகளிலே தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தில் நடைபெற்ற போர்முறைகளைக் காணலாம். போரிலே தமிழர் காட்டிய வீரச்செயல்களை அறியலாம். தமிழரின் அரசியல், கொடை, புகழ் ஆகியவைகளையும் உணரலாம்.

உலக நிலையாமையும், அறவுரைகளும் இவற்றுள் காணப் படுகின்றன.

வெட்சித்திணை: போர்புரியக் கருதிய வேந்தன் எதிரியின பசு மந்தையைக் கவர்வதும், கவர்ந்த பசு மந்தையை எதிரி மீட்டுக்கொள்ளுவதும் வெட்சித்திணை.

வஞ்சித்திணை; ஒரு மன்னன் தன்பகைவனுடைய நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்குப் படையெடுத்துச செலலுவதும்; பகை வேந்தன அவனை எதிர்பபதும் வஞ்சித்திணை.

உழிஞை; படையெடுத்துச் சென்ற வேந்தன பகைவனுடைய கோட்டை மதிலை வளைத்துக் கொள்ளுவதும் உள்ளிருக்கும் வேந்தன் அம்மதிலைக கைவிடாமல் காப்பாறறுவதும் உழிஞைததிணை.

தும்பைத்திணை; ஒரு வேந்தன், தனது நாட்டினமீது படையெடுதது வநத வேந்தனை எதிாத்துப் போர் செய்து அவனுடைய வலிமையை அழிப்பது தும்பைத்திணை

வாகைத்திண: பகைவரை வெல்லுதலும், ஒவவொருவரும் தநதம செயல்களை வெறறிபெறச செய்தலும் வாகைத்திணை.

காஞ்சித்திணை; உலகம், இளமை, செல்வம் இவைகளின நிலையாமையைப் பற்றியும, மற்றும்பல அறிவுரைகளையும கூறுவது காஞ்சிததிணை.

பாடாண்திணை. மககளைப்பற்றியோ, கடவுளைப் பற்றியோ, அவாகளுடைய ஒழுககம், வீரம், புகழ, கொடை முதலியவறறைப புகழ்ந்து பாடுவது பாடாண்திணையாகும்.

இவவாறு புறத்திணையை ஏழு பகுதியாகவும், அகததிணையை மேலே கூறியபடி ஏழு பகுதியாகவும் வகுததுக கூறுகிறது தொல்காப்பியம். மக்களுடைய வாழககைச செய்திகள் அனைத்தும் இவ்விரு திணைகளில் அடஙகி விட்டது.

6. மண வாழ்க்கை

களவும் கற்பும்

பண்டைத் தமிழர் திருமணமுறை களவு கறபு என்று இருவகைபபடும். இந்த இருவகை மணங்களும் எவ வாறு நடைபெறும? இந்த மணவாழ்க்கையில் ஈடுபட்ட காதலனும காதலியும எப்படி வாழ்க்கை நடததுவார்கள்? அவர்களுடைய வாழககைககுந துணைசெய்கின்றவர் எவ ரெவர்? இச் செயதிகளைத் தொலகாப்பியப் பொருள திகாரத்தில விரிவாகக காணலாம். இவைகளைக் கள வியலும கற்பியலும் எடுததுரைக்கின்றன. களவு மண வாழ்க்கையைப் பற்றிக் கூறுவது களவியல், கறபு மண வாழ்க்கையைப் பற்றிச சொலலுவது கறபியல்.

களவு மணமாவது பெறறூர் உற்றூர் உறவினர் அறி யாமல, ஒரு ஆணும் ஒரு பெண்ணும மறைவிலே மணமக் களாக வாழ்க்கை நடத்துவது. ஒதத தனமையுள்ள ஒரு ஆணும் பெண்ணும் சந்திக்கும்போது அவர்களுக்குள் காதல் பிறக்கும். இவர்கள் இருவரும ஒரே நிலத்தில் வாழக கூடியவர்களாகவும் இருக்கலாம். வேறு வேறு நிலதது மக்களாகவும் இருககலாம. முன் வினைப்பயனு கவே இருவரும் சந்திப்பாாகள். அவர்கள் இருவரும் மனமொத்துக காதலிதது இன்புறுவர்.

இவர்கள் அடிககடி இரவிலும் பகலிலும் குறித்த இடத்திலே சந்திப்பார்கள். இபபடி ஊரார அறியாமல் —உறவினருக்குத் தெரியாமல் நடத்தும் வாழ்வே களவு மணம்.

இந்தக களவுச் செய்தி பெண்ணின் பெற்ருேர்கருத் தெரிந்து விட்டால், அவர்கள் பெண்ணை வீட்டை விட்டு வெளியிலே போக வொட்டாமல் அடக்கிவிடுவார்கள். அப் பொழுது அவளுடன் கூடி மகிழந்த ஆடவன் தன உறவி னரைக் கொண்டு பெண்ணின் பெற்ருேரிடம் பெண் கேட்கச்செயவான. அவர்களும சம்மதிப்பார்கள். ஏற்க னவே மணமக்களாக மறைந்து வாழ்ந்த அந்த இருவருக் கும் சில சடங்குகளுடன் திருமணம் நடைபெறும். பின்னர் வெளிபபடையாக இருவரும் இல்லறம் நடத்துவார்கள். இதற்கே கற்பு மணம் எனறு பெயர். இது களவு மணம் ஊராாக்குத தெரிவதற்கு முனபே நடைபெறும் கற்பு மணமாகும்.

ஒரு பெணணும ஆணும் நடததும் களவு மண வாழ்க்கை ஊராருககுத் தெரிந்து விட்டாலே போதும். அதன் பிறகு அவர்கள வெளிப்படையாக இலலறததிலே இணைநது வாழவார்கள். இதுவும் கற்பு மணமே தான்.

காதலன், தான் காதலித்து வாழும் பெண்ணை ஒரு வரும் அறியாமல் தனனூருக்கு அழைததுக் கொண்டு போய விடுவான. தனனூரிலே வெளிப்படையாக, யாவு ரும் அறிய இல்லறம் நடத்துவான். தனனூரை யடைந் தவன் சிலசடஙகுகளுடன் திருமணம் செய்து கொளவதும் உண்டு. பெண்ணின் பெற்ருேர்களும் இத்திருமணச் சடஙகிலே கலநது கொள்வதும் உணடு. இம் முறையிலே காதலன் காதலிகளின் களவு வெளிப்பட்டு இருவரும இலலறம் நடத்துவதும் கறபு மணமே தான்.

ஆகவே களவு என்பது ஒரு காதலனும காதலியும் மறைவாக மணமக்களாகி மகிழ்தல. கற்பு எனபது எல் லோரும அறிய வெளிபபடையாக இலலறம் நடத்துதல்.

களவு நிகழ்ந்த பிறகுதான் கற்பு நிகழும். களவுமணம் நடக்காமல் கற்பு மணம் நடப்பதில்லை. இதனுல் தமிழரின்

மண வாழ்வு காதல் மணவாழ்வே என்பதைக் காணலாம். காதலற்ற மணவாழ்வு பண்டைத் தமிழரிடம் நடைபெற்ற தில்லை,

வெளிப்படவரைதல் படாஅமை வரைதல் என்று
ஆயிரண் டென்ப வரைதல் ஆறே

(தொ. பொ. கள 50)

"மணந்து கொள்ளும் முறையை, களவுப் புணர்ச்சி வெளிப் பட்டபின் மணந்து கொள்ளுதல், களவுப் புணர்ச்சி வெளிப்படுவதற்கு முன்பே மணந்து கொள்ளுதல் ஆகிய இரண்டு வகையென்பர்"

களவு மணம் நடைபெறாமல் கற்பு மணம் நடை பெறுவதில்லை, என்பதற்கு இச் சூத்திரமே ஆதாரம்.

திருமணச் சடங்கு

கணவன்—மனைவி, காதலன்—காதலி, அகத்துக் காரர்—அகமுடையாள், என்ற கட்டுத் திட்டங்களும் முறைகளும் காட்டுமிராண்டி மக்களிடம் இருந்ததில்லை. அவர்கள் வரைதுறையின்றி வாழ்ந்தனர். தாய்—மகன்; அண்ணன்—தங்கை; அக்காள்—தம்பி; மகள்—தந்தை; என்ற முறைகளைக் கூட அவர்கள் எண்ணியதில்லை. மணம் என்றாலே இன்னதென்று அவர்கள் அறியமாட்டார்கள். ஆணும் பெண்ணும் ஒன்றாகச் சேர்ந்து என்றும் இணைபிரியாமல் வாழும் வழக்கங்கூட அவர்களிடம் இல்லை. ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி, அவர்களுக்குச் சிற்றின்ப வெறி ஏற்பட்டபோது எதிர்ப் பட்டவர்கள் எவராயினும் அவர்களுடன் கலந்து தங்கள் வெறியைத் தீர்த்துக் கொள்ளுவார்கள், இதிலே அவர்கள் எந்த உறவு முறையையும் பாராட்டியதே யில்லை.

மக்களிடம் நாகரிகம் பரவிய பிறகுதான், ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பிரியாத நட்புடன் இணைந்து

வாழ்வது என்ற வழககம் ஏறபட்டது. காட்டு மிராண்டிப் பருவதறதைக கடந்த பிறகுதான கட்டுத் திட்டமுள்ள ஆண் பெண் வாழ்ககை தோன்றத தொடங்கியது. இதுவே மக்கள நாகரிக வாழ்க்கையின் ஆரமபப்படியாகும.

பல்லாண்டுகளுக்கு முன்பே தமிழாகள் காட்டு மிராண்டிப் பருவத்தை விட்டுக் கரையேறி விட்டார்கள். நல்ல நாகரிகததை அடைநதுவிட்டனர். ஆணும் பெண்ணும் அன்புடன் இணைந்து ஒன்றுபடடு வாழும முறை தமிழர்களிடம தோன்றிவிட்டது. காதலுற்றுக் கலந்து வாழும ஆண பெண்கள், என்றும இணைபிரியாமல் வாழ வேண்டும் என்ற கட்டுப்பாடும் அவர்களுக்குள் தோனறி விட்டது இவ்வாறு இணைந்து வாழ்வதையே மண வாழ்க்கையாக அவர்கள் எண்ணினர்.

தொல்காப்பியருககு முனனே, மிகப் பழங்காலத் திலே, தமிழரிடையிலே திருமணசசடஙகு எதுவும் நடந்ததில்லை. காதலா காதலிகளின களவு மணத்தைப்பற்றி, அவர்கள பெற்றோர்கள் அறிந்த பின இருவரும் கூடி வாழ்வதற்கு இணஙகுவார்கள்; அவாகளுடைய காதல் வாழ்வுககுக் குறுககே நிறகமாட்டார்கள; முட்டுக்கட்டை போட மாட்டார்கள். பெணணின பெறறோர் — காதலியின பெற்றோர் — இதறகுத் தடையாக நின்றால், காதலன் தன் காதலியை அழைத்துக் கொண்டு ஒருவருக்கும தெரியாமல் ஊரை விட்டுப போய்விடுவான. இசசெய்தியை ஊரார் அறிந்த பின் இதுவே கற்பு மணம் எனப்படும். இதுதான பண்டைத் தமிழரிடம குடி கொண்டிருந்த கற்பு மணமுறை.

இநத முறையிலுல பிற் காலததிலே சில தவறுகள் நேர்நதன. மணமக்களாய் வாழநத மககளுக்குள் மன

வேற்றுமை ஏற்பட்டபோது ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தனர். மற்ரெரு பெண் மீது காமவெறி கொணட ஆடவன தன் மனேவியை "அவள் என் காதலி அலலள்" என்று சொல்லிப் பிரியவும் முன் வந்தான மணநத மங்கை யினமேல் ஏதோ காரணத்தால வெறுப்புக் கொண்ட ஆடவன "அவளே நான் மணககவேயிலலே" என்று பொய் புகலவும் தொடஙகிஞன. காமவெறி கொண்ட ஆண் மகன "உனனேயே நான் மணப்பேன. வேறு ஒருத்தியை என் கனவிலும் கருதமாட்டேன்" என்று பொயயுரைத்து பேதைப பெண்களே ஏமாறறிஞன.

காதல மண வாழக்கையிலே இத்தகைய பொயயும் தவறுகளும் தோனறத் தொடஙகின. இததவறுகளால் சமுதாய வாழ்விலே சீர குலேவு ஏறபட்டது. இதை ஒழித்து, நேர்மையும ஒழுக்கமும நிரம்பிய சமுதாய வாழவை நிலே நாட்டுவதறகுச் சமுதாயத் தலேவாகள் முன வந்தனர். பலரைச் சாட்சியாக வைத்துந திரு மணத்தை நடத்திவிட்டால, பிறகு அத்தமபதிகள் பொய் கூறவோ தவறு செய்யவோ மாட்டார்கள என்ற முடிவுக்கு வந்தனா. இதற்காகவே கற்பு மணததிற்குச் சில சடஙகு களே உணடாக்கினா. இந்தச சடஙகுகளே ஏற்படுததிய வாகள தமிழர் சமுதாயத் தலேவர்களும, அறிஞர்களுமே தான்.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப. (தொ. பொ. கற் 4)

"தாமே வரைநது கொண்ட தமபதிகளிடம் பொய்யும் தவறுகளும ஏற்பட்ட பிறகுதான் சமுதாயத தலேவர்கள் கற்பு மணததிலே சில சடங்குகளே ஏறபடுததினார்."

இச் சூத்திரம் திருமணத்திலே சடங்குகள் செய்யும் வழககம் ஏற்பட்ட காரணத்தை எடுத்துக் காட்டுகிறது. ஐயர் - தலேவர்கள்.

தலைவர்களால் உண்டாக்கப்பட்ட. இத்தகைய சடங்குகளுடன் நடைபெறுவது தான் கற்புத் திருமணம் என்று கூறுகிறார் தொல்காப்பியனார்.

கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன், கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே
(தொ. பொ. கற்பி-1)

" கற்புமணம் என்று சொல்லப்படுவது, திருமணச சடங்குடன், பெண்ணைக் கொளளுதற்கேற்ற தகுதியுடைய தலைவனுககு, தலைவியைக கொடுபபதறகுரிமையுடைய பெற்றோர் கொடுப்ப, தலைவன மணநது கொள்வதாகும்"

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலையான
(தொ. பொ. கற் 2)

" தலைவியின பெற்றோர்களுக்குத தெரியாமல், தலைவன் தலைவியைத தன்னூர்க்கு அழைததுக் கொண்டு போய விட்ட போது, பெண்ணைக் கொடுக்கும் பெறறோர்கள் இலலாமலே திருமணச சடஙகு நடைபெறுவதும் உண்டு "

இத்தகைய திருமணச் சடஙகுகளை செய்யும உரிமை தமிழக குடியிலே பிறநத அனைவர்க்கும் உணடு.

மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே
(தொ. பொ. கற் 3)

" மேலோராகிய அந்தணர் அரசர் வணிகர்களுககு என்று ஏற்பட்ட இந்தச சடஙகுகளை, அவர்களுக்குக் கீழப பட்ட மற்ற தமிழர்களுககும் உரியன என்று ஏற்பட்ட காலமும் உண்டு "

முதலில் நாகரிகமுடைய உயர்ந்த மக்களிடையிலே தான் திருமணத்தைப்பற்றிய பொய்யும் புரட்டுக்களும் ஏற்

பட்டன; அவர்களுக்காகவே தலைவர்களால் சடங்குகள் ஏற்படுத்தப்பட்டன; பிற்காலத்தில்தான் அவ்வித சடங்குகள் செய்யும் வழக்கம் ஏனைய தமிழர்களிடையிலும் ஏற்பட்டது; என்ற உண்மையை இச் சூத்திரம் எடுத்துக் காட்டுகிறது.

திருமணத்திலே சில சடங்குகள் செய்யப்படவேண்டும் என்பதே தொல்காப்பியர் கருத்து. தொல்காப்பியத் தமிழர்கள் சில திருமணச்சடங்குகளைச் செய்து வந்தார்கள். மேலே காட்டிய மூன்று சூத்திரங்களும் இவ்வுண்மையை விளக்குகின்றன.

தமிழர் சடங்கு

கற்புமணத்திற்கென்று உண்டாக்கப்பட்ட சடங்குகள் எவை? அவை இன்றைய திருமணங்களில் நடைபெறும் சடங்குகள் போன்றவைகளா? அல்லது வேறுவகையா? இன்றைய திருமணச் சடங்குகள் வேத முறைப்படி நடைபெறுவன என்பர். தீயின் முன் வடமொழி மந்திரங்களுடன் நடைபெறுவன இன்றைய சடங்குகள்.

பண்டைத் தமிழர் திருமணச் சடங்குகள் வேதத்தைப் பின்பற்றியன அல்ல. தீ வளர்த்து அதனை முன்னிட்டுத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் தமிழர்களிடம் இருந்ததில்லை. திருமணச் சடங்குகளைச் செய்து வைப்பதற்கென்று குருமார்களோ, புரோகிதர்களோ இருந்தார்கள் என்று எண்ணவும் இடமில்லை. தமிழர்களுடைய சடங்குகளிலே அக்கினிக்கு வேலையில்லை. தொல்காப்பியத்தி குப் பின்னே தோன்றிய சங்க இலக்கியங்களில் கூ அக்கினி சாட்சியாகத் திருமணம் செய்து கொண்ட நிக சிகள் சிறுபான்மையாகத்தான் காணப்படுகின்றன.

தமிழர்களிடம் நடைபெறும் சடங்குகள் எல்லாம் பெரும்பாலும் பெண்களால் நடத்தப்படுவனவே. இன்

றும் பருவம வந்த பெண்களுக்கு நடத்தப்படும் சடங்கு, கருவுற்ற மகளிர்க்கு நடததப்படும் வளை காப்பு போன்றவை பெண்களாலேயே நடத்தப்படுகினறன, இவைகளில் ஆண்கள தொடர்பில்லை. இச்சடஙகுகளில் புரோகிதமும் இல்லை. இவைகளைப் போலவேதான திருமணச் சடஙகுகளும நடைபெற்றன. தமிழர் திருமணச் சடங்கு முறைகளைப்பற்றி அகநானூறறில் இரண்டு பாடல்களில் கூறபபட்டுளளன. 86 வது பாடலிலும, 136 வது பாடலிலும் இவைகளைக் காணலாம.

"நல்ல நாளிலே குளிர்ச்சியான திருமணப்பந்தலிலே புதுமணல பரப்பப்பட்டது. பநதலிலே பூமாலைகள் புனைந்து தொங்கவிடப்பட்டன. இரவு கழிந்து காலை நேரம் எழுந்தது. மணப பந்தலிலே வரிசை வரிசையாக விளக்குகள ஒளிவீசிக கொண்டிருநதன. வயது நிரமபிய பெண்கள தங்கள தலைகளிலே நீர்க் குடங்களைச் சுமந்து நின்றனர். பிள்ளை பெற்ற பெண்கள் நால்வர் அந்த நீர்க்குடங்களை வாஙகி மணமகளை நீராட்டினர். நீராட்டும்போது 'இவள கற்பு நெறியிலே தவறாமல வாழக! தன கணவனுடைய அன்புககுரிய மனைவியாகுக' என்று வாழ்த்துக கூறினர்.

பின்னர், பெற்றோர் 'நீ சிறந்த இல்லக கிழத்தியாகுக!' என வாழத்தி அவளை மணமகன் கையிலே மகிழச்சியுடன கொடுத்தனர்.

திருமண வீட்டிலே பெரிய சோற்றுக் குவியல் இருந்தது. திருமணம் முடிந்தபின் அனைவரும் அச்சோற்றுக குவியலை உண்டு உளளம களிததனர்"

இது அகநானூற்றின் 86 வது பாடலில் காணப்படும் செயதி. இத்தகைய திருமணச சடஙகின் போது வாத்தியங்கள முழஙகின. தெயவததை வணங்கிப் பெண்ணுக்கு

மலர் மாலையும், நலலாடையும், நகைகளும் அணிவித்து அழகு செயதனர் ; எனற செய்தி 136 வது பாடலில் காணப்படுகின்றது ;

தொலகாபபிய காலத தமிழர் திருமண முறை ஒரு தனி முறையாகும். இன்றுள்ள சடங்கு முறையும, புரோகித முறையும பண்டைத் தமிழா கொண்டவையல்ல. இந்த உணமையைந தொலகாபபியம நமககுத் தெளிவாகத தெரிவிக்கினறது.

பொருந்தா மணம்

பண்டைத் தமிழர்களிடையிலே சில பொருத்தமற்ற திருமணங்களும், ஆண் பெண் உறவுகளும் இருந்தன. இவைகளையே கைககிளைத் திணை; பெருநதிணை; என்று இரு வகையாகக கூறுகின்ருர் தொல்காப்பியர்.

காமத்தின் தன்மையறியாத ஒரு சிறுமியிடம் ஒருவன் காதல் கொண்டு வருந்துவான். நலல மொழிகள், தீய மொழிகள் என்ற இரு வகையான மொழிகளையும தன்னேடும் அவளோடும் இணைததுப பேசுவான். அச்சிறுமியோ அவனுககு மறுமொழி சொல்வதற்கு அறியாமல் விழிபபாள். அவனே தான பேசுவதை விடாமல் பேசியே இன்புறுவான. இதற்கே கைககிளை ஒழுக்கம் என்று பெயர். கைக்கிளையை ஒரு தலைககாமம் எனபர் பிற்காலததார்.

காமஞ்சாலா இளமையோள் வயின்
ஏமம் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிருதிறத்தால்
தன்னெடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெருன் சொல்லியின்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.

(தொ. பொ. அக. 53)

இதனால் தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு முன னும் பருவமடையாத இளம்பெண்களை மணந்து கொள்ளும் வழக்கம தமிழ் நாட்டில இருந்ததென்பதை அறியலாம்.

பெருந்திணையெனபது பொருந்தாக காதல், பிறர் கண்டு எள்ளி நகையாடும் வகையிலே ஆண் பெண் களிடம் ஏற்படும் காமவெறியே பெருந்திணை. இந்தப் பெருந்திணையை நான்கு வகையாக வகுததுக் கூறுகிறார் தொல்காபபியர்.

1. ஒருவன தனனை விரும்பாத பெண்ணின மேல் தாங்க முடியாத காதல் கொண்டு மடலேறுதல். கருக்கு மழுஙகாத பனை மட்டைகளால் குதிரை உருவத்தில ஓர் ஊர்தி செய்யப்படும. காம வெறி கொண்ட காளை அதன் மீது ஏறி உட்கார்ந்து கொள்ளுவான. தான காமுற்ற பெண்ணின் உருவததை ஒரு துணியிலே எழுதுவான். அவ்வுருவத்தின கீழ் அவள் பெயரையும் குறிபபான். அதைத் தன் கையிலே பிடித்துக கொள்ளுவான. தான் ஏறியிருக்கும் பன மட்டை ஊர்தியைப் பிறரால் இழுக்கச் செய்வான. பனமட்டைகளின் இரு புறங்களிலும் வாள போல் அமைந்துள்ள கருக்குகள் அவன உடம்பிலே உர சிப் புண்படுத்தும். அந்தப் புண்களிலிருந்து செந்நீர் கசியா மல், வெண்ணீர் கசிந்தால் ஊரார் ஒனறு கூடி அவன் விரும்பிய பெண்ணை அவனுக்கு மணம முடித்து வைப் பார்கள். இன்றேல் அவன் ஒரு மலைச் சிகரத்திலேறிக கீழே வீழ்ந்து தற்கொலை செய்துகொள்வான். அவன் உடம்பிலிருந்து வெண்ணீர் கசியாமல் செந்நிர் கசிந்தால் ஊரார் ஒனறு சேர்ந்து அவன் உயிரை வாங்கி விடுவார் கள். மடலேறுதல எனனும் இப்பகுதி பெருந்திணை.

2. வயதேறிய ஒருத்தியை வாலிபன் கூடி வாழ் வதும், கிழவனைக குமரி மணந்து வாழ்வதும் பெருநதிணை.

3. தமமைத்தாம அடக்கிக கொள்ள முடியாத காம வெறியுடன் ஆண் பெண்களை அணைந்து வாழ்வதும் பெருந்திணை.

4. காமவெறி தலைக்கேறி ஆணைப பெண் பலவந்தப் படுததுவதும், பெண்ணை ஆண் பலவந்தப படுததுவதும பெருந்திணை.

ஏறிய மடல்திறம், இளமை தீர்திறம்,
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்,
மிக்க காமத்து மிடலொடு, தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.

(தொ. பொ. அக 54)

என்ற சூததிரத்தால பெருந்திணையின் நாலவகைப பகுப்பையும காணலாம்.

கைககிளையெனனும ஒரு தலைக்காமததைபபற்றியோ பெருந்திணையெனனும் பொருந்தாக் காமத்தைப்பற்றியோ தொல்காப்பியர் ஓரிடததிலும் பாராட்டிப பேசவில்லை. இத்தகைய வழக்கஙகள் தமிழ் நாட்டில் தமிழரிடையிலே சிறுபான்மை விரவியிருந்தன எனபதற்கே இவவிரண்டையும குறிததுள்ளார். இவறறைப பாராட்டிப் பேசும் இலக்கியங்களும் இல்லை. இதனை "மக்கள வாழ்வும ஒழுக்கமும்" என்ற பகுதியிலும் காணலாம்.

ஒதத ஆணும பெண்ணும் முதலில் களவிலும் பிறகு கற்பிலும் இணைந்து காதல் வாழ்வு நடத்துவதே தமிழர் களின் மண வாழ்க்கையாகும். கனனிப் பெண்களைக் காமுறும கைக்கிளையும், காமவெறி கொண்ட பெருந்திணையும் சிறுபான்மையாகத் தமிழர்களிடம் நிலவியிருந்தன. இந்த மூன்று வகையே தமிழா மணவாழககை முறை. இவை களைத் தொல்காப்பியர் தெளிவாகக் கூறி யிருக்கிறார்.

எண்வகை மணம்

வடமொழி நூல்களிலே மணம் எண் வகைப்படும் என்று சொல்லப்படுகின்றன. அவை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன.

பிரமமணம்: *பெண் கொடுப்பதற்கு ஒத்த கோத்திரமுடையவன்; நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமச்சரிய விரதங் காத்தவன்; இவனுக்குப் பருவமடைந்த பன்னிரண்டு வயதுடைய பெண்ணை, இரண்டாவது பூப்பெய்துவதற்கு முன் அணிகலன்களைப் பூட்டித் தானமாகக் கொடுப்பது.*

பிரசாபத்திய மணம்; *மாப்பிள்ளை வீட்டார்கொடுக்கும் பரிசத்தைப் போலப் பெண் வீட்டார் இரண்டு பங்கு பரிசம் கொடுத்து மணம் செய்விப்பது.*

ஆரிட மணம்; *காளையையும், பசுவையும் பொன் கொம்பும், பொன்குளம்பும் உடையனவாகச் செய்து அவற்றின் இடையிலே பெண்ணுக்கு நகைகள் பூட்டி நிறுத்தித் தக்கான ஒருவனுக்கு மணம் செய்து கொடுப்பது.*

தெய்வ மணம்: *பெரிய யாகங்களைச் செய்கின்றவர்களில் ஒருவனுக்கு அந்த யாகத்தின் முன்னே பெண்ணைத் தக்கணையாகக் கொடுப்பது.*

அசுர மணம்: *கொல்லும் கொடுங்காளையைப் பிடித்து அடக்குதல், திரிகின்ற பன்றியை அம்பெய்து கொல்லுதல், வில்லை நாணேற்றுதல் முதலிய வீரச் செயல்களைச் செய்து பெண்ணைக் கொள்ளுவது. சுயம்வர மணமும் இவைகளில் அடங்கும்.*

இராக்கத மணம்: *பலவந்தமாகப் பெண்ணைத் தூக்கிக் கொண்டுபோய் மணம் புரிந்து கொள்ளுவது.*

பைசாச மணம்: *மூத்தவர்களையும், கள்ளுண்டு மயங்கினவர்களையும், தூங்குகின்றவர்களையும் இழிந்தவர்களையும் மணந்து கொள்ளுவது பைசாச மணம்.*

4

கந்தருவமணம்; கந்தர்வர்களிலே ஆண் பெண் இருவர் ஒருவரை ஒருவர் கண்டபோது காதல் கொண்டு இணைவர்; அதுபோல ஒரு ஆணும் ஒரு பெண்ணும் எதிர்ப்படும் போது காதல் கொண்டு மணமக்களாவது.

இந்த எட்டு வகை மணங்களிலே தமிழரின் களவு மணம் கந்தருவ மணத்தைப்போன்றது என்று தொல் காப்பியர் கூறுகின்றார்.

காமக் கூட்டம் காணுங்காலை
மறை ஓர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறைஅமை நல் யாழ்த் துணைமையோர் இயல்பே
(தொ. பொ. கள. 1)

"காமக் கூட்டம் எத்தகையது என்று காணும்போது வேதத்தில் ஓர் புறத்திலே கூறப்படும் எண்வகை மணங்களிலேயே சிறந்த நல்ல யாழைத் துணையாகக் கொண்ட கந்தருவர்களின் வழக்கத்தைப் போன்றதாகும்."

• களவு மணம் கந்தருவத்தைப் போன்றது என்ற இந்த ஒன்றை வைத்துக் கொண்டு ஏனைய ஏழுவகைத் திருமணங்களும் தமிழரிடையிலே வழங்கின என்று கூறுவோரும் உண்டு. தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், இளம் பூரணர், பேராசிரியர் போன்றவர்களும் தமிழர் திருமண முறையும் வடநூல்களில் கூறப்படும் திருமணங்களும் ஒன்றே என்று கூற முயன்றுள்ளனர். ஐந்திணை ஒழுக்கத்திலே கந்தருவமணம் அடங்கும். கைக்கிளை, பெருந்திணைகளிலேயே மற்ற ஏழுவகை மணங்களும் அடங்கியிருக்கின்றன என்பர்.

அசுர மணம், இராக்கத மணம், பைசாச மணம் போன்ற வழக்கங்கள் தமிழ் நாட்டில் இருந்திருக்கலாம். இத்தகைய வழக்கங்கள் உலகமெங்கும் காமவெறி கொண்ட மக்களிடம் நடப்பதுண்டு. இது இயற்கை.

பிரமம, பிரசாபததியம், ஆரிடம், தெய்வம் போன்ற மணஙகள தமிழ் நாட்டில் தொல்காபபியருக்கு முனனே நடைபெறறதாக எநத இலககியமும் கூறவில்லே.

வேதததிலே கூறப்படும மண முறைகளைத தான் தமிழர்கள பின பற்றி வந்தாாகள எனறு சொல்லுவதற்கு இடமிலலே. பின்பற்றி இருப்பார்களாலை களவு மணததைக் கந்தருவ மணததிறகு ஒப்பிட்டு உரைததிருப் பதைப்போல, ஏனைய ஏழு திருமணங்களை ஒத்த திரு மணஙகள் இவை இவை யென்று தொல்காப்பியர் கூறி யிருப்பார். இவவாறு அவா எங்கும் சொல்லவே யில்லே.

எனவே ஐந்திணை ஒழுக்கமாகிய களவு, கற்புத திரு மணமும், கைக்கிளே மணம, பெருநதிணை வாழ்வு இம் மூன்றும் தமிழா வாழ்விலே நிகழந்த இயற்கை நிகழ்சசிகள். இவை எந்த நாட்டிலிருநதும இநத நாட்டில குடிபுகுந்தவை யல்ல ; எந்தச சமுகத்தாரிடமிருந்தும் தமிழர்கள் கடன் வாங்கியவை யலல; எந்த மொழிகளிலிருந்தும தமிழ்மக்கள் கறறுக கொண்டவைகளும் அல்ல ; தமிழர் சமுதாயத்தில் தாமே தோன்றி நிலவிய இயறகை மண வாழ்வாகும். இதுவே தொல்காப்பியக் கண்ணுடி நமக்குக் காட்டும் உண்மை.

7. ஆண் பெண் உரிமை

பெண்ணுக்கு விலங்கு

தொல்காப்பியர் காலததில் ஆணுக்கும பெண்ணுக்கும் சமவுரிமை இல்லை. ஆண் உயர்ந்தவன்; பெண தாழ்ந்தவள். ஆளப் பிறந்தவன ஆண்மகன; அவனுக்கு அடங்கி வாழப்பிறந்தவள பெண்பிள்ளை. இக் கொள்கை தான் அக்காலத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தது.

> அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்
> நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப
>
> (தொ. பொ. கள. 96)

"பயமும், வெட்கமும், அறியாமையும் முற்பட்டு நிற்றல் எபபொழுதும் பெணபாலுக்கு உரிய குணங்கள் என்று கூறுவார்கள்"

அச்சம், நாணம், மடமை இவைகள் பெண்களுக்கு மட்டும் உரிய குணங்கள் என்பது எப்படிப் பொருநதும? பயங்காளிக் கோழைகள் ஆண்களில் இல்லையா? கூச்சமும் நாணமும் உடைய ஆண்கள் நாட்டில இல்லையா? அறிவற்ற ஆணபிள்ளைகள் ஒருவர் கூட உலகில் இல்லையா? கல்வியறிவிலலாமல்—யாருடனும் பழகாமல்-வெளியுலகம் அறியாமல்—வீட்டுக்குள் அடைந்து கிடப்போர் ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி அவர்களிடம் இந்த மூன்று குணங்களும இருப்பதைக் காண்கிறோம்.

அச்சம், நாணம், மடமை என்னும் முக் குணங்களும் யாருக்கும் இயற்கையாகவே ஏற்படுவன வல்ல. செயற்கையாலேயே வநது சேருகின்றன. தொல்காப்பிய

காலத்தில் தமிழ் நாட்டுப் பெண்கள் ஆண்களால் அடக்கி வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அச்சமும், நாணமும், அறியாமையும் உடையவர்களாக வளர்க்கப் பட்டனர், இம் முக்குணங்களும் பெண்ணுரிமையின் விலங்குகள்.

இதற்கு முன்னுள்ள சூத்திரம் "பெருமையும் உரனும் ஆடூஉ மேன" என்று ஆண் மக்களைச் சிறப்பித்துச் சொல்லுகிறது. பெருமையும் வலிமையும் ஆண்களுக்குரிய குணங்கள் என்பதே இதன் பொருள்.

முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை
(தொ. பொ. அக. 37)

கடல் கடந்து செல்லும்போது பெண்களையும் உடனழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை.

எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்
(தொ. பொ. கற்பு- 34)

"எண்ணுதற்கரிய போர்க் களத்துப் படை வீட்டுக்குப் பெண்களுடன் போகமாட்டார்கள்"

இந்த இரண்டு சூத்திரங்களும் தமிழ் நாட்டுப் பெண்கள் கப்பலேறி அயல் நாடு செல்வதில்லை, ஆண்களுடன் சேர்ந்து போர்க்களம் புகுவதில்லை, என்பதைக் காட்டுகின்றன.

பெண்ணுக்கே கற்பு

"கற்பு கற்பென்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்" என்பது இக் காலத்து மக்கள் வேண்டும் நீதி. கற்பொழுக்கம் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகும். ஆனால் தொல்காப்பியர் காலத்திலே கற்பு பெண்களுக்குரிய தனிஉடைமை என்றே கருதப் பட்டது.

ஒரு பெண் ஒரே ஆடவனை மணந்து அவனுடன் இணைபிரியாக் காதல் கொண்டு இன்புற்று வாழவேண்டும்.

அவன் எவ்வளவுதான் தவறுகள் செய்தாலும் அவள் மட்டும் தவறுகள் செய்யாமல் அவனுக்கு அடங்கியே நடக்க வேண்டும். காதலன் உள்ளம் களிக்க, உடல் நலம்பெற அவனுக்குப் பணிவிடை புரிவதே கற்புள்ள பெண்ணின் கடமை. கணவன் செய்யும் குற்றங்களை எவரும் அறியும்படி எடுத்துச் சொல்லக் கூடாது. கணவன் செய்யும் இழி செயல்களை ஊரார் அறிந்தால் அவனைப் பற்றி இழிவாக எண்ணுவார்கள்; ஏளனமாகப் பேசுவார்கள். ஆதலால் அவன் செய்யும் குற்றங்களை மறைப்பதே மனைவியின் கடமை. இவை போன்ற குணங்கள் பெண்களுக்கு வேண்டும். இவ்வாறு நடப்பதே கற்புடைமை, முன்னூல்களிலும் பின்னூல்களிலும் இவைகளே கற்புடைமை என்று காட்டப் பட்டிருக்கின்றன.

தொல்காப்பியர் காலத்திலும் இத்தகைய கற்புடைமை பெண்களுக்கு மட்டுமே வேண்டும் என்று கருதப்பட்டது.

> உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்
> செயிர் தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று
>
> (தொ. பொ. கள. 23)

"உயிரைக் காட்டிலும் நாணம் சிறந்தது; நாணத்தைக் காட்டினும் குற்றமற்ற காட்சியினையுடைய கற்பே சிறந்ததாகும்.

> போக்கு உடன் அறிந்த பின் தோழியொடு கெழீஇக்
> கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்
>
> (தொ. பொ. கள. 25)

"தலைவன் பிரிந்து செல்லும் போக்கை அறிந்த பின், தலைவி தன் தோழியைத் துணையாகக் கொண்டு, தலைவனைப் பற்றிக் குறை கூறாத கற்பு நெறியிலே நிற்கும் போதும்"

இவைகள் பெண்களுக்குக் கற்பே உயிர் என்பதை விளக்குகின்றன. பெண்களுக்குக் கற்பின் வழி நடப்பதே கடமை என்பதைக் காட்டும் இன்னும் பல சூத்திரங்களும் உண்டு.

பலதார மணம்

ஒருவனுக்கு ஒருத்தியே என்ற ஏகதார மணமுறை தமிழரிடம் இருந்ததில்லை, ஒருவனுக்குப் பல மனைவியர் என்ற பலதார மணமே தமிழர்களிடம் குடிகொண்டிருந்தது. தொல்காப்பியருக்கு முன்னும், தொல்காப்பியர் காலத்திலும் இவ்வழக்கமே இருந்துவந்தது.

ஆண்கள் மட்டும் பல பெண்களை மணந்து கொள்ளலாம். மணந்திருக்கும் மனைவியரைத் தவிர வேறு பல விலை மாதர்களுடனும் கூடிக் குதூகலிக்கலாம். பெண் மக்களுக்கு இவ்வுரிமையில்லை. ஒருத்தி ஒருவனைத்தான் மணக்க வேண்டும்

காமக்கிழத்தி மனையோள் என்றிவர்
ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்

(தொல். பொ. கற்பு 5)

"காமக் கிழத்தி மனைவி என்று சொல்லப்பட்ட இவர்கள் வருத்தத்தோடு சொல்லிய வார்த்தைகளுக்கு எதிராகவும்"

இச்சூத்திரம் ஒருவனுக்குக் காதலித்து மணம்புரிந்து கொண்ட மனைவியுடன் காமக்கிழத்தி என்ற வேறு மனைவியும் உண்டு என்று குறிப்பதைக் காணலாம்.

காமக்கிழத்தி தன் மகத்தழீஇ
ஏமுறு விளையாட்டு இறுதிக்கண்ணும்

(தொல். பொ. கற்பு 7)

"மனையறத்திற்கு உரியவளாக வரைந்து கொண்ட காமக்கிழத்தி, வீட்டுக்குப் புறத்திலே விளையாடுகின்ற தலைவியின் புதல்வனைத் தழுவிக்கொண்டு வருகின்ற விளையாட்டின் முடிவிலும்"

இதில் உள்ள "காமக்கிழத்தி" என்பது இரண்டாவதாக மணந்து கொண்ட மனைவியைக் குறிக்கின்றது. இதே சூத்திரத்தில் காமக்கிழத்தியர் என்ற பன்மைச் சொல்லும் காணப்படுகின்றது.

இதே சூத்திரத்தில் "மாயப்பரத்தை உள்ளிய வழியும்" என்ற தொடரும் காணப்படுகின்றது. பரத்தை என்பது மணந்து கொள்ளாத பொது மகள்.

முதலில் மணந்து கொள்ளும் மனைவியே இல்லக் கிழத்தி; வீட்டின் தலைவி. இரண்டாவதாக ஆசைப்பட்டு மணந்து கொள்ளும் பெண்கள் காமக்கிழத்தியர். மூன்றாவதாக விலைமாது, பொருட்பெண்டிர், கணிகையர், பொது மகளிர், வரைவின் மகளிர் என்ற பெயர்களால் அழைக்கப்படும் பரத்தையர்கள். இன்னும் சில கற்பியல் சூத்திரங்களிலே இந்த மூவகையினரைப்பற்றியும் காணலாம்.

ஆகவே பல பெண்களை மணப்பதும், அவர்கள் போதாமல் பல பரத்தையர்களுடன் கூடிக் களிப்பதும் ஆடவர்களின் உரிமையாக இருந்தது. தமிழர்களில் உயர்ந்த வகுப்பினராக-செல்வமுடையவர்களாக வாழ்ந்த மக்களிடமே இவைகள் நடந்திருக்கக்கூடும். இவ்வாறு நடந்துகொள்ளும் வசதியும் வாய்ப்பும் அவர்களுக்கே உண்டு.

சங்க இலக்கியங்களில் உள்ள அகப்பொருட் பாடல்களிலே இச்செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. கணவன் பரத்தையர் வீட்டுக்குப்போய் வரும் செய்தி அறிந்து மனைவி ஊடல் கொள்கிறாள். அவன் பரத்தையர்களுடன் சேர்ந்து நீராடிய செய்தியைக் கேட்டுக் காதலி

கனலுகிருள். அவன் பரததையர்களுடன் கூடிக் குலாவிய போது, அவன் மாாபிலே சந்தனக் குழம்பும, மலரிதழ் களும் படிந்திருபபதைக கண்டு மனேவி சீறுகிருள். இதத கைய பல நிகழ்ச்சிகள் காதலனுக்கும் காதலிக்கும ஊடல் தோன்றுவதறகுக் காரணஙகளாக இருக்கின்றன. இத்த கைய ஊடல்களின்போது பாணன், கூத்தன் முதலிய வாகள் தூதுவாகளாயிருந்து காதலனேயும் காதலியையும் ஒன்று சேர்த்து வைக்கின்றனர். மருதத் திணையைப்பறறிக் கூறும பாடல்களிலே இந்த ஊடல் நிகழ்ச்சிகளே மிகுதி யாகக காணலாம. நற்றிணை, குறுந்தொகை, கலித் தொகை, அகநாறுபோனற அகபபொருள் நூல்களிலே இந்நிகழ்ச்சிகளைக் காட்டும் பாடல்கள் பலவறறைப படிக் கலாம.

மேலே கூறியவைகளைக்கொண்டு தொல்காப்பியர் காலத்திலே ஆண பெண சமத்துவ நிலே இருந்ததில்லை என்று அறியலாம். பெண்ணடிமை குடிகொண்டிருந்த காலமே அது. இபபெண்ணடிமை வேறு யாராலும் தமிழரி டம் புகுததபபடடதன்று. இப்பெண்ணடிமை முறை இக் காலத்திறகு ஏற்றதன்று. இது ஒதுக்கித் தள்ளவேண்டிய உளுததுப் போன பழைய முறை.

8. சாதிப் பிரிவு

வீண்பழி

தமிழ் நாட்டிலே இன்று எண்ணற்ற சாதி வேற்றுமைகள் தலைவிரித் தாடுகின்றன. இந்த வேற்றுமைகள் எப்படித் தோன்றின? எவரால் உண்டாக்கப் பட்டன? இயற்கையாக எழுந்த வேற்றுமைகளா? செயற்கையால் அமைக்கப்பட்டனவா? அல்லது வேற்றாரால் இந்நாட்டிலே புகுத்தப்பட்டனவா? இவைகளைப்பற்றிப் பல தவறான கொள்கைகள் நிலவுகின்றன.

“பண்டைத் தமிழகத்திலே பல வகையான சாதிப் பிரிவுகள் இருந்ததில்லை. நால்வகைச் சாதி முறை இந் நாட்டில் எழுந்ததன்று. ஆரியர்களே நால்வகைச் சாதியை இந்நாட்டிலே நாட்டினார்கள். ‘ஒன்றே குலம்; ஒருவனே தேவன்’ என்பதுதான் பண்டைத் தமிழர் கொள்கை” என்று சிலர் சொல்லுகின்றனர்.

“நால்வகைச் சாதி இந்நாட்டினில் நாட்டினீர்” என்ற கபிலரகவலை இவர்கள் பெரியதோர் ஆதாரமாகக் காட்டுகின்றனர். இதை வைத்துக்கொண்டு பல கட்டுரைகளும் கதைகளும் எழுதுகின்றனர்; தமிழர் வரலாற்றைத் தாறுமாறாக்கி வருகின்றனர். தொல்காப்பியத்தை ஆராய்ந்தால் இவர்கள் கூற்று ஆதாரமற்றது; வேண்டாதார் மேல் வீண்பழி சுமத்துவது; என்பதை அறியலாம்.

மக்கள் அனைவரும் பிறப்பினால் பேதமற்றவர்கள். உயர்வு தாழ்வுகள் பிறப்பினால் உண்டானவையல்ல. ஆயினும் செய்யும் தொழில்களிலே சிறுமை பெருமை பாராட்டத் தொடங்கினர். இச்சிறுமை பெருமைகளே

உயர்வு தாழ்வுகளுக்கு உறைவிடமாயின. வடமொழியிலே உள்ள வேத-உபநிடத—ஸ்மிருதிகளும் இவ்வுண்மையை ஒப்புக்கொள்ளுகின்றன. செந்தமிழ்த் தொல்காப்பியமும் இவ்வுண்மையை எடுத்துக் காட்டுகின்றது.

ஆரியர்கள் இந்தியாவில் நுழைவதற்கு முன்பு இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் தமிழர்களே தங்கியிருந்தனர். சரிதஇரக்காரர்கள் இவர்களைத்தான் திராவிடர்கள் என்று குறிப்பிட்டனர். இந்தத் தமிழ் மக்களிடையிலே நால் வகை வகுப்புப் பிரிவுகள் இருந்தன. அடிமைகள், தொழி லாளர்கள், தலைவர்கள் என்ற வர்க்கப் பிரிவுகளும் இருந்தன.

நாடோடிகளாகத் திரியும் மக்களிடம் நாகரிகம் வளர்ச்சியடைந்திருக்க முடியாது. அவர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் — ஆடுமாடுகளுடன — மூட்டை முடிச்சுகளுடன் உணவுக்கு இடந்தேடி ஊர்சுற்றும்போது அவர்களிடம் தொழில் வளர்ச்சியும் தோன்றியிருக்க முடி யாது. ஓரிடத்திலே நிலையாகத் தங்கி, அரசியல் சமுதாய வாழ்விலே சிறந்து வாழ்வோரிடந்தான் தொழில்வளர்ச்சி தோன்றியிருக்க முடியும். தொழில்கள் காரணமாகப் பல பிரிவுகளும் பிறந்திருக்க முடியும். இதுவே சரித்திர வல்லு நர்களின் கொள்கை.

மக்கள் நாகரிகத்திற்கு அடிப்படை விவசாயந்தான். நிலத்தைக் கிளறி, நீர்பாய்ச்சி, நெல்போன்ற தானியங் களை விதைத்துப் பயிர்செய்து அறுப்பதற்கு எப்பொழுது மக்கள் கற்றுக் கொண்டார்களோ அப்பொழுதுதான் அவர்கள் நாகரிகப்பாதையிலே நடக்க அடியெடுத்து வைத்தார்கள். இதன் பிறகுதான் மக்களிடையிலே, அர சியல் அமைப்பும், வாணிகமும், கைத்தொழில்களும், கலை களும் வளர்ந்தன.

விவசாயம் செய்யத் தெரியாத மக்களிடையிலே எவ்வித வேற்றுமையும் விளைந்திருக்க முடியாது. தனித் தனி இல்லற வாழ்வும் அவர்களிடம் இருந்ததில்லை. அவர்கள் தமக்கென்று தனித்தனியே செல்வப் பொருள்களைச் சேமித்து வைத்துக்கொள்ளவும் இல்லை. இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து உணவு தேடுவார்கள். அகப்பட்ட உணவை அனைவரும் பங்கிட்டு உண்பார்கள். பருகுவதற்கு நீர் கண்ட இடத்திலே—படுப்பதற்கு நிழல்கண்ட இடத்திலே தங்குவார்கள். இத்தகைய பண்பாடுள்ள பொதுவுடைமைச் சமுதாய முறைதான் நாகரிகம் காணாத மக்களிடம் இருந்தது.

மற்றநாடுகளில்

வட ஐரோப்பாவிலும், மத்திய ஐரோப்பாவிலும் தங்கியிருந்த மக்களே ஆரியர் என்ற பெயருடன் பல நாடுகளுக்கும் பிரிந்து சென்றனர். இவர்களில் ஒரு பிரிவினரே கைபர் கணவாய் வழியாக இந்தியாவிலும் குடிபுகுந்தனர்.

ஆரியர் இந்தியாவுக்குள் நுழைவதற்கு முன்பே திராவிடர்கள் நாகரிகத்திலே சிறந்திருந்தனர்; இந்தியா முழுவதும் பரவியிருந்தனர்; என்பது பெரும்பாலான சரித்திராசிரியர்களின் கொள்கை.

ஆரியர்கள் இங்கு குடியேறிய காலத்தைப்பற்றிக் கருத்து வேற்றுமையுண்டு. கி. மு. ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் இந்தியாவில் குடியேறினர்; இந்திய நாகரிகத்தை உருவாக்கினர்; என்போர் சிலர். திராவிட நாகரிகத்தை ஒப்புக்கொள்ளாதவர்களே ஆரியர்கள் குடியேறிய காலத்தை நீட்டிவைத்து, இன்று இந்நாட்டில் உள்ள நாகரிகம் ஆரியர் தந்த நாகரிகமே என்று காட்ட முற்படுகின்றனர் என்போர் சிலர். ஆரியர்கள் வருவதற்கு முன்பே தமிழர்கள் எல்லாத் துறைகளிலும் நாகரிகம் அடைந்திருந்தனர் என்று கூறுவோரும் உண்டு.

கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான் ஆரியர்கள் இந்தியாவில் குடிபுகுந்தனர் என்பதே பெரும் பாலான வரலாற்று ஆசிரியர்கள் கொள்கை. இவர்கள் கூறுவது உண்மையானால் தொல்காப்பியத்திற் காணப் படும் வகுப்புப் பிரிவுகள் ஆரியர்களால் ஏற்பட்டவை யல்ல. இது மறுக்கமுடியாத உண்மை.

அன்றியும் மற்றொரு உண்மையையும் உற்றுநோக்க வேண்டும். வட ஐரோப்பாவிலிருந்தும், மத்திய ஐரோப் பாவிலிருந்தும் புறப்பட்ட ஆரியர்கள் இந்தியாவுக்கு மட் டும் வரவில்லை. வேறு பல நாடுகளுக்கும் சென்று குடி யேறினர். அவர்கள் குடியேறிய ஏனைய ஐரோப்பியநாடு களில் ஏன் இந்தியாவிலிருப்பது போன்ற வகுப்புப் பிரிவுகள்—வருணாசிரம முறை—ஏற்படவில்லை? இந்தியா வில் மட்டும் அவைகள் தோன்றக் காரணம் என்ன? இவற்றைத்தான் நாம் நன்றாக ஆராயவேண்டும்.

வகுப்புப் பிரிவும்–வருணாசிரம முறையும் ஆரியர்களிடம் இல்லை அவர்கள் சென்ற வேறு நாடுகளிலும் அவைகள் இல்லை. இந்தியாவில் மட்டுமே வருணாசிரம முறைக்கு அடிப் படையான வகுப்புப்பிரிவுகள் நிலைத்திருந்தன! ஆதலால் ஆரி யர்கள் இங்கு வந்தபின் இப்பிரிவினைகளை ஒப்புக்கொண்டனர். தங்கள் இலக்கியங்களிலும் ஏற்றுக்கொண்டனர். ஆரியர்கள் குடியேறிய ஏனைய நாடுகளில் பிறவியிலே சாதிவேற்றுமை இல்லாதிருப்பதற்கும் இந்தியாவிலே மட்டும் இருப்பதற்கும் இதுவேதான் காரணமாகும். ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன், இந்திய நாடு முழுவதும் திராவிடர்கள் குடியேறி யிருந்தனர்; திராவிட நாகரிகமே பரவியிருந்தது; என்ற உண்மையை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஆராய்ந் தால் இந்த முடிவுக்குத்தான் வர இயலும்.

பல பிரிவுகள்

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழ்நாட்டில் தமிழ் மக்களிடையில் வகுப்புப் பிரிவுகள் ஏற்பட்டிருந்தன

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவுகள் இருந்தன. ஆரியர்கள் வருவதற்கு முன்பே இப்பிரிவுகள் தமிழகத்தில் இருந்தன.

இவைகளைத் தவிர மற்றும்பல பிரிவுகளும் இருந்தன. பாணர், கூத்தர், பொருநர், பார்ப்பார், அடிமை வேலை செய்வோர், தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் போன்ற பல பிரிவுகளும் இருந்தன.

இவர்களைத் தவிர நாலவகை நிலங்களிலே வாழ்ந்த மக்களும் இருந்தனர். குறிஞ்சி நிலத்திலே வாழ்ந்த மக்களுக்குக் கானவர், வேட்டுவர், இறவுளர், குன்றுவர், வேட்டுவித்தியர், குறத்தியர், குன்றுவித்தியர் என்று பெயர்.

முல்லை நிலத்திலே வாழ்ந்த மக்களுக்குக் கோவலர், இடையர், ஆயர், பொதுவர், இடைச்சியர், கோவித்தியர், ஆய்ச்சியர், பொதுவியர் என்று பெயர். இவர்களெல்லாம் அந்தணர் முதலிய நாலவகைப் பிரிவினர்க்கு அப்பாற் பட்டவர்கள்,

நெய்தல் நிலத்திலே வாழ்ந்த மக்களுக்கு நுளையர், திமிலர், பரதவர், நுளைத்தியர், பரத்தியர் என்று பெயர்.

மருத நிலத்திலே வாழ்ந்தமக்களுக்குக் களமர், உழவர், கடையர், உழத்தியர், கடைச்சியர் என்று பெயர்.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியவர்கள் செய்யும் தொழில்கள் இவை இவையெனத் தொல்காப்பியம் கூறுகின்றது.

அந்தணர்

முப்புரி நூல் (பூணூல்) தண்ணீர்க் குண்டான், முக்கோல், ஆசனம், இவைகள் அந்தணர்க்குரியவைகள்.

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க்குரிய

(தொ. பொ மர. 66)

அரசர்க்கு ஆலோசனை கூறுவது; நாட்டு மக்களுக்கு நல்லுரை வழங்குவது; மக்களின் நலவாழ்வுக்காகக் கடவுளரை வேண்டித் தவங்கிடப்பது; இவைகளும் அந்தணர் கடமை.

அந்தணர்கள் அரசு செய்வதற்கும் உரியவர்கள்.

அந்தணாளர்க்கு அரசுவரைவின்றே

(தொ. பொ. மர 80)

அறிவு, ஆராய்ச்சி, நல்லொழுக்கம், தந்நலந்துறந்த தன்மை, இவைகளை உடையவர்களெல்லாம் அந்தணர் என்று அழைக்கப்பட்டனர்.

அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்

எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டி வாழும் இயல்புடையவர்களாதலால், அந்தணர் என்று சொல்லப் படுகிறவர்கள் அறநெறியிலே நடப்பவர்களாவர்.

தொல்காப்பியத்திற்குப் பின்னே தோன்றிய இக்குறட்பாவும், அந்தணர் இனனோர் என்று அறிவுறுத்துவதைக் காணலாம்.

அரசர்

ஆயுதமும், கொடியும், குடையும், முரசவாத்தியமும், சிறந்த நடையையுடைய குதிரையும், யானையும், தேரும், மலர்மாலையும், முடியும், பொருத்தமான வேறுபல பண்டங்களும் மக்களால் நேர்மை நடுக்கப்பட்ட செங்கோலையுடைய அரசர்களுக்கு உரியனவாகும்.

> படையும், கொடியும், குடையும், முரசும்,
> நடைநவில் புரவியும், களிறும், தேரும்,
> தாரும், முடியும், நேர்வன பிறவும்
> தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய
>
> (தொ. பொ. மர. 67)

வேட்டையாடுவதிலே வல்லமை; பகைவர்களை எதிர்த்துப் போர் செய்து அவர்களை முறியடித்து வெற்றி பெறும் வீரத்தன்மை; தந்நலந் துறந்து, என்றும் பொது மக்களின் நலவாழ்வுக்காகப் பொறுமையுடன் உழைக்கும் உறுதியுள்ளம்; நடுநிலைமை தவறாத நல்லொழுக்க முடைமை; நீதிவழங்கும் நேர்மைக் குணம்; இவை போன்ற உயர்ந்த குணமுடையவர்களே பண்டைத் தமிழர்களால் அரசர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தெரிவு கொள் என்ற சொற்றொடர் இவ்வுண்மையை நமக்கு உணர்த்துகின்றது.

அந்தணாளர்க்கு உரியவைகளும், அரசர்களுக்கு உரியனவாக வருதலும் உண்டு.

> அந்தணாளர்க்குரியவும் அரசர்க்கு
> ஒன்றிய வருஉம் பொருளுமார் உளவே
>
> (தொ. பொ. மர. 68)

அரச வாழ்க்கையிலே வெறுப்படைந்தவர்கள் அந்தணர் வாழ்க்கையைப் பின்பற்றுவார்கள்; அந்தணர்களாகவே வாழ்வார்கள். மேலே காட்டிய சூத்திரம் இவ்வுண்மையைக் கூறுகின்றது.

வணிகர்

வாணிகம் செய்யும் வாழ்க்கையை வைசியன் பெறுவான்.

> வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.
>
> (தொ. பொ. மர. 73)

இதனால் வியாபாரம் செய்யும் தொழிலே வைசிகனுடைய தொழில் என்பதை அறியலாம். வியாபாரத்தோடு தானியங்களை விளைவிக்கும் தொழிலும் வைசியனுக்கு உண்டு.

மெய்தெரி வகையின் எண்வகை உணவின்
செய்தியும் வரையார் அப்பாலான
(தொ. பொ. மர. 74)

உண்மை தெரிந்த வகையினால் எட்டுவகையான உணவுத்தானியங்களை உண்டாக்கும் செய்தியும் வைசியனுக்கு உண்டு.

இதுவும் வாணிகத்துடன் தொடர்புள்ள தொழில். ஆதலால் தொல்காப்பிய காலத்திலே வியாபாரிகளும் நிலக்கிழவர்களாக இருந்து வந்தனர் என்று கூறலாம்.

கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே
[தொ. பொ. மர. 75]

என்றதனால், வைசிகர்களுக்கும் அரசர்களைப்போல மலரும் மாலையுங்கூட உண்டு என்று உணரலாம்.

வேளாளர்

வேளாளர்க்கு உழுதுண்பதைத் தவிர, வேறு தொழில்கள் இல்லையென்று மொழிவார்கள்.

வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி
[தொ. பொ. மர. 76]

அரசர்கள் கொடுத்தால் படைக்கலமும், மாலையும் வேளாளர் பெறக்கூடிய பொருள்கள் என்று சொல்லுவார்கள்.

வேந்துவிடு தொழிலிற் படையும் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே.
[தொ. பொ. மர. 77]

ஆகவே வேளாளர்கள் உழு தொழிலோடு படைக் கலம் பெற்று, மாலைபூண்டு போர்வீரர்களாக ஊழியஞ் செய்வதற்கும் உரியவர்களாயிருந்தனர். அவர்கள் படைக் கலப் பயிற்சிபெற்றுப் போர்வீரர்களாவது, வேந்தர்களின் விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

> இடையிரு வகையோர் அல்லது நாடின்
> படைவகை பெறுஅர் என்மனார் புலவர்
>
> (தொ. பொ. மர 72)

"ஆராய்ந்தால், நால்வகையினருள், இடையிலே உள்ள வர்களான அரசர், வணிகர், ஆகிய இருவகையினரைத் தவிர மற்றவர்கள் ஆயுதந் தரிக்கும் உரிமை அற்றவர்கள் என்று கூறுவார்கள் புலவர்கள்."

எத்தகைய கட்டுப்பாடுமின்றித் தாமே ஆயுதமேந்தும் உரிமை; நாட்டுப் பாதுகாப்பிலே பங்குகொள்ளும் உரிமை; இவைகள் இயற்கையாகவே அரசர் வணிகர் ஆகிய இருவகையினர்க்குத்தான் உண்டு. அரசர்களால் அளிக்கப்பட்டால் தான் வேளாளர்க்கு இவ்வுரிமை யுண்டு.

மேலே கூறியவற்றைக் கொண்டு அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பிரிவுகள் தொல்காப்பிய காலத் தமிழரிடம் நிலைத்திருந்ததைக் காண லாம்.

மேலே எடுத்துக் காட்டப்பட்ட எல்லாச் சூத்திரங் களும் தொல்காப்பிய மரபியலிலே காணப்படுவன. "தொல்காப்பிய மரபியலிலே பிற்காலத்தார் பல சூத்திரங் களைப் புகுத்தி யிருக்கின்றனர்; நால்வகை வகுப்புப் பிரிவைக்கூறும் சூத்திரங்கள் தொல்காப்பியரால் சொல் லப்பட்டவை யல்ல அவை ஆரியர் தமிழ் நாட்டுக்கு வந்த பின் எழுதி இணைக்கப்பட்டவை" என்று சிலர் சொல்லு கின்றனர். வர்கள் சொல்லுவது எவ்வகையிலும்

பொருந்தாது. வேறுபல இயல்களிலும் வகுப்புப் பிரிவு களைக் காட்டும் பல சூத்திரங்கள் இருக்கின்றன. அவை களையெல்லாம் ஆரியர் நுழைப்பு என்று சொல்லி எடுத் தெறிந்து விட்டால், அதன் பிறகு தொல்காப்பியப் பொருளதிகாரமே இருக்க முடியாது. புதிய பொருளதி காரம் எழுதவேண்டியதுதான்.

நால்வகைப் பிரிவினர் கடமை

அந்தணர்க்கு அறுவகைத் தொழில், அரசர்க்கு ஐவ கைத் தொழில், வணிகர்க்கும், வேளாளர்க்கும் தனித் தனியே ஆறுவகைத் தொழில்கள் உண்டு.

> அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
> ஐவகை மரபின் அரசர் பக்கமும்
> இரு மூன்று மரபின் ஏனோர் பக்கமும்
>
> (தொ. பொ. புறத் 74)

"ஆறுவகைப்பட்ட தொழில்களையுடைய பார்ப்பனப் பகுதியும், ஐவகைத் தொழில்களையுடைய அரசர் பகுதி யும், ஆறுவகைத் தொழில்களையுடைய வணிகர், வேளாளர் பகுதியும்" என்பதே இதன் பொருள். இது புறத்திணை இயலிற் காணப்படும் சூத்திரம்.

ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், வேள்வி செய் வித்தல், பொருளைப் பெற்றுக் கொள்ளுவது, பொருளைக் கொடுக்கச் செய்வது, இந்த ஆறுவகைத் தொழில்களும் அந்தணர்க்குரியவை.

ஓதல், வேள்வி செய்தல், ஈதல், நாட்டைக் காத்தல், தீயோரைத் தண்டித்தல், இந்த ஐந்து தொழில்களும் அரசர்க்குரியவை.

ஓதல், வேள்வி செய்தல், ஈதல், உழவுத் தொழில் செய்தல், பசுமந்தைகளைக் காப்பாற்றுதல், வாணிகம்

புரிதல், இந்த ஆறு தொழில்களும் வணிகர்களுக்கு உரியவை.

ஓதல், ஈதல், உழவு, பசுமந்தைகளைக் காப்பாற்று தல், வாணிகம், மேலோர் மூவர்க்கும் கீழ்ப்படிந்து நடத்தல இந்த ஆறு தொழில்களும் வேளாளர்க்குரியவை.

இந்தப் புறத்திணை இயல் சூத்திரததாலும தமிழ் மக்க ளிடம் நால்வகை வகுப்புப்பிரிவுகள் இருந்தன வென்பதை அறியலாம். "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பககமும்" என்பது சரியான பாடமல்ல. அறுவகைப்பட்ட அந்தணர் பக்கமும் என்பதே சரியான பாடமா யிருககவேணடும. நெடுஙகாலத்துக்கு முன்பே "அந்தணா" என்பது "பார்ப்பனா" என்று மாறியிருக்க வேண்டும்.

பிரிவு எனபது பாலைத் திணையாகும். மக்கள் வாழ்வும் ஒழுக்கமும் என்ற பகுதியிலே பிரிவின விளக்கத்தைக் காணலாம். காதலியை விட்டுக் காதலன் பிரிந்து செல் வதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று கல்வி கற் கப் பிரிவது, இரண்டு பொருள் தேடப் பிரிவது. அரச னுடைய தூதாகப் போவதும், அரசனுடைய படையிலே போர் வீரனுகச் சேர்ந்து பகைவருடன போர் செய்யப் போவதும் பொருள் தேடச் செல்லும் பிரிவாகும்.

ஓதல், பகையே, தூது இவை பிரிவே
(தொ. பொ. அக 27)

'ஓதுவதற்குப் பிரிதல், பகைவருடன் போர் செய்வ தற்குப் பிரிதல், சமாதானம் செய்து வைக்கும் தூதராகப் பிரிதல் ஆகிய இம் மூன்று வகைப்படும் பிரிவு." பிரிவு மூன்று வகையாலுைம், படிப்பு, பணம் தேடல் ஆகிய இரண்டு காரணங்களுக்காகவே காதலன் காதலிகளுக் குள் பிரிவு நிகழும்.

"மூன்று பிரிவினுள் ஓதுவதற்குப் பிரிவதும், தூது போவதற்குப் பிரிவதும் உயர்ந்தவர்களுக் குரியன.

அவற்றுள்
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன

(தொ. பொ. அக. 28)

உயர்ந்தோர் என்பதற்கு, அந்தணர், அரசர், வணிகர் என்று தொல்காப்பிய உரையாசிரியர்கள் குறித்துள்ளனர்.

பகைவருடன் போராடச் செல்லும் தகுதியுடையவர்கள் யாவர்? இதற்கு அடுத்த சூத்திரம் இதைக் குறிப்பிடுகின்றது. அரசனும் அரசனுடன் சேர்ந்திருப்பவர்களுமே பகைவருடன் போர் செய்வதற்காகப் பிரிந்து செல்வதற்குத் தகுதி யுடையவர்கள்.

தானே சேறலும் தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே

(தொ. பொ. அக. 29)

"தானே பகைவருடன் போராடப் பிரிந்து செல்லுவதும், தன்னுடன் சேர்ந்த மற்றவர்களைப் பகைவருடன் போர் செய்யப் பிரிந்து செல்லும்படி செய்வதும் அரசனுடைய கடமையாகும்."

பகைவயிற் பிரிதல் அரசன் கடமை என்று இச்சூத்திரம் கூறுவதால், இதற்கு முன்னுள்ள சூத்திரத்தில் **உயர்ந்தோர்** என்பதற்கு " அந்தணர், அரசர், வணிகர்," என்று பொருள் சொல்லுவது பொருத்தமானதே.

இந்த அகத்திணை இயற் சூத்திரங்களும் தமிழ் நாட்டில் நால்வகை வகுப்புப் பிரிவுகள் இருந்தன என்பதை வலியுறுத்துவதைக் காணலாம்.

அடிமைகளும் தொழிலாளரும்

அடிமைகள்; தொழிலிலே வல்லவர்கள்; நடனமாடுவோர்; யாழ் வாசிப்போர்; நாடகம் ஆடுவோர்; ஆகிய வகுப்பினரும் தமிழ் நாட்டில் இருந்தனர்.

"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்"
(தொ. பொ. அக. 25)

என்னும் அகத்திணையியற் சூத்திரமும்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்"

என்பன போன்ற பகுதிகளும் இவ்வுண்மையைக் காட்டுகின்றன.

இவைகளைத்தவிர நாலவகை நிலங்களிலே வாழ்நத வேறுபல மக்களும் இருந்தனர்.

பெயரும் வினையும் என்று ஆயிருவகைய
திணைதொறும் மரீஇய திணைநிலைப்பெயரே
[தொ. பொ. அக. 23]

பெயர்ப பெயரும், வினைப்பெயரும் எனறு ஆக இரு வகைப்படும் நால்வகை நிலததிலும் வாழகினற மக்களின் திணைப்பெயர்கள்.

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
(தொ. பொ. அக. 23)

"ஆயர் என்பதும், வேட்டுவர் என்பதும் ஆண்பாலைக் குறிகும் பெயர்."

நால்வகை நிலங்களிலே வேறுவகையான மக்களும் வாழந்தனர். இவர்கள், அநதணர், அரசர், வணிகர், வேளாளர் எனற நால்வகையினருள அடங்கினவர் அல்லர், அடிமைகள், தொழிலாளர்களும் அல்லர். இவர்கள் வேறு என்பதை இந்த இரண்டு சூத்திரங்களும் காட்டுகின்றன.

பிறப்பால் சாதியில்லை.

தொல்காப்பியர் காலத்திலிருந்த இத்தகைய வகுப்புப் பிரிவுகள் பிறப்பால் ஏற்பட்டவை அல்ல. தொழில், ஒழுக்கம், கல்வியறிவு, திறமை காரணமாகவே மக்களுக்குள் பல பிரிவுகள் ஏற்பட்டிருந்தன.

சாதி என்னும் சொல் தொல்காப்பியத்திலே காணப்படுகின்றது. ஆனால் அச்சொல் ஓரிடத்திலேனும் மக்களைக் குறிக்கும் சொல்லாக வழங்கப்படவில்லை. சாதி என்னும் சொல் நீரிலே வாழும் உயிர்களையே குறிக்கின்றது. பிறப்பிலே வேற்றுமையுண்டு என்பதைக் குறிப்பதே சாதி என்னும் சொல். சாதி—ஜாதி. ஜம்—பிறப்பு. ஜனித்தல—பிறத்தல. ஜன்மம்—பிறப்பு.

நீர் வாழ்சாதியுள் அறுபிறப்பு உரிய

(தொ. பொ. அக. 40)

''நீரில் வாழும் பிறவியுள் ஆறுவகைப்பட்ட பிறவிகள் உண்டு.''

நீர் வாழ்சாதியுள் நந்தும் ஒன்றே

(தொ. பொ. அக. 60)

''நீரில்வாழும் பிறவிகளிலே நத்தையும் ஒன்றாகும்.''

பிறப்பினால் உயர்வு தாழ்வுண்டு என்ற கொள்கை தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டில் இல்லை. ஒழுக்கம், தொழில் முதலியவைகள் காரணமாகவே வகுப்புப் பிரிவுகள் தோன்றின. இவைகள் தமிழகத்திலே தாமே தோன்றியனவேயன்றி யாராலும் புகுத்தப்பட்டவையல்ல. இவவுண்மைகளை மேலேகூறியவற்றால் காணலாம்

9. நிலத் தலைவர்கள்

நிலத்தலைமை

தொல்காப்பியர் காலத்திலே தமிழ் நாட்டிலே சாதிப் பிரிவுகள் நிலைத்திருந்தன. நிலமுள்ளோர், நிலமற்றோர் என்ற வர்க்கப்பிரிவும் வேரோடியிருந்தது. நிலத்தலைவர்களே பலவகையான வகுப்புப்பிரிவுகளுக்கும் காரணமாயிருந்தனர். நிலத்தலைவர்களே தாம் உயர்ந்தவர்களாக வாழ்ந்தனர். நிலமற்ற ஏழைகள் தாம் தாழ்ந்தவர்களாகவும், ஏவல் செய்வோராகவும், அடிமைகளாகவும் வாழ்ந்தனர்.

மக்கள் விவசாயம் செய்யக் கற்றுக்கொண்ட பின்னர் தான் நிலப் பிரபுத்துவம் தோன்றியது. உடல் நோகாமல் உலகத்திலே இன்புற்றுவாழ எண்ணும் அறிவுடையர்கள்—மற்றவர்களை அதிகாரத்தாலோ அன்பு மொழியாலோ அடக்கியாளும் திறமைசாலிகள்—நல்ல நிலப்பகுதிகளைத் தங்கள் உடைமையாக்கிக் கொண்டனர். வஞ்சனையறியாத பொதுமக்களை அந்த நிலங்களிலே உழைக்கச் செய்தனர்; அவர்களின் உழைப்பால் உண்டான பலன்களைத் தாமே வாரிக் கொட்டிக்கொண்டனர். ஆனால் அக்காலத்தில் உழைப்பாளிகள் உணவின்றிப் பட்டினி கிடக்கவில்லை. அவர்களுக்குப் போதுமான உணவுப் பொருள்கள் கிடைத்துவந்தன. ஆதலால் அவர்கள் சுரண்டுவோரின் சூழ்ச்சிகளை அறியாமல் அவர்களுக்கு அடங்கி நடந்து வந்தனர்.

நிலத்தலைவர்கள்—அதாவது நிலப்பிரபுக்களின் முயற்சியால் ஏராளமான உணவுப் பொருள்கள் உற்பத்தியா

யின. இந்த நிலப்பிரபுத்துவ முறை ஏற்பட்டபிறகுதான்—அதாவது நிலக்கிழவன்—உழவன என்ற முறை ஏற்பட்ட பிறகுதான் பண்டமாற்று முறையும் வளர்ச்சியடைந்தது. பண்டமாறறு—வியாபாரம. ஒரு பொருளைக் கொடுத்து மற றொரு பொருளை வாங்கிக்கொள்ளும் வழக்கமே பண்டைக் காலத்து வாணிகம்.

உழவுக்கும வாணிகத்திற்கும் இடையிலே பலவகை யான கைததொழிலகளும் வளர்சசியடைந்தன. நெசவுத தொழில், தச்சுத்தொழில், இரும்புத்தொழில், ஓவியத் தொழில், சிற்பததொழில் போன்ற பலவகைத தொழில களும தோனறி வளர்ந்தன.

மககள வேளாணமையிலும், வேறுபல தொழில்களி லும், வியாபாரங்களிலும், ஈடுபட்டிருக்கும் இடங்களிலே வீணர்கள சிலரும் இருந்தார்கள். இவர்கள் எததொழில களிலும் ஈடுபடாத சோம்பேறிகள்.

இந்தச் சோம்பேறிகளைத் தவிர, பாடுபட்டுச் சேர்த்து வைத்திருக்கும பண்டங்களைப் பறித்துக்கொள்ளும் முர டர்களும், திருடர்களும் தோன்றினர்கள. இவர்களைத தவிர காட்டு விலங்குகளாலும் மக்களுக்கும், அவர்கள செய்த பயிர்களுககும அடிக்கடி சேதங்கள் ஏறபட்டு வந்தன.

இந்தச் சோம்பேறிகளைச சுறுசுப்புடையவர்களாக மாறற வேண்டும; முரடர்களையும், திருடர்களையும் அடக்கி நசுக்க வேண்டும்; காட்டு விலங்குகளையும் வேட்டையாடி விரட்டவேணடும். அப்பொழுதுதான் மக்கள் மன அமை தியுடன் வாழமுடியும். இவைகளைப் பயமின்மையும், உடற் கட்டுமுடைய பலசாலிகளால்தான் செயயமுடியும். இவை களைச் செயத பலசாலிகளே நாளடைவில், எல்லா மக் களையும் அடக்கியாளுவோராகவும, அரசர்களாகவும ஆகி

விட்டார்கள். இந்த அரசர்களே நிலப்பிரபுத்துவத்தின் காவலர்களாக—நிலத் தலைமையைப் பாதுகாப்பவர் களாக ஆகிவிட்டனர்.

நிலத்தலைமை வேரூன்றிய பிறகுதான் கலைகள் வளர்ச்சியடைந்தன. அறிஞர்கள், மக்கள் முன்னேறுவதற் கான வழிதுறைகளை வகுப்பதற்கு அரும்பாடுபட்டு உழைத்தனர். இத்தகைய அறிஞர்கள் நிலத்தலைவர் களால் ஆதரிக்கப்பட்டனர். இவர்கள் உணவுக் கவலை யின்றி உழைத்தனர். தாங்கள் உள்ளத்திற் கண்டறிந்த உண்மைகளை உலகத்தார்க்கு அறிவித்தனர்.

பண்டைக்காலத்து நூலாசிரியர்கள் பலரும் நிலத் தலைவர்களின் பாதுகாப்பிலே வாழ்ந்தவர்கள். நாடகம், சங்கீதம் போன்ற கலைகளெல்லாம், அவர்களுடைய ஆத ரிப்பிலேதான் வளர்ந்தன.

கூத்தர்கள், பாணர்கள், பொருநர்கள், விறலிகள் என்பவர்கள், இசை, நடனம், நாடகங்களிலே வல்லவர் கள். இவர்களை ஆதரித்தவர்கள் அனைவரும் நிலத்தலைவர் கள் தாம். குறுநில மன்னர்கள் என்போர் அனைவரும் நிலத்தலைவர்கள் தாம்.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத்தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச்சொன்ன பக்கமும்
(தொ. பொ. புறத். 30)

"கூத்தர், பாணர், பொருநர், விறலி என்பவர்கள் வழியிலே தம்போன்ற இரவலரைக்கண்டு, தாம்பெற்ற செல்வத்தைப்பற்றி, அச்செல்வம் பெறாதவர்களுக்கு எடுத்துக்கூறி, தாம் செல்வம்பெற்ற வள்ளல்களிடம் அவர் களும் சென்று செல்வம் பெறும்படி கூறிய பகுதியும்" என்பதே இதன் பொருள். இதனால் நிலத்தலைவர்களின்

ஆதரவிலே கலைகளும், கலைஞர்களும, வளர்நததையும், வாழ்நததையும் காணலாம.

பத்துபபாட்டில உள்ள, திருமுருகாற்றுபபடை, பெரும் பாணாற்றுப்படை, சிறுபாணாறறுப்படை, பொருநராற்றுப் படை, கூததர் ஆற்றுப்படை யெனனும மலைபடுகடாம் ஆகியவைகள் இந்த தொலகாபபிய இலக்கணததிற்கு ஏற்ற இலக்கியங்களே.

தமிழிலே இனறுளள சங்க இலக்கியஙகளிலே பல, நிலத்தலைவர்களின வீரத்தையும், கொடையையும, பெருமையையும புகழ்ந்து பாடப்பட்டவைகள் தாம.

பததுபாட்டுள் எட்டுபபாட்டுக்கள் நிலததலைவர்களைப் புகழுநது பாடியவை. ஏறக்குறைய புறநானூற்றுப்பாடல்கள் எல்லாம் நிலததலைவர்களைப்பற்றியனவே. பதிற்றுப்பத்தும் அபபடித்தான். பண்டைத் தமிழ்ப்புலவர்களின இவவழக்கததையே பிற்காலததுத தமிழப்புலவர்களில் பலர் பின் பற்றினர். சிறறரசர்களையும், ஜமீனதார்களையும, நிலச் சுவானதார்களையும தலைவர்களாக வைத்துக கோவை உலா, அந்தாதி, கலம்பகம, தூது, மடல் போன்ற பல நூலகளைப் பாடியிருககினறனர்.

நிலத்தலைமை முறை தோனறுமல், மக்கள் ஆரம்ப அநாகரிகப் பொதுவுடைமை வாழக்கையிலேயே நிலைத திருப்பார்களானுல, மனித சமூகத்திற்கு வரலாறே இருந் திருக்க முடியாது. இனறுள்ள எததகைய நாகரிகமும் பிறந் திருககவும் முடியாது. வளர்ந்திருககவும் முடியாது.

முதலாளித்துவம்

நிலப்பிரபுத்துவமுறை வேரோடி நிலைதது விட்ட நீண்டகாலததிற்குப பிறகுதான், முதலாளிததுவமுறை தோனறியது ஒரு பணடத்தைக கொடுத்து மற்ருெரு பண்டத்தை வாங்கிக் கொள்ளும் முறைமாறி, ஒரு பண்டத்

திற்குப்பதிலாக நாணயத்தை வாங்கிக்கொள்ளும்முறை எப்பொழுது தோன்றியதோ, அப்பொழுதே முதலாளித் துவமுறை வளரத் தொடங்கிவிட்டது. விஞ்ஞானம் வளர்ந்தபிறகு முதலாளித்துவம் உச்சநிலை அடைந்தது.

நிலப்பிரபுத்துவமும், முதலாளித்துவமும் மக்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு மட்டற்ற உதவி புரிந்திருக்கின்றன. இன்றுள்ள கலைகள், இலக்கியங்கள், தத்துவங்கள், நாகரிகங்கள் எல்லாம் முதலாளித்துவம் ஈன்றெடுத்த பிள்ளைகளே. ஆகையால்தான் பண்டை இலக்கியங்கள் எல்லாம் நிலத்தலைவர்களான சிற்றரசர்களையும், வள்ளல்களையும்பாராட்டும் இலக்கியங்களாகவே காணப்படுகின்றன. அவைகள் எல்லாம்—அவைகளில் காணப்படும் கொள்கைகள் எல்லாம்—பழக்க வழக்கங்கள் எல்லாம் —பிரபுத்துவமுறையை அடிப்படையாகக் கொண்டவைகளாகவேயிருக்கின்றன.

தமிழ்நாடு விவசாயத்தில் சிறந்தது. தமிழர்கள் விவசாயத்திலே பேர்போனவர்கள். இதை மறந்துவிடக் கூடாது. நீர்வளம், நிறைந்த நிலப்பகுதிகளில்தான் விவசாயம் வளர்ச்சியடையும். இந்த உண்மையையும் மறந்துவிட வேண்டாம்.

பண்டைத் தமிழர்கள் இமயமலைவரையிலும் குடியேறியிருந்தனர். நீர்வளம் நிறைந்த நல்ல நிலப்பகுதிகளிலே தான் அவர்கள் தங்கியிருந்தனர். உழவுத் தொழிலையே தங்கள் உயிர்த் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். விவசாயமும், வாணிகமும், அரசியல்முறையும், கைத்தொழில்களும் இவர்களிடம் வளர்ந்திருந்தன. இந்தத் தொழில்கள் காரணமாக முதல் முதல் இவர்களிடமே நிலப்பிரபுக்களாகிய குறுநில மன்னர்களும் நால்வகை—வகுப்பினர்களும் தோன்றினர்.

நாகரிகத்தின் பிறப்பிடம்

"இந்திய நாட்டுக்குப் புறம்பே உறைந்த காலத்தில் ஆரியர்கள் ஆடு மாடுகள் மேய்த்துக்கொண்டு, அவற்றைக் கொண்டே பிழைப்பவர்களாய், அவற்றின் மேய்ச்சலுக்குப புல் நிலங்களைத் தேடித் திரிபவர்களா யிருந்தமையின், அவர்கட்கு அந்நாளில் உழவுத் தொழில் இன்னதென்றே தெரியாது. மற்று அவர்கட்கு முன் இந்திய நாட்டில், இமயமலைச்சாரல்வரை பரவி யிருந்த தமிழர்களோ, ஆரியர்களைப் போல் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு அலைந்து திரியும் வாழ்க்கையில் இல்லாமல், நாகரிகத்தில் சிறந்து, தாம் தாம் சென்ற இடங்களில், ஆறுகளும் ஏரிகளும் உள்ள பக்கங்களில் நிலையாகக் குடியேறி உழவுத் தொழிலைச் செய்து அதனாற் செல்வம் பெருக்கி, நாடு நகரங்களை அமைத்துத் தமக்குள் அரசர்களை ஏற்படுத்தி, வறுமை யின்றி உயிர் வாழ்ந்தவர்கள் ஆவர். இங்ஙனம் செல்வத்தாற் சிறந்த நாகரிக வாழ்க்கை யுடையவர்களுக்குள்ளேதான் பலவகைத் தொழிற் பிரிவுகளும், அத்தொழில்களைச் செய்யும் மக்கட் பிரிவுகளும் உண்டாகுமே யல்லாமல், நிலையான இருப்பிடம் ஏதும் இன்றி இன்றைக்கு ஓரிடத்தும் நாளைக்கு ஓரிடத்தும் அலைந்து திரியும் மக்கள்பால் அத்தகைய தொழில்களும், பிரிவுகளும் உண்டாக மாட்டா"

இது மும்மொழி வல்லுநரான பேராசிரியர் மறைமலையடிகளின் கொள்கை. "சாதி வேற்றுமையும், போலிச் சைவரும்" என்ற தமது நூலிலே இவ்வாறு கூறுகின்றார். இதுவே சரித்திர உண்மை. சரித்திரப் பேராசிரியர்கள் பலரும் இன்று இவ்வுண்மையை ஒப்புக் கொள்ளுகின்றனர்.

நால்வகை நிலங்களிலே மருத நிலமே நீர்வளம் நிரம்பியது. ஊர்வளம் உடையது. நாகரிகம் செழித்து வளரும் நல்ல நிலம். ஒவ்வொரு நிலத்திற்கும் தெய்வம் இன்

னின்னது என்று குறித்த தொல்காப்பியர், மருத நிலத்திற்கு வேந்தன் தெய்வம் என்று குறித்தார்.

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
(தொ. பொ. அக 5)

என்பது தொல்காப்பியம்.

முல்லைக்கு மாயோன் (திருமால்) தெய்வம், குறிஞ்சிக்குச் சேயோன (முருகன்) தெய்வம். நெய்தலுக்கு வருணன தெய்வம்; என்று கூறியவர் மருதத்திற்கு மட்டும வேந்தனைத் தெய்வம் என்று விளம்பியதன் கருத்தென்ன? இதை ஆராய்ந்தால மேலே கூறிய உண்மைகள் விளங்கும்.

மருத நிலந்தான் நாகரிகத்தின் பிறப்பிடம். நீர் வளம் நிறைந்த இடத்திலே தான் நாகரிகம பிறந்தது. நாகரிகத்தின் சின்னந்தான் அரசும், அரசனும். பண்டைக் காலத்தில் மக்களைக் காத்து, அவர்கள் சமுதாய வாழ்விலே முன்னேறத் துணை செய்தவன அரசனே. மக்களும் தங்களுக்குத் துணைசெய்த மன்னவனைத் தெய்வமாக—தெய்வப் பிறவியாக-மதித்து வணங்கினர். ஆதலால வேந்தனையே மருத நிலத்தின தெய்வமாக வைத்தார் தொல்காப்பியா.

நால்வகைப் பிரிவுக்கு அடிப்படை

வேந்தர்களிலே முடியுடை வேந்தாகள், குறுநில மன்னர்கள் என்று இருவகையினா இருந்தனர். குறுநில மன்னர்களெல்லாம் முடியுடை வேந்தாகளுக்கு அடக்கம். பெருநிலக் கிழவர்களே குறுநில மன்னர்கள, அல்லது சிற்றரசர்கள். முதல் முதலிலே மருத நிலத்திலே தான் குறுநில மன்னர்களும, முடியுடை வேந்தர்களும தோன்றினர்கள். இதன் பிறகு தான நாளடைவில, முல்லை, குறிஞ்சி நெய்தல முதலிய நிலங்களிலும் நில முதலாளிகளாகிய குறுநில மன்னர்கள் தோன்றினார்கள.

இந்தக் குறுநில மன்னர்களும, இவர்களை அடக்கி யாண்ட மன்னர்களும அரசர்களானார்கள. இவர்களிலே அறிவும், இரக்கமும், தந்நலத் தியாகமும், சிந்தனை சக்தி யும் உடையவர்கள அந்தணர்களானார்கள். பண்டமாற்றுத் தொழில் செய்தவர்கள் வணிகர்களானார்கள். நிலத்திலே நேரடியாக உழுது பயிர் செய்தவர்கள் வேளாளர்களானார்கள. ஆகவே நிலத்தலைமையே நால்வகைப் பிரிவை யுண்டாக்கக் காரணமா யிருந்ததைக் காணலாம்.

நிலத் தலைமை வளர்ச்சி

முதலில அரசர்கள் தாம்—அதாவது குறுநில மன்னர் கள் தாம் நிலத்தலைவர்களா யிருந்தனர். பின்னர் வணிகர் களிலும நிலத் தலைவர்கள் தோன்றினர்; வேளாளர்களி லும் நிலத்தலைவர்கள் தோன்றினர்.

> மெய்தெரி வகையின் எண்வகை உணவின்
> செய்தியும் வரையார் அப்பாலான
>
> (தொ. பொ. மர. 74)

"உண்மை தெரிந்த வகையால் எட்டு வகை உணவுப பண்டங்களை உண்டாக்கும் செய்தியும வணிகர்க்கு உண் டென்பதை நீக்க மாட்டார்கள்; இதுவும் அவ்வணிகர்க்கு உரிய கடமையாகும்".

எண்வகைத் தானியங்கள்—பயறு, உழுந்து, கடுகு, கடலை, எள்ளு, கொள்ளு, அவரை, துவரை என்பவை.

வணிகர்களும் தொல்காப்பியர் காலத்தில் நிலக் கிழ வர்களா யிருந்தனர்; இவர்கள் நேரடியாக நிலத்தில் உழு தவர்கள் அல்லர்; கூலிக்கு ஆள் வைத்து உழுது தானி யம விளைத்து வந்தனர். வணிகர்க்குரிய அறுவகைத் தொழில்களில உழவும் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேளாளர்களும் நாளடைவில நிலக்கிழவர்களானார் கள். வேளாளருள் உழுதுண்போர், உழுவித்துண்

போர் என்று இரண்டு வகையாகப் பிரிந்தனர். உழுதுண்போர்—நிலத்திலே நேரடியாக உழுபவர்கள். உழுவித்துண்போர் பண்ணையார்கள்; களையாளர்கள்; பெருநிலக் கிழவர்கள்.

மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே
(தொ. பொ. அக. 21)

இதற்கு முன்னுள்ள சூத்திரம் பொருள் தேடப் பிரியும் உரிமை சிறப்பாக வணிகர்க்கே உரியதென்று கூறுகிறது. பொருளீட்டுவதற்காகப் பிரிந்து செலலும் உரிமை பொதுவாக மற்றவர்களுக்கும உண்டு என்று சொலலுகிறது இச் சூததிரம்.

"வணிகர்க்குள்ள பொருள் தேடப் பிரியும உரிமை அந்தணா, அரசர், உழுவித்துண்ணும் வேளாளர், உழுதுண்ணும் வேளாளர் ஆகிய நால்வர்கரும் உரியதாகும்" என்பதே இதன் பொருள்.

இதில் குறிப்பிட்டுள்ள உழுவித்துண்போர் நிலத்தலைவர்கள; உழுதுண்போர் விவசாயிகள். வேளாளர்களிலும் நிலத தலைவர்கள் இருந்தார்கள் என்பதற்கு இது ஆதாரம்.

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்
ஆவயின் வருஉம் கிழவரும் உளரே
(தொ. பொ. அக. 23)

"ஆயர் என்பதும் வேட்டுவர் என்பதும் ஆண்களைக் குறிக்கும திணைப் பெயராகும். அவ்விடங்களிலே வேறு பெயர் குறிததுவரும் தலைவர்களும உள்ளனர்."

முல்லை நில மக்கள் ஆயர்; குறிஞ்சி நில மக்கள் வேட்டுவர். இந்த நிலங்களிலே இவர்களை அடக்கி ஆளும் தலைவர்களும் இருந்தனர். இத்தலைவர்கள் குறுநில மன்னர்களாக விளங்கினர்; நிலத் தலைவர்களாக வாழ்ந்தனர்.

அரசர்க்குரிய கடமை அந்தணர்க்கும் உண்டு என்று தொல்காப்பியர் கூறுவதனுல் அவர் காலத்தில் அந்தணர்களில் கூட நிலத்தலைவர்கள் இருந்தனர் என்று நினைக்க இடமுண்டு.

தொல்காப்பியர் காலத்தில் நால்வகை நிலங்களிலும் நிலத்தலைவர்கள் இருந்தனர். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நான்கு வகுப்பினருள்ளும் நிலக்கிழவர்களும், நிலத் தலைவர்களும் வாழ்ந்தனர்; நிலத் தலைமையும் நால்வகை வகுப்புப் பிரிவுகளும் வேறு பல பிரிவுகளும் தமிழர்களிடம் தோன்றியவைகள் தாம். *இவ்வுண்மைகளை மேலே கூறியவைகளைக் கொண்டு உணரலாம்.*

10. ஆண்டான் அடிமை

உயர்வு தாழ்வு

செல்வமுள்ளவன் சிறந்தவன்; செலவமற்றவன் தாழ்ந்தவன். நிலககிழவன்—அதாவது நிலத்தலைவன் உயர்ந்தவன் ; நிலத்திலே நெற்றி வேர்வை சிந்தப் பாடு படும் உழவன தாழ்நதவன். வேலை வாங்கும் தலைவன உயர்ந்தவன் ; வேலை செய்து ஊதியம் பெறும் உழைப் பாளி தாழந்தவன். இந்த முறை தொல்காபபியர் காலத்தி லேயே தமிழ் நாட்டில் நிலைத்திருந்தது. இன்று உலக மக்க ளிடையிலே உயர்வு தாழ்வுகள் நிலைத்திருப்பதற்கும் இம் முறைகளே காரணமா யிருப்பதைக் கண் கூடாகக் காண லாம்.

மக்களுடைய உயர்வு தாழ்வுக்குப் பொருளாதாரமே காரணம என்பதை எவரும் மறுக்க முடியாது. ஔவை யாரால் பாடப பட்டதாக வழங்கும் பிற்காலத்துப் பாடல் ஒன்றும் இவ்வுண்மையை எடுத்துக் காட்டுகின்றது.

> சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
> நீதிவழுவா நெறிமுறையின்—மேதினியில்
> இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
> பட்டாங்கில் உள்ளபடி

" சாதிகள் இரண்டு தாம். வேறு சாதிகள் இல்லை. சொல்லுமிடத்து நீதிதவருது முறைப்படி இவ்வுலகில், வறி யோர்களுக்குப் பொருள் கொடுப்பவர்கள் பெரியோர் : அதாவது உயர்ந்த சாதியினர். பொருள கொடுக்காதவர் தாழ்ந்த சாதியினர். இது தான் நீதி நூல்களில் கூறப் படும் செய்தி "

இதுவே மேலே காட்டிய பாடலின் பொருள். இது யார் பாடிய பாட்டாயினும சரி, எந்தக காலத்தில் பாடிய பாட்டாயினும சரி, இந்தப பாட்டு ஒரு உணமையை விளக்கிக காட்டுகின்றது. பணம் படைததோர்—செல்வம் படைத்தோர் உயர்நத சாதியினர். பண மற்ற ஏழைகள் இழிந்த சாதியினர், இதுதான் இப பாட்டு விளக்கும் உணமை. கொடுக்கும் சகதி பணம் படை நதோரிடந்தான் உண்டு. இல்லாதவர்களிடம் கொடுக்கும சக்தி ஏது ?

தொலகாப்பியர் காலததிலேயே உள்ளவர், இல்லா தவர் எனற உயர்வு தாழ்வுகள் தோனறி விட்டன. நிலத் தலைவர்களாகிய மனனர்கள், குறுநில மன்னர் களை, நிலம படைத்த வணிகர்கள், நிலம படைத்த வேளா ளர்கள் இவர்கள் எல்லாம் உயர்ந்தவர்களாகக் கருதப் பட்டனர். இல்லாதவர்கள உள்ளவரிடம அடிமை வேலை கள செய்து வந்தனர். தாங்கள் செய்யும் வேலைக்கு அவ் வப் பொழுது கூலி பெறும் .தொழிலாளர்களாகவும் இருந்து வந்தனர். இவ்வுண்மை இதற்கு முன்னும் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
(தொ பொ. அக. 25)

எனனும் '' சூத்திரம். அடிமைத் தொழில் செய்யும் மக்க ளும் இருநதனர் ; ஏவிய வேலையைச் செய்து அவ்வப் பொழுது கூலி பெறும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் களும் இருந்தனர் '' எனபதற்கு ஆதரவாகும்.

ஏவன் மரபின் ஏனோர்
(தொ. பொ. அக. 26)

'' பிறரை வேலை வாங்கும உரிமையுடைய மற்றவர் கள் '' என்பதனல், '' வேலை வாங்கும் தலைவர்கள் இருந் தனர். வேலை செய்யும் தொழிலாளர்கள் இருந்தனர் '' என்று காணலாம்.

இரப்போருள் உயர்வு தாழ்வு

இல்லாதவர்களில்கூட முப்பிரிவினர் இருந்தனராம். உள்ளவரைக் காட்டிலும இழிநதவர்கள் : உள்ளவருக்குச் சமமானவர்கள் ; உள்ளவரைவிட உயர்ந்தவர்கள். இவைகளே அநத முபபிரிவு.

ஈ தா கொடு எனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைத்தே
(*தொ. சொல். எச்ச. 46*)

"ஈ, தா, கொடு எனச் சொல்லப்படும் மூன்று சொற்களும் இரததலைக் குறிக்கும் சொறகளாக வரும் இடமும் உண்டு."

அவற்றுள்
ஈ யென் கிளவி இழிந்தோன் கூறறே
(*தொ. சொல் எச்ச. 49*)

"அந்த மூன்று சொற்களில் ஈ எனற சொல், இழிந்தோன் உயர்ந்தவனிடம யாசிக்கும சொல்லாகும்."

தா வென் கிளவி ஒப்போன் கூற்றே
(*தொ. சொல். எச்ச. 50*)

"தா என்னும் சொல் தனக்குச சமமுள்ளவனிடம் யாசிக்கும் சொல்லாகும்."

கொடு வென் கிளவி உயர்ந்தோன் கூற்றே
(*தொ. சொல். எச்ச. 51*)

"கொடு என்று கேட்கும் சொல, தன்னைக் காட்டிலும் தாழ்ந்தவனிடம் உயர்நதவன யாசிக்கும சொல்லாகும"

தமிழ் நாட்டிலே தொலகாப்பியர் காலத்திற்கு முன்பே ஈவோரும் இருந்தனர் ; இரப்போரும் இருந்தனர். ஈவோருள்ளும் உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஒப்

போர் இருந்தனர். இரப்போருள்ளும் உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஒப்போர் இருந்தனர்.

இக்காலத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனற நான்கு பிரிவுகளும் நன்ருக வேருன்றி யிருந்திருக்க வேண்டும். இந்த நால்வகை வகுப்பினருளளும் உள்ள வர்களும், இல்லாதவர்களும் இருந்திருக்க வேண்டும.

இவர்கள் தத்தம வகுப்பினரிடம் பொருள் கேட்கும் போது தா என்ற சொலலேப் பயன் படுத்தி யிருக்க வேணடும். தமக்கு மேற்படட வகுப்பினரிடம் யாசிக்கும் போது ஈ யென்று பல்லேக காட்டி யிருக்க வேணடும். தமக்குக் கீழப்பட்ட வகுப்பினரிடம் இரக்கும போது கொடு என்ற சொல்லேக கூறியிருக்கவேண்டும்.

ஆகவே, மககளுககுள் ஆளுவோா, அடிமைகள் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற நிலேமை ஏற்பட்ட தற்கு அடிப்படைக் காரணம் செல்வம் என்பதைக் காண லாம். இவ்வுண்மைககுத் தொல்காப்பியம் ஆதரவளிக் கின்றது.

11. பார்ப்பாரும் அந்தணரும்

பார்ப்பார் என்று சொல்லும், அந்தணர் என்று சொல்லும் தொல்காப்பியத்திலே வந்திருக்கின்றன. பார்ப்பார் யார்? அந்தணர் யார்? இருவரும் ஒரே வகுப்பினரா? அல்லது வெவ்வேறு வகுப்பினரா? இவை ஆராயத்தக்கவை.

பார்ப்பார்வேறு, அந்தணர்வேறு, என்று எண்ணுவதற்கே அதிக ஆதரவுண்டு. பார்ப்பார் தமிழர்; அந்தணர் ஆரியர்; என்று எண்ணுவோரும் உண்டு. பார்ப்பார் வேறாகத்தான் இருக்கவேண்டும்; அந்தணர் வேறாகத் தான் இருக்கவேண்டும். ஆனால் பார்ப்பார் தமிழர்; அந்தணர் ஆரியர்; என்று கருதுவதற்குப் போதுமான காரணம் இல்லை;

அந்தணர் தொழில்

நூலே, கரகம், முக்கோல் மணையே,
ஆயுங்காலை அந்தணர்க்குரிய
(தொ. பொ. மர. 66)

முப்புரிநூலும், நீர்க்குண்டானும், முக்கோலும், ஆசனமும் அந்தணர்க்குரிய பொருள்கள்

அந்தணாளர்க்குரியவும் அரசர்க்கு
ஒன்றிய வரூஉம் பொருளுமாருளவே
(தொ. பொ. மர. 98)

அந்தணாளர்க்குரிய பொருள்களிலும் அரசர்க்குப் பொருந்திவரும் சில பொருள்களும் உண்டு.

அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே
(தொ. பொ. மர. 80)

அநதணாளர்க்கு அரசாளும் உரிமையும் உணடு.

அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பின் பிறர் பிறர் திறத்தினும்
(தொ. பொ. கற்பு. 5)

"அந்தணாகளிடத்திலும் சானறோர்களிடத்திலும் அளவற்ற பெருமையையுடைய தேவர்களிடத்திலும்"

அந்தணர் மறைத்தே
(தொ. எழு. பிறப்பு. 20)

"அந்தணர்கள் படிக்கும வேதத்திலே கூறப்படுகின்றது."

அந்தணர்கள் தவம் செய்வதற்கு உரியவர்கள். அரசாள்வதறகும தகுதியுடையவர்கள். இல்லறத்தோரால் வணங்கி உபசரிப்பதற்கு ஏற்றவர்கள். வேதங்களைப் படிததவர்கள், இவைகள் அந்தணரைபபறறித் தொல்காப்பியததில் கூறப்படுவன. மேலே காட்டிய சூத்திரங்களால் இவற்றைக்காணலாம்.

அந்தணர்கககு அறுவகைதத தொழில்கள உண்டு. அத்தொழில்கள் இவை இவை என்பதைச சாதிப் பிரிவு எனற பகுதியில் கூறப்பட்டது. "அறுவகைபபட்ட பார்ப்பன பககமும்" ஏ்னற சூத்திரம அநதணர்களின் அறுவகைத் தொழிலகளைக் குறிப்பதாக அஙகே காட்டப் பட்டிருக்கினறது. "அறுவகைபபட்ட பாாப்பன பக்கமும்" என்பது "அறுவகைபபட்ட அந்தணர்பக்கமும்" எனறிருப்பதே பொருத்தமாகும். "அந்தணர்" எனற சொல பிற்காலததினரால், உரையாசிரியர்களுக்கு முன்பே "பார்ப்பன" என மாற்றப்பட்டிருக்கவேண்டும்.

பார்ப்பார் தொழில்

தலைவனுக்கும் தலைவிககும் ஊடல் தோனறும்போது அவர்களுடைய ஊடலை நீக்கிக கூடிவாழச செயவதற்குச்

சிலர் காரணமாயிருப்பார்கள். அவர்கள் யார் யார்? என்பதைக் குறிக்கிறது ஒரு சூத்திரம். கீழ்வருவதே அச் சூத்திரம்.

தோழி, தாயே, பார்ப்பான்' பாங்கன்,
பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,
கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்,
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப

(தொ. பொ. கற்பு 52)

தலைவனும தலைவியும ஊடலை விட்டுக் கூடிவாழ்வ தற்குப் பார்ப்பானும் காரணமாயிருப்பான என்று குறிப் பிட்டிருப்பதைக் காணலாம்.

ஒரு ஆணும் பெண்ணும் களவு மணவாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும்போது அதற்குத துணைசெய்ப வர்கள், துணைசெய்வதற்குத் தகுதியுடையவர்கள் யார் யார் என்பதை விளக்குகிறது மற்றொரு சூத்திரம்.

பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியொடு
அளவியன் மரபின் அறுவகையோரும்
களவிற் கிளவிக்கு உரியர் என்பர்.

(தொ. பொ. செய் 181)

பார்ப்பான், தோழன், தோழி, செவிலித்தாய், சிறந்த தலைவன், தலைவி என்ற அளவினையுடைய அறுவகையினர் தாம் களவுப்புணர்ச்சியிலே குறிப்பிடுவதற்கு உரிய வர்கள்.

"பார்ப்பான் என்பான் நன்றும் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவான் எனப்படும்" என்று பேராசிரியர் உரை கூறினர். களவு மணத்திலே ஈடுபட்டிருக்கும் தம்பதிக ளுக்கு உதவிசெய்யும் தொழில் பார்ப்பானுக்கு உண்டு என்பதை இதனால் அறியலாம்.

காதலனும், காதலியும் வெளிப்படையாக இல்லறம் நடத்தும கற்பு மணவாழ்க்கையிலே அவர்களுக்குத்துணை செய்பவர்கள் யார யார் என்பதை இதற்கு அடுத்த சூததிரம் எடுத்துரைக்கின்றது

பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணம் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த கிளவியொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற்குரியர்

(தொ. பொ. செய். 182)

பாணன, கூத்தன, விறலி, பரத்தை, வருங்காலத்தையும் அறியும் அறிவு நிரம்பிய பெரியோர், பொதுமக்கள், பாரட்டத்தகுந்த சிறப்பினையுடைய பார்ப்பான் முதலாக முன்னே கூறபபட்டவாகளும் பழமையான வழக்கப்படி கற்புமண வாழ்க்கையினபோது உதவி செய்வதற்கு உரியவர்கள்.

இதில் “பேணுதகு சிறப்பின் பார்ப்பான்” என்று அடைமொழியுடன பார்ப்பான பெயர் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இல்லறத்திலே வாழ்வோர்க்குத் துணை செய்வது பார்ப்பான தொழில் எனபதை இச்சூததிரத்தாலும் காணலாம. பார்ப்பார் செய்யும வேலைகள் எவை எனபதை விளக்கிக் கூறும் மற்றொரு சூததிரமும் உண்டு.

தலைவனது காம நிலைமையைத் தலைவியிடம் உரைத்தல்; தலைவியின காமநிலைமையைத தலைவனிடம சொல்லுதல்; தலைவனும தலைவியும ஊடல் நீங்கிக் கூடும் வகையிலே பேசுதல; தலைவனுடைய எண்ணத்தைக் கண்டறிந்து சொல்லுதல்; பசுவைக்கொண்டு இனி நடக்கப் போகும் நன்மை தீமைகளைக் கூறுதல்; செல்லுதற்குரிய நன்னாள் இன்னதென்று எடுத்துக்காட்டுதல்; இது

தியநாள என்று சொல்லிச செலவைத் தடுப்பது; இவை போன்ற செயல்களெல்லாம பார்ப்பார்க்குரியவை. இதனை

காமநிலை உரைத்தலும், தேர்நிலை உரைத்தலும்,
கிழவோன் குறிப்பினை எடுத்துக்கூறலும்,
ஆவொடுபட்ட நிமித்தம் கூறலும்,
செலவுறு கிளவியும், செலவழுங்கு கிளவியும்,
அன்னவை பிறவும் பார்ப்பார்குரிய

(தொ· பொ கற்பு. 36)

என்பதனுல அறியலாம.

பார்ப்பார் எனபவர்கள, பாணன், கூத்தன், விறலி, பாங்கன, தோழி முதலியவர்களைப்போல உயர்குடி மக களாகிய காதலன காதலிகளின ஒற்றுமை வாழ்வுக்கு உதவி செய்பவர்கள; நல்லநாள் கெட்டநாள் பார்ததுச் சொலலுவார்கள; சகுனம பார்த்தல குறிபார்த்தல முதலி வைகளிலும் தோசசியுளளவர்கள்; மேறகூறியவைகளைக் கொணடு இவவுண்மையை உணரலாம்.

யாகம் பணணுத பார்ப்பார் வகுபபு ஒன்று தமிழ் நாட்டிலே இருநதது. அவர்களுடைய தொழில் சங்கறுப்பது. சங்கை அறுத்து வளையலகளும், காதணி களும செயது விற்பனைசெய்து . வாழநதனர். இவர் களுககுச சஙகறுக்கும் பார்பபார் என்று பெயர்.

வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளை.............................(அகம் 24)

என்ற அகநானூற்றுபபாடல் இதற்கு ஆதரவு

“ வேளவி செய்யாத பார்ப்பான் கூர்மையான அரத திஞல் துண்டித்துச் செயத வளையல” என்பதே இதன் பொருள்.

நக்கீரரைப்பற்றிப் பேசப்படும் கதையிலே,“சஙகறுப்ப தெஙகள குலம். சங்கரனுர்ககு ஏதுகுலம்” என்று நக்கீரர்

பாடியதாக ஒருபாடலும் வழங்குகிறது. நக்கீரர் என்னும் புலவர் சங்கறுக்கும் பார்ப்பார மரபைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது.

மேலே கூறியவைகளைக் கொண்டு பார்ப்பனர் செய்யும் தொழில்கள் எவை எனபதைக் கண்டோம்.

இருவரும் தமிழரே

ஆகவே தமிழர்களிலே அநதணர் என்பவர்கள் ஒரு வகையினர்; பார்ப்பார் என்பவர்கள் ஒருவகையினர்; இருவரும வேறு வேறு வகுபபினர்; என்பதைக் காண லாம. பிறகாலத்திலே பார்ப்பாரையும், அந்தணரையும் ஒன்றாகவே கருதி விட்டனர்.

அநதணர்கள் கல்வியறிவிலே வல்லவர்கள; தமிழ மொழியையும், வட மொழியையும வேறு பல மொழிகளை யும் கற்றவர்கள்; மக்கள சமுதாயததிற்கு வழிகாட்டி உதவிய தலைவர்கள். அந்தணர், அரசர், வணிகர், வேளா ளர் எனற நால்வகைப் பிரிவுடைய நாகரிகம் பெற்ற தமிழர்களிலே முதல வகுப்பினரா யிருந்தவர்கள்; அரசர், வணிகர் வேளாளர் ஆகிய மூவருககு உறுதுணையா யிருந்து அரசுக்கும், வணிகததுககும், வேளாண்மைக்கும் உதவி செய்தவர்கள்.

பார்ப்பார் என்பவர்கள், பாணன், கூததன், பாங கன், தோழி முதலியவர்களைப் போல உயர்ந்த வகுப்பி னருககு ஊழியஞ் செயது அவர்கள் உதவி பெற்று வாழ்ந் தவர்கள்

அந்தணரும் பார்ப்பாரும் தமிழர் மரபினரே. இவர் களில் யாரும அந்நியர் அலலர்; அந்தணர் நாகரிகம பெற்ற நால்வகை வகுப்பைச சேர்ந்தவர். பார்ப்பார் அவர்களைக காட்டிலும் கீழப்பட்ட வகுபபைச் சேர்நதவர்

கள். தொல்காப்பியததைக கொண்டு நாம் இந்த முடிவுக்குத்தான் வரலாம். ஆயினும் இது இன்னும் நன்ருக ஆராய்ந்து தீர்மானிகக வேண்டிய செய்தி. பாாபபார் வேறு, அந்தணர் வேறு என்று கூறும் இககூற்று முடிவானதன்று. இவ்வாறு சொல்லுவதற்கு இடமுண்டு ; இதற்குத் தொல்காப்பியம் ஆதரவளிக்கிறது ; இதுவே இங்கு எடுத்துக் காட்டப்பட்ட செய்தி.

12. வடமொழி வேதம்

தொலகாப்பிய காலத்திலே தமிழ் நாட்டிலே வடமொழியும் வழங்கி வந்தது. தமிழர்களிலே கல்விப் பயிற்சியும் உயர்ந்த ஒழுக்கமும் உடைய அந்தணர்கள் தமிழ்க் கல்வியோடு வடமொழிப் பயிற்சியும் பெற்றிருந்தனர். வடமொழி வேதக் கொள்கைகளும, தமிழர் கொளகைகளும் வேறறுமை காண முடியாமல தமிழ் நூல்களிலும் வடமொழி நூல்களிலும் புகுந்தன. இந்த அளவுககு வடமொழியாளர்க்கும தமிழர்ககும தொடர்பு ஏற்பட்டிருந்தது. தொல்காபபியரும வடமொழிப் பயிற்சி உள்ளவர். அக்காலத்தில் உயாந்த வகுப்பினரும, தாழ்நத வகுப்பினரும் ஒருவரை ஒருவா வெறுக்காமல் ஒன்ருகப் பழகியது போலவே, தமிழும், வடமொழியும வெறுப்பின்றித் தமிழ் நாட்டிலே பரவியிருந்தன.

வேதத்தைப பற்றித் தொல்காப்பியர் தமது நூலிலே குறிப்பிட்டுளளர். எழுததுக்களின் ஒலியைப் பற்றியும், அவைகளை உசசரிக்கும முறைகளைப் பற்றியும் எழுத்ததிகாரத்தில் பிறப்பியலில் பேசப்படுகிறது. அவ்வியலின் இறுதிச் சூத்திரததில் “அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே” என்று கூறப்பட்டுள்ளது. “எழுததுக்களின் உச்சரிப்பைக் கூட்டியும் குறைத்தும் குற்றமற உச்சரிக்கும் முறைகள் அந்தணர்கள் பயிலும வேதத்தில் விளக்கமாகக் கூறப்படுகிறது” என்ற கருத்தை அச சூததிரம் தெரிவிக்கின்றது.

ஒருவனும் ஒருத்தியும சந்தித்துக் காதல கொண்டு கலந்து வாழும் களவு மணததைப் பற்றிக் கூறும்போது, அதைக் கந்தருவ மணம் போன்றது என்று தொல்காப்பியர்

கூறுகிறார். வடமொழி வேதத்திலே சொல்லப்படும் எண் வகை மணங்களிலே கந்தருவ மணம் என்பதும் ஒன்று.

கந்தருவ மணமும் களவு மணமும் ஒன்றல்ல. களவு மணமே கற்பு மணமாக மாறுவது. களவில்லாமல் கற்பில்லை. கற்பு மணத்திற்குக் கால்கோளாயிருப்பது களவு மணமே தான். கந்தருவ மணம் இப்படியல்ல. கந்தருவ மணம் செய்து கொண்டவர்கள் பிறகு மணத் தம்பதிகளாய் நீடித்து வாழ்வார்கள் என்று சொல்ல முடியாது. கந்தருவர்கள் என்ற தேவ சாதியினரைச் சேர்ந்த ஒருவனும் ஒருத்தியும் சந்திக்கும்போது காமங்கொண்டு கூடி மகிழ்வார்கள் என்பது கதை. இதைப் போல ஒருவனும் ஒருத்தியும் சந்தித்துக் காதல் கொண்டு கலந்து மகிழும் அந்த அளவு வரையிலும், அது கந்தருவ மணத்தைப் போன்றது என்பதே தமிழ் நூலாசிரியர்களின் கருத்து. இதைத்தான் தொல்காப்பியரும் தெரிவித்துள்ளார்.

காமக் கூட்டம் காணுங்காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே

என்பது தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியலின் முதற் சூத்திரம்.

"ஒருவனும் ஒருத்தியும் தாமே சந்தித்துக் கூடும் காமக் கூட்டத்தைப்பற்றி ஆராயும் போது, அது வேதத்திலே ஓரிடத்திலே கூறப்படும் எண்வகை மணங்களிலே யாழ்வாசிக்கும் திறமையுடைய கந்தருவர்களின் வழக்கத்தைப் போன்றதாகும்" என்பதே இதன் பொருள்.

எண்வகை மணம் தமிழ் நூல்களில் கூறப்படவில்லை. தமிழர் தங்கள் மணத்தை எட்டுவகையென்று வரையறுத்துக் கொள்ளவும் இல்லை. ஆகையால் இச் சூத்திரத்திலே சொல்லப்படும் **மறை** என்பது வட மொழி வேதமே தான்.

தொல்காப்பியர், வேதத்தைக் குறிப்பிடும் மறை என்னும சொல் வடமொழி வேதம் என்பதில் ஐய மில்லை. ஆனால அவை இன்றுள்ள இருக்கு, எசுா, சாமம், அதர்வணம என்ற நான்கு வேதங்களா? அல்லது வேறு ? இது ஆராய்வதற்குரியது.

இன்றுள்ள வேதங்களைத்தான் தொல்காப்பியம் குறிப் பிடுகிறது ; வேறு வேதஙகளைக் குறிப்பிடுவதாக எண்ணு வது தவறு ; என்பர் சிலர்.

தொலகாப்பியததிற்கு உரை யெழுதிய நசசினார்க் கினியர் இதற்கு மாறுன கருத்தைக கூறுகிறார். உரை யாசிரியர் நச்சினார்க்கினியர் வடமொழியிலும் தமிழ்மொழி யிலும் வல்லவர். சிறந்த பல நூல்களுக்கு உரை யெழுதி யிருப்பவா. தமிழ் நாட்டு அந்தணர் குடியிலே பிறந்தவர்.

தொலகாப்பியச் சிறப்புப் பாயிரத்திலே காணப்படும் நான்மறை என்னும் சொலலுக்கு அவர் எழுதியிருக்கும் உரை குறிப்பிடத் தககது.

“நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமை யால் நானமறையென்ருர். அவை, தைததிரியமும் பௌடி கமும், தலவகாரமும், சாம வேதமுமாம. இனி இருககும் எசுவும் சாமமும் அதர்வணமும என்பாரும் உளர். அது பொருந்தாது. இவர் இந்நூல செய்த பின்னர், வேத வியாதர் சின்னுட் பல்பிணிச சிற்றறிவினோர் உணர்தற்கு, நான்கு கூருக இவற்றைச் செய்தாராதலின்”

இதுதான நான்மறையைப் பற்றி நச்சினார்க்கினியர் கூறியிருககும் விளக்கம்.

நச்சினார்ககினியர் குறிப்பிடும் நான்மறைகள் வட மொழி மறைகள் அல்ல. தமிழிலே நான்கு வேதங்கள் இருந்தன. அவைகளைத் தான் நச்சினார்க்கினியர் குறிப் பிடுகிறார் என்பர் சிலர்,

தமிழிலே நான்கு வேதங்கள் இருந்தன; அவைகள் கடல்கொண்ட தமிழகத்தில் மறைந்து விட்டன; தமிழ்க் குடியிலே பிறந்த தொல்காப்பியர் அந்த நான்கு வேதங்களைத்தான் குறிப்பிட்டிருக்கவேண்டும்; என்பது வெறும ஊகமேயொழிய உண்மையன்று. தமிழிலே நான்மறைகள் இருந்தனவா என்பதே ஐயத்திற்கு இடமான ஆராய்ச்சியாகும்.

தொல்காப்பியர்: "அந்தணர் மறைத்தே" என்று குறித்திருப்பதும, எட்டு வகை மணங்களைக் குறிப்பிட்டிருப்பதுமே அவை வடமொழி வேதங்கள்தாம் என்பதற்குப் போதுமான சான்றாகும். ஆகையால் தமிழ வேதங்கள் என்பது பொருந்தாது.

13. உலகத் தோற்றம்

"இப் பரந்த உலகம் ஒரு தனிப்பெருங் கடவுளின் படைப்பு. ஒருபொருள் இருந்தால் அதை ஆக்கிய தலைவன் ஒருவன் இருக்கவேண்டும். எப்பொருளும் தாமே தோன்றமுடியாது. காலந்தவறாமல் பொழுதுபோவதும், பொழுது விடிவதும் கடவுள் கட்டளையே. சூரியனையோ, சந்திரனையோ யாராலும் உண்டாக்க முடியாது. கடல், மலை, நிலம், மரம் செடி கொடிவகைகள், மக்கள், விலங்குகள் பறவை, ஊர்வன, நீர்வாழ்வன எல்லாம் இறைவன் ஏற்பாடே" இது கடவுள் நம்பிக்கையுடையவர்களின் கொள்கை. மதவாதிகளின் நம்பிக்கை. பழயபுராணங்கள் இக் கொள்கையைத்தான் கூறுகின்றன.

"இந்த உலகம் எவராலும் உண்டாக்கப்படவில்லை. சூரியனிடமிருந்து தெறித்துவிழுந்த ஒரு நெருப்புத்துண்டே இந்த உலகம். இந்த நெருப்புத் துண்டின் மேல்பாகம் ஆறிய பிறகே கடலும், நிலமும், மலைகளும் தோன்றின. எல்லாவுயிர்களும் இயற்கையாகத் தோன்றியவை. நீரிலே தோன்றிய சிற்றுயிர்களே பறவைகளாய், விலங்குகளாய், மக்களாய் மாற்றமடைந்தன. சூரியனுடைய சுழற்சியினாலேயே இவ்வுலகம் நிலைபெற்றிருக்கின்றது" இதுவே உலகத் தோற்றத்தைப்பற்றி இன்றைய விஞ்ஞானிகள் கண்டறிந்து கூறுவது.

"உலகம் ஒருவருடைய படைப்பும் அன்று. தாமே இயற்கையாகத் தோன்றியது. பல சிற்றணுக்களின் சேர்க்கையே உலகம்" இக்கொள்கையுடையோர் பண்டைக் காலத்திலும் நமது நாட்டிலிருந்தனர்.

" உலகம கடவுள் படைப்பு அன்று; தானேதோன்றி யது; மண், நெருப்பு, தண்ணீர், காற்று, வானம் ஆகிய ஐந்து இயற்கைப் பொருள்களும் கலந்து உருவாகியிருப் பதே இவவுலகம் " இதுவே தொல்காப்பியர் கூறுவது.

"நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்" (தொ. பொ. மர. 86)

இதனல் உலகததோற்றததைப்பற்றித் தொல்காப பியர் கருத்து இன்னதெனறு தெளிவாகினறது.

சார்வாக மதம் கடவுள் உண்டெனறு ஒப்புக்கொள்வ தில்லை. உலகம் ஐம்பூதங்களின் சேர்ககையால் தாமே தோன்றியதெனபதே சார்வாகர் கொள்கை. சார்வாகம இந்துமதப் பிரிவுகளில் ஒன்று. இதையே உலோகாயுதம் எனறு கூறுவர். பிருகஸபதியின மாணவன சார்வாகன. அவனல் உண்டாக்கப்பட்டதே சார்வாக மதம்,

புத்தமதம, சமணமதங்களும் உலகம கடவுள் படைபபு என்பதை ஒப்புகொள்வதில்லை. பூதஙகளின் சேர்க்கையே உலகம் என்பதுதான் அம்மதங்களின் கொள்கையும். ஆனல் அவர்கள் நானகு பூதங்களையே ஒப்புக்கொள்ளுவாாகள். வானத்தை ஒரு பூதமாக அவர் கள ஒப்புக்கொளவதில்லை. ஆதலால் சமணர்களையோ, புத்தர்களையோ பின்பற்றித தொல்காப்பியனர் இவவாறு கூறினர் எனறு சொலல முடியாது,

உலகத் தோற்றத்தைப்பற்றித தொல்காப்பியா கூறி யிருககும் கருத்தும், சார்வாகர், புத்தர், சமணர்களின கருததும ஒன்றுபட்டிருககினறன. இயற்கைத் தோற்றமே உலகம் என்பது தொலகாப்பியர் கருத்து. ஆயினும் தொல் காப்பியம் கடவுளையும, வேறு பலதெய்வங்களையும் மறுகக விலலை. தொல்காப்பியர் கடவுள் நம்பிக்கையுள்ளவர் என்றே துணிநது கூறலாம.

14. தெய்வங்கள்

தொலகாபபியர் காலத்திலே தமிழர்களிடம் தெய்வ நம்பிகககை குடிகொண்டிருந்தது. தமிழாகள் பல தெய்வங்களே வணங்கிஞர்கள. தெயவ நம்பிககையையும், தெய்வ வழிபாட்டையும் பண்டைத தமிழர் நாகரிகமாகத்தான கொளளவேண்டும்.

தெய்வம் சுட்டிய
பெயர் நிலக்கிளவி

(தொ. சொ. கிளவி. 4)

" தெயவத்தைக் குறிககும் பெயர்ச் சொற்கள் " என்பது இதன பொருள.

மாயோன் மேயகாடுறை உலகமும்
சேயோன் மேயமைவரை உலகமும்
வேந்தன்மேய தீம்புனல் உலகமும்
வருணன்மேய பெருமணல் உலகமும்
முல்லே, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும்படுமே

[தொ. பொ. அக. 5]

முல்லே நிலததின் தெய்வம மாயோன். குறிஞ்சி நிலத்தின் தெய்வம் சேயோன். மருதநிலத்தின் தெய்வம் வேந்தன். நெய்தல் நிலத்தின் தெய்வம. வருணன். காடும் காடுசார்ந்தநிலமும் முல்லே. மலேயும் மலேசார்ந்த நிலமும் குறிஞ்சி, நீர்வளம் நிறைந்த ஊரும், ஊரைசசார்ந்த இடங்களும் மருதம். கடற்கரையும், கடற் கரையைசசார்ந்த இடமும் நெய்தல்.

பண்டைத் தமிழர்கள நிலத்தை இவ்வாறு நான்கு வகையாகவே பிரித்தனர். இநதக் காரணத்தாலேயே உலகத்திற்கு நானிலம் எனற பெயரும எழுந்தது. நானகு வகையான நிலம்—நானிலம். நான்கு, நிலம், எனற இரண்டு சொற்களே நானிலமாயிற்று.

பிற்காலததினர் பாலை நிலம என்ற ஒரு பகுதியைத் தனிநிலமாகச சேர்த்துக்கொண்டனர். பாலையைசசேர்த்து நிலததை ஐவகையென்று அறைந்தனா. பாலை தனி நிலமன்று. மழையின்றி—நீரின்றி வறட்சியும், கதிரவன் கொடுமையும் எந்த நிலத்தில் காணப்பட்டாலும் அப்பகுதி பாலை நிலமாகும். இதுவே தொலகாப்பியா கருதது. இககாரணததால் பாலைக்குத தனிநிலமும தனிததெய்வமும் தொல்காப்பியரால் சொலலப்படவில்லை. ஆயினும் மற்ற நிலங்களைப்பற்றிய செய்திகளைச சொல்வது போலவே பாலைநிலத்தின் செய்திகளையும் கூறுகிறார். இதுபற்றி முன்னும் கூறப்பட்டுள்ளது.

ஒவவொரு நிலததின் இயறகையையும், அங்குள்ள மககளின் வாழககையையும, அஙகு நடைபெறும நிகழச்சிகளையும், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று பகுதிகளாக்கிக கூறுகிறா தொலகாப்பியர். இந்த மூனறனுள் கருப்பொருள்தான் முதன்மையானது.

மக்கள் வணஙகும் தெய்வம; அவாகள் உண்ணும் உணவு; அவர்கள் வாழும் நிலததில உள்ள விலங்குகள்; பறவைகள்; அஙகே வளர்கதிருககும மரங்கள்; அந்த நிலத்து மக்கள் அடிககும் பறைகள்; அவர்கள் செய்யும் தொழில்கள்; அவர்கள் பொழுதுபோக்குக்காக வாசித்து மகிழும் யாழ்; இவைபோன்றவை கருப்பொருள். கருப்பொருள்கள் எல்லா நிலங்களிலும் உண்டு. நிலங்களுக்குத் தக்கவாறு தெய்வம், உணவு, விலங்கு, பறவை, மரம்,

தொழில், யாழ் முதலியவை வேறுவேருக மாறு பட்டிருக்கும்.

தெய்வம், உணவே, மா, மரம், புள், பறை,
செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப
[தொ பொ. அக. 18]

கருபபொருள்கள் எவை எனபதைக் கூறும் சூத்திரம் இது. ஒவ்வொரு நிலததிற்கும் உரிய இன்றியமையாத கருப்பொருள்களிலே "தெயவம்" முதலில வைக்கப் பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ் நாட்டிலே இன்றும் பலவகைப்பட்ட தெய்வ வணக்கங்களையும், திருவிழாககளையும் பார்ககினறோம். தெயவததின பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு, கையில், வேல, சூலம் முதலிய ஆயுதங்களை ஏந்தி ஆவேசங் கொண்டு ஆடுகினறனர். காளி, மாரி, வீரன், காடன, மாடன் என்ற பல பெயர்களைக் கொண்ட கோவிலகளிலே இததகைய ஆவேச ஆட்டங்கள் இன்றும் நடைபெறுகின்றன. இபபடி ஆடுகின்ற ஆவேசக்காரர் களின் மேல தெய்வமே வந்து ஏறியிருப்பதாகப் பாமர மககள் நம்புகின்றனர். இவர்களிடம மக்கள் தங்கள் குறைகளைச் சொலலிப பரிகாரம கேட்கின்றனர். இது போன்ற நமபிக்கைகளும், நிகழ்ச்சிகளும் தொல்காப்பிய காலத தமிழர்களிடமும் இருந்தன. இதனை

வெறி அறிசிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும்
(தொ. பொ. புற. 5)

என்ற சூத்திரத்தால் காணலாம். கொல்லுந் தன்மையுள்ள கூர்மையான வேலைததாங்கியிருப்பவன் வேலன். அவன தெய்வத்தின் கோபத்தை அறிந்து அதைத் திருப்தி செய்

யும் சிறப்புள்ளவன். அவன் காந்தள் மலர் மாலையைப் பூண்டு ஆவேசங் கொண்டு ஆடுவான், இப்படி ஆடும் நிகழ்ச்சிக்குக் காந்தள என்று பெயர்.

அரசனைத் திருமாலுக்கு ஒப்பிட்டு வாழ்த்தும் வழக்கம் தொல்காப்பியர் காலத்திலிருந்தது. இதைப் **பூவைநிலை** என்று கூறுகிறுர் தொல்காப்பியர். இதனை,

மாயோன் மேய மன்பெரும் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவைநிலையும்

(தொ. பொ- புற. 5)

என்பதனுற் காணலாம். " மாயோனுகிய திருமாலுக்குரிய நிலைத்த பெருமையையும், அழியாத புகழையும் மன்னனேடு இணைத்துப் பாராட்டும் பூவை நிலையும் " என்பது இதன பொருள்.

போரிலே வெற்றியைப் பெற்றபின் போர் வீரர்கள் கொற்றவைககுப் பலியிட்டு வணங்குவார்கள்; போரிலே வெறறியடைவதறகுத் துணை செய்யும் தெய்வத்திற்குக் கொற்றவை என்று பெயர். கொற்றவையைக் காளியென்று கருதினர் பிற்காலத்தினர். கொற்றவைக்குப பலியிட்டு வணங்குவதைக் " கொற்றவை நிலை " என்று குறிக்கின றது தொலகாப்பியம். இதனை,

மறம்கடை கூட்டிய துடிநிலை, சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே

(தொ. பொ. புற. 4)

என்ற சூத்திரத்தாற் காணலாம். " வீரத்தினல பெறற வெற்றியைக கொண்டாடும் துடிநிலையும், அவ்வெற்றிக்குத் துணைசெய்த சிறந்த **கொற்றவை** என்னும் தெய்வத்தைப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கும் கொற்றவை நிலையும் வெட்சித் திணையை ஒட்டியதாகும் " என்பது இதன் பொருள்.

மேலே காட்டிய காந்தள நிலை, பூவை நிலை, கொற்றவை நிலை, எனபவை முறையே முருகனையும், திருமாலையும் காளியையும் குறிக்கின றன.

தொல்காபபியர் காலத்திலே, தமிழ் நாட்டிலே சூரிய னையும, சந்திரனையும், அக்கினியையும தெய்வமாக வணஙகி வந்தனர். இவவழக்கம தொல்காப்பியருக்கு முன்பே இருந்தது. வடமொழி வேதங்களிலே சூரிய, சந்திர, அக்கினி வணக்கப் பாடல்கள் அமைந்திருககின் றன. இவவகையிலே வடமொழியின போக்கும, தமிழ் மொழியின் போக்கும் ஒத்திருக்கின றன. இதனைக் "கொடி நிலை" எனறு தொடங்கும் கீழ்வரும் சூத்திரத்தால் காணலாம.

கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் மன்னிய மூன்றும்
கடவுள வாழ்த்தொடு கண்ணிய வருமே
(தொ. பொ. புற. 27)

சூரியன, நெருப்பு, சநதிரன் என்ற மூன்றை வாழ்த்து வதும் கடவுள வாழ்ததுப் போலவே எண்ணப்பட்டு வரும" என்பதே இச் சூத்திரத்தின் பொருள். கொடி நிலை—உச்சியில் நிற்பது; சூரியன். கந்தழி—பற்றுக் கோட்டை அழிப்பது; நெருப்பு. வள்ளி—குளிர்ச்சியைத் தருவது; சநதிரன.

தெய்வம் வாழ்த்தலும் (தொ. பொ. களவு. 24)

ஏமுறுகடவுள் ஏத்திய மருங்கினும்
(தொ. பொ. கற்பு. 5)

தெய்வம் அஞ்சல் (தொ. பொ. மெய். 24)

தேவர்ப்பராய முன்னிலை
(தொ. பொ. செய். 133)

இவைகள் எல்லாம் பண்டைத் தமிழர்களிடம் பல தெய்வ வணக்க முறை இருந்தது என்பதையே காட்டு கின்றன.

கடவுள் என்றால் எல்லாவற்றையும் கடந்து நிற்பது; குணம் குறியற்றது; மனம் மொழி, மெய்களுக்கு எட்டாதது; என்று பொருள் கூறுகின்றனர். கடவுள் — கடந்து நிற்பது. பொருளும் சரியாகத்தான் காணப்படுகின்றது.

ஆனால் தொல்காப்பியத்தில் வழங்கும் கடவுள் என்ற சொல் இப்பொருளில் வழங்கப்படவில்லை; தேவர்கள் என்ற பொருளில் தான் வழங்கப்பட்டிருக்கின்றது.

> காமப் பகுதி கடவுளும் வரையார்
> ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்
>
> (தொ. பொ. புற. 23)

"காமப் பகுதியிலிருந்து கடவுளையும் நீக்கமாட்டார்கள். மக்கள் சார்பிலும் காமப்பகுதியை நீக்க மாட்டார்கள் என்று கூறுவர் புலவர்." என்பதே இதன் பொருள்.

மக்களிடம் காணப்படும் காம சம்பந்தமான — காதல் சம்பந்தமான நிகழ்ச்சிகள் தேவர்களிடமும் காணப்படும்; என்பதே இதன் கருத்து. இங்கே கடவுள் என்னும் சொல் தேவர்களையே குறிக்கின்றது.

தேவர்களுக் கென்று தனியுலகம் உண்டென்பதே தொல்காப்பியர் கருத்து.

> இமையோர் தேத்தும்
> எறிகடல் வரைப்பினும்
>
> (தொ. பொ. பொருளி 53)

"தேவர்கள் வாழும் உலகிலும், கடல்பொருந்திய மண்ணுலகிலும்" என்பதே இதன் பொருள்.

தொலகாப்பியர் காலத்திலே, திருமால், சேயோன், வருணன், வேந்தன், கொற்றவை, சூரியன, சந்திரன், அகக்னி முதலியவர்கள் தெய்வஙகளாக வணங்கப்பட்டனர். இன்னும், கூற்றுவன, தேவர்கள், பேய் பிசாசுகளும் இருப்பதாகவும் தமிழா கள் நமபினர்.

தெய்வ வணக்கம தமிழ் நாட்டிலிருந்தது. தமிழர்கள் பல தெய்வஙகளை வணங்கி வந்தனா; என்பதற்கு இவை போன்ற பல ஆதரவுகள் தொல்காப்பியத்திலே காணப் படுகின்றன. இவ்வழக்கம தமிழர்களிடம இயற்கையாகவே தோன்றியதாகும. வேறு எவராலும் புகுத்தப்பட்டதும் அன்று. போதிககப்பட்டதும் அன்று.

வீரர்களுக்குக கலநட்டு, அவாகளை த தெய்வம்போல் எண்ணி வணங்கும் வழக்கமும தமிழ நாட்டிலிருந்தது இதனை விககிரக வணககப பகுதியிலே காணலாம்.

நால்வகை நிலஙகளுககும் தெய்வஙகளாகக் குறிககப் பட்டிருப்பவர்களும, அந்த நிலத்திலே வாழ்ந்த சிறந்த வீரர்களாக இருந்திருக்கலாம்

15. விக்கிரக வணக்கம்

"கடவுள் எங்கும் நிறைந்தவர். அவருககு ஓர் உருவ மும் இல்லை. உருவம் உளளவர் கடவுள் ஆகமாட்டார். ஆண்டவனுககு உருவம் வைத்து வணஙகுவதைவிட அறி யாமை வேறொன்றுமில்லை" எனறு சில மதவாதிகள கூறு கின்றனர். மதப்பறறும், கடவுள் நமபிக்கையும் உளள அறி ஞர்களும இதை ஒப்புக்கொள்ளுகினறனர்.

சித்தர்கள் என்ற பெயருடைய தமிழர்களும் உருவ வணக்கததை வெறுத்தனர். சித்தர்கள் என்றால் அறிஞர் கள் என்று பொருள். கல்லாலும், செம்பாலும், உருவம் செய்துவைத்துக் கடவுளை வணங்குவதிலே பொருளில்லை யென்று புன்றனர்.

கல்லிலும் செமபிலுமோ இருப்பான்
எங்கள் கண்ணுதலே

என்பது ஒரு அறிஞா கூற்று.

பணடைத் தமிழகததிலே உருவ வணக்கம் இருந்த தில்லை; அது இங்நாட்டிலே குடிபுகுந்த ஆரியரால் புகுத்தப் பட்ட வழக்கம்; என்று சிலர் சொல்லுகின்றனா. இதற்கு ஆதரவு ஒன்றுமில்லை. இதுவெறுப்பைத் தூணடும் வீணான கூற்று. உருவ வணக்கமுறை எல்லா நாடுகளிலும் இருந் தது. பழய பைபிளைப் படிப்போர் இதைக் காணலாம். பல நாட்டு வரலாறுகளிலும இதைககாணலாம். தமிழ்நாட்டி லும் உருவ வணககமுறை ஏற்பட்டிருந்தது என்பதைத் தொல்காபபியத்தால் அறியலாம்.

போரிலே வீரச்செயல் புரிந்து மறைந்துபோன வீரர் களுக்குக் கல்நட்டு வணங்கும் வழக்கம் தமிழ்நாட்டிலே

இருந்தது. வீரர்களின் நினைவுக்குறியாக நடப்பட்ட கல்லில அவ்வீரர்கள் குடி கொண்டிருப்பதாகவே கருதினர். அந்தக கற்களுக்குப் படையலிட்டு வணங்கி வழிபாடு செய்தனர். விழாவெடுத்துக் கொண்டாடினர். இது தமிழர்களின பழமையான வழக்கம். இந்த வழக்கமே தமிழ்நாட்டில் விககிரக வணக்கத்தை வளர்த்தது.

இக்காலத்திலும் உருவம் செதுக்கப்படாத வெறுங் கற்களை கடவுளர்களின் பிரதிநிதிகளாகக் காட்சியளிப்பதைக் காணலாம். தமிழ்நாட்டில் பலபகுதிகளிலே வெறும் கற்களை நட்டு, அவைகளுக்குக காடன, மாடன, வீரன், சூரன் என்று பெயர்வைத்து வணங்கும் வழக்கத்தை இன்றும் பார்க்கிரேம. இது தமிர்களின் பரம்பரை வழக்கம். இறந்த வீரர்களுககுக் கல நாட்டி வணங்கும் முறையைத் தொல்காபபியம் விளககமாகக் கூறுகின்றது.

காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்,
சீர்த்தகு மரபில் பெரும்படை, வாழ்த்தல்
என்று இருமூன்று மரபின் கல்லொடுபுணர

[தொ. பொ. புற. 5]

காட்சி—கலலைத் தேர்ந்தெடுததல். கால்கோள்—அந்தக்கல்லை நடுவதற்கான ஆரம்பவிழாச் செயதல். நீர்ப்படை—அந்தக் கல்லைத் தண்ணீரிலே போட்டுச் சுததம் செய்தல். நடுகல—பிறகு அந்தக் கல்லை நடுதல. சீர்த்தகு சிறப்பில் பெரும்படை—மிகச் சிறப்பாகப் படைவீரர்கள் அந்தக் கல்லுக்கு மரியாதை செலுத்துதல், வாழ்த்தல்—எலலோருங் கூடி அநதக்கல்லிலே இறந்த வீரனுடைய ஆவி குடி கொண்டிருப்பதாக எணணி வாழ்தது வணங்குதல்.

தமிழர்கள வெகு காலமாக வெறுங் கல்லை நட்டுத் தெய்வமாக வணங்கினர்கள். சிற்பத் தொழிலிலே தேர்ந்த பின் மாண்டவர்களின் உருவங்களை மரத்திலும் கல்லிலும்

செதுக்கக் கற்றுக்கொண்டனர். அந்த உருவங்களை வைத்துத் தெய்வமாக வழிபாடு செய்தனர். முதலிலே மரத்தடிகளிலே இவ்வுருவங்களை வைத்து வணங்கினார்கள். பிறகு அவைகளுக்குக் கோயில்கள் கட்டத் தொடங்கினர். உலகங் கண்டு வியக்கும்படி தமிழர்கள் சிறபக்கலையிலே சிறப்படைந்ததற்கு இந்தக்கல் நாட்டும் வழக்கமே காரணமாயிருந்தது. இதைத் தவறு என்று மறந்துவிட முடியாது.

வீரர்களுக்குக் கல்நாட்டிக் கொண்டாடிய இந்தப் பழக்கத்திலிருந்துதான் பத்தினிப் பெண்டிர்களுக்குக் கல்நட்டு வழிபாடு செய்யும் முறையும் பிறந்தது அறிஞர்களுக்கும், துறவிகளுக்கும் கல்நாட்டி வணங்கும் வழக்கமும் பிறந்தது. இன்று தமிழ் நாட்டிலே மூலை முடுக்குகளில் எல்லாம் எண்ணற்ற பல கற்சிலைகள் காணப்படுகின்றன; அவைகள் சித்திர வேலைப்பாடுகளுடன் சிறந்து விளங்குகின்றன; உயிருள்ளவைபோலவே பல சிலைகள் காட்சியளிக்கின்றன. இதற்குக் காரணம் வீரர்களுக்குக் கல்நாட்டும் வழக்கந்தான். இவ்வழக்கமே தமிழர்களைச் சிற்பக்கலையிலே சிறப்படையும்படி செய்தது.

16. உயிரும் உடலும்

தொல்காப்பிய காலத்திலே தமிழ்நாட்டிலே இருந்த மதம் என்ன ? ஒரே மதம் இருந்ததா ? பலமதங்கள் இருந்தனவா ? தமிழர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் ? ஒரே மதந்தான் அக்காலத்தில் இருந்ததென்றால் அந்த மதத்தின் பெயர் என்ன ? அதன் கொள்கை யென்ன ? பலமதங்கள் இருந்தன வென்றால் அவைகளின் பெயர்கள் யாவை ? அவைகளின் தத்துவங்கள் எவை ? தமிழர்கள் பின்பற்றிய மதத்தின் கொள்கை என்ன ?

தொல்காப்பியத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது இக் கேள்விகள் எழுவது இயற்கை. இக்கேள்விகளுக்கு நாம் கூறும் பதில் "தொல்காப்பியர் காலத்தில் இன்று வழங்கும் பெயருள்ள எந்த மதமும் இல்லை" என்பதுதான்.

தெய்வ நம்பிக்கையும், தெய்வ வழிபாடும் மக்களிடம் வேரூன்றி நிலைத்த நெடுங்காலத்திற்குப் பின்னரே மதங்கள் தோன்றின. தாங்கள் நம்பிய எல்லாத் தெய்வங்களையும் பேதாபேதமின்றி மக்கள் வணங்கிய முறையிலே மாற்றம் ஏற்பட்டது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தெய்வத்தையோ, அல்லது குறிப்பிட்ட சில தெய்வங்களையோ வணங்கத் தொடங்கினர். இவர்கள் தாங்கள் வணங்கும் தெய்வங்களே உயர்ந்தவை; ஆக்கவும், காக்கவும் அழிக்கவும், ஆற்றலுடையவை; என்று தங்களுக்குள் வாதம் புரியத்தொடங்கினர். இவ்வாதம் வலுப்பெற்ற காலத்தில்தான் தங்கள் தெய்வமே உயர்ந்ததென்று உரைக்கும் மதங்கள் தோன்றின. இதன் பிறகுதான் மத தத்துவங்கள் பலவாறாகப் பெருகி வளர்ந்தன.

இன்றுள்ள மதங்கள், மத தத்துவங்கள் எல்லாம் பிறப்பதற்குமுன்பே தோன்றியது தொல்காப்பியம். ஆதலால்தான் எந்த மதத்தைப்பற்றிய குறிப்பும் அதில் காணப்படவில்லை, ஆனால் மதங்கள் பிறப்பதற்கு அடிப்படையான தத்துவங்கள் மட்டும் தொல்காப்பியத் தமிழர்களிடம் தோன்றியிருந்தன.

ஆன்மவிசாரணையும் நாகரிகச் சின்னமே

உயிர் வேறு, உடல் வேறு என்ற நம்பிக்கை தொல்காப்பியத் தமிழர்களிடம் குடிகொண்டிருந்தது. ஆன்மா வேறு, சரீரம் வேறு என்ற நம்பிக்கைதான் மத தத்துவங்களுக்கு இருப்பிடம். ஊழ்வினை உண்டென்ற கொள்கையும் அக்காலத்தில் ஊன்றியிருந்தது.

உயிர் வேறு, உடல் வேறு என்ற எண்ணமோ, இவைகளைப்பற்றிய சிந்தனையோ நாகரிகமற்ற மக்களிடம் உண்டாவதில்லை. உடலைப் பற்றிய சிந்தனையும், உயிரைப் பற்றிய எண்ணமும் காட்டு மிராண்டிகளிடம் இல்லை. ஆராயும் அறிவுபெற்ற மக்களிடந்தான் இச்சிந்தனை தோன்றும். ஆன்ம விசாரணை ஒரு நாகரிகச் சின்னம்.

"நாம் எப்படிப் பிறக்கிறோம். எப்படி வாழ்கிறோம். நாம் இறந்த பின் எங்கே போகிறோம். நாம் என்பது என்ன? செத்துப்போன உடலுக்கு இயக்கம் இல்லை. இயங்கிக் கொண்டிருக்கும் உடலிலிருந்து ஏதோ ஒரு பொருள் வெளியேறி விட்டது. இதனால் தான் உடல் நடமாட முடியாமல் பிணமாகி விட்டது." இப்படியெல்லாம் சிந்திக்கும் எண்ணம் நாகரிகமுடைய மக்களிடையிலேதான் தோன்றும்.

இன்றுள்ள இயற்கையாராய்ச்சியும், விஞ்ஞான ஆராய்ச்சியும் பண்டைக் காலத்தில் இல்லை. ஆகையால் அவர்கள், மக்கள் பிறப்பதையும், இயங்குவதையும்,

இறப்பதையும் வைத்துக்கொண்டு உயிர் வேறு உடல் வேறு என்று முடிவு கட்டினர். இன்று பழய மதங்கள் எலலாம் உடல் வேறு, அதை நடமாடச செய்யும் உயிர் வேறு, உயிரையும் உடலையும இணைக்கும் சக்தி வேறு, என்ற அடிப்படையின்மேல் கட்டப்பட்டிருப்பவைகள்தாம்.

உடம்பை நடமாடச் செய்யும உயிர் ஒரு தனிப் பொருள் என்பதே தொல்காப்பிய காலத்தமிழர் கொள்கை. எழுத்துக்களை உயிர் எழுததுக்கள், மெய்யெழுத்துக்கள், உயிர்மெய் யெழுததுக்கள், எனறு பிரித்திருப்பதற்கு இக் கொள்கைதான் அடிப்படை.

தாமே தனித்து ஓசை பெற்று இயங்குமு எழுத்துக கள் உயிர் எழுத்துக்கள. உயிரெழுத்தின உதவியில்லா விட்டால் இயங்க முடியாத எழுததுக்கள மெய்யெழுத்துக் கள். உயிருமு மெய்யும் சோநது இயங்கும் எழுத்துக்கள உயிர்மெய் யெழுத்துக்கள்,

காலம், உலகம், உயிரே. உடம்பே
(தொ. சொ. கிளவி. 58)

சென்ற உயிரின் நின்றயாக்கை
(தொ. பொ. புறத். 13)

உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்
(தொ. பொ. பொருளி. 8)

இவ்வாறு ஆன்மா வேறு, உடல் வேறு என்பதைக குறிககும் சூத்திரங்கள் பல தொல்காப்பியததிலே காணப் படுகினறன,

ஊழ்வினை நம்பிக்கை

ஊழ்வினை அதாவது பிராரத்வகர்மம உண்டு என் பதும் தொல்காப்பிய காலததுத் தமிழர்களின் கொள்கை. ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்ளு வதற்குக் காரணம ஊழ்வினை தான. அவாகளுடைய ஊழ்

வினைதான் அவர்களைச் சந்திக்கச் செய்கின்றது. இதுவே தொல்காப்பியர் கருத்து. இதனை,

> ஒன்றே வேறே என்று இருபால் வயின்,
> ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்,
> ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப,
> மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே
>
> (தொ. பொ. கள. 2)

என்ற களவியல் சூத்திரத்தால் காணலாம். "ஒத்த அழகும், ஒத்தபருவமும் உள்ள ஒரு ஆண்; ஒரு பெண; இவர்கள் இருவரும் ஒரே நிலத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். வேறு வேறு நிலங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். ஊழ்வினையின் கட்டளைப்படி இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் காதல் கொள்ளுவர். பெண்ணைக் காட்டிலும் ஆண் சிறந்தவனாயிருந்தாலும் குற்றமில்லை," இதுவே இச் சூத்திரத்தின் பொருள்.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் கிளவியாக்கம் 58 வது சூத்திரத்தில் பால் வரை தெய்வம் என்று ஊழ் வினையைக் குறித்திருப்பதும் நினைவு கூரத் தக்கது

மேலே கூறியவைகளால், தொல்காப்பிய காலத்திலே தமிழ் நாட்டிலே இன்றுள்ள எந்த மதங்களும் இல்லை. வேறு எந்தப் பெயருடைய மதமும் இருந்ததில்லை. மதங்களுக்கு அடிப்படையான உயிர், உடல், ஊழ்வினைக் கொள்கை மட்டும் இருந்தன. இதுவே நாம் காணும் உண்மை.

17. கலை வளர்ச்சி

தொல்காப்பியர் காலத்திலே தமிழ் நாட்டிலே பல கலைகளும் சிறந்து வளர்ந்திருந்தன. இக்காலத்தினர், நாடகம், சங்கீதம், நடனம் போன்றவைகளையே கலைகள் என்று கருதுகின்றனர். கற்றுக் கொள்ளப்படுவன வெல்லாம் கலைகள். நாம் அணியும் ஆடைக்குக் கலையென்றே ஒரு பெயர். ஆகவே நெசவும் ஒரு கலை. மக்கள் வாழ்வுக்குத் துணை செய்யும் தொழில்கள் யாவும் கலைகள் தாம். இதுவே பண்டைத் தமிழர்கள் கொள்கை. அறுபத்து நான்கு கலைகள் என்று சொல்லப்படுகின்றன. இந்த அறுபத்துநான்கு கலைகளும் அறுபத்துநான்கு தொழில்கள். இந்த அறுபத்துநான்கு தொழில்கள் இவைகள் என்பதை சுக்கிரநீதியென்னும் வடமொழி நூலிலே காணலாம்.

கூத்தும் பாட்டும்

சங்கீதம் நடனம், நாடகம் இவைகளையே உயிர் வாழ்க்கைக்குரிய தொழிலாகக் கொண்டவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்தனர். இவர்கள் இத்தொழில்களைச் செய்து வாழும்தனி வகுப்பினராகவே வாழ்ந்தனர்.

கூத்தர் என்பவர் ஒரு பிரிவினர். இவர்களுடைய தொழில் கூத்து. குதித்தல்-கூத்து. கூத்தில் இரண்டு வகையுண்டு. கதை தழுவிய கூத்து; கதை தழுவாமல் பாட்டின் பொருளுக்கேற்ப அபிநயம் பிடித்தாடும் நாட்டியம். இருவகைக் கூத்துக்களையும் நடத்திக்காட்டவல்லவர்களே கூத்தர்கள். இன்றும் கூத்தாடி என்ற ஒரு வகுப்பினர் தமிழ் நாட்டில் இருக்கின்றனர். பல கோயில்

களிலே திருவிழாக்களின் முடிவிலே கூத்தாடுவார்கள். பல கோயில்கள் இவர்கட்குக் காணியாட்சியாக உண்டு. இவர்கள் பண்டைக் கூத்தர் வழியினராக இருக்கலாம்.

பாணர் என்பவர் மற்றொரு பிரிவினர். பாண்-யாழ. பண்ணிலிருந்தே பாண் பிறந்தது. பண-இசை. பண்ணோகிய இசையைததரும் கருவியைப் பாண் என்று வழங்கியிருக கலாம். பாண் வாசிப்பதையே தொழிலாகக் கொண்ட வர்கள் பாணர்கள். யாழின் மூலம் இசைவிருந்தளிப்பதில் இவர்கள் வல்லவர்கள். இவர்களில் பெண்களைப் பாடினி என்று அழைப்பது வழக்கம். பாணர் வீட்டுப் பெண்கள் வாய்ப்பாட்டில் வல்லவர்களாயிருந்தனா. இத ஞல்தான் ஆண்களைப் பாணர் எனறும், பெணகளைப பாடினி என்றும் அழைத்திருக்கின்றனா.

பொருநர் எனபவர் மற்றொரு பிரிவினர். இவர்களிலே ஏர்க்களம் பாடுவோா, போர்க்களம பாடுவோா, பரணி பாடுவோர் எனப் பலவகையினர் உண்டு என்று நச்சினுர்க் கினியர் கூறுகின்றுர். ஏர்க்களம் பாடுதல; ஏருழுது விளைந்த தானியத்தைக குவிக்கும் இடத்தையும், அவ் விடத்திற்குரிய வணிகர், வேளாளா, குறுநிலமன்னர் போன்றோரையும் புகழ்ந்து பாடுதல். போர்க்களம் பாடு தல் போர்க்களத்தைப் புகழ்ந்துபாடுதல். பரணி பாடுதல வெற்றிபெற்ற அரசனுடைய பெருமையைச சிறப்பிததுப் பாடுதல். இவ்வாறு பிறரை ஏற்றிப் புகழ்ந்து வாழ்க்கை நடத்துவோர்க்குப் பொருநர் என்று பெயா.

இவர்களைச் சேர்ந்த பெண்களுக்கு விறலியர் என்று பெயர். விறல்-வெற்றி; திறமை. இசை, நடனம் முதலிய வைகளிலே திறமையுடையவர்கள்.

கூததர். பாணர், பொருநர், விறலியர் ஆகிய இவர் கள் அனைவரும் ஒரே வகுப்பினராகவும் இருககலாம். ஒரு

வகுப்பைச் சேர்ந்தவர்களிலே சிலர் கூத்துப்பழகியவர்கள் சிலர் யாழ் போன்ற வாத்தியங்கள் வாசிப்பதிலே வல்ல வர்கள்; சிலர் போர்க்களம், ஏர்க்களம், பரணி பாடு வதிலே சிறந்தவர்கள். இவ்வாறு இருந்திருக்கலாம். இவர்களுக்குச் சாதிப் பாகுபாடு இல்லை என்று கூறுகிறார் நச்சினார்க்கினியர். இத்தகைய இசைக்கலை, நாடகக்கலை யைத் தொழிலாகக் கொண்ட ஒரு வகுப்பினர் தொல்காப் பிய காலததிலேயே தமிழ் நாட்டில் வாழ்ந்தனர்.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்னபக்கமும்

(தொ. பொ, புற 30)

"ஆடுவதிலே தேர்ந்த கூத்தரும், பாடுவதிலே சிறந்த பாணரும, புகழ கூறுவதிலே வல்ல பொருநரும், எல்லா வற்றிலும் தேர்ந்த விறலியும் ஆகிய இந்த நால்வரும், வழி யிலே தம் கண்ணெதிரே தோன்றிய வறியோர்க்கு, தாம் யாரிடத்திலே செல்வம பெறறோம் என்பதைககூறி, அவரி டத்திலே சென்று செல்வம் பெறும்படி கூறிய பகுதியும்-" என்பதே இதன பொருள். இதனால் இசைக்கலை, நடனக் கலை, நாடகக்கலை வளர்ச்சியைக காணலாம்.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

[தொ. பொ. அக. 56]

நாடக வழக்கம் என்பது புனைந்துரைக் கதையை நாடகமாக நடத்துவது. இல்லாதவனைத் தலைவனாக—அதா வது கதாநாயகனாக வைதது—மக்கள் வாழ்க்கையைச் சிததிரிக்கும் பல நிகழ்ச்சிக்களைச் சேர்த்து எழுதி நடிக்கப் படுவதே நாடகமாகும். உலகியல் வழக்கம்—உலகிலே நடைபெறும் உண்மை நிகழ்ச்சிக்களைக் கூறுவது.

நாடக வழக்கத்தைப் பின்பற்றிப் பாடல்கள பாடுவதும், உலகியல் வழக்கத்தை அமைத்துப் பாடல்கள் பாடுவதும் பண்டைத தமிழர்கள் வழக்கம.

சிற்பக் கலை

தமிழ் நாடு சிற்பக் கலையிலே சிறப்புற்ற காலம் எது என்பதை அளவிட்டுரைக்க முடியாது. தொல்காப்பியம தோன்றுவதற்கு நெடுங்காலததிற்கு முன்பே தமிழர்கள் சிற்பக்கலையிலே சிறந்து விளங்கினர். மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும் கண்கவரும வனப்புடன் கட்டியிருந்தனர். கட்டிடக் கலையிலே தமிழர்கள் தலை சிறந்து விளங்கினர்.

முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
(தொ. பொ. புற. 8)

"எல்லாப் பாதுகாப்பும அமைந்த கோட்டைச் சுவரை முறறுகையிடுவதும் ; கைபபற்றுவதும." முழு முதல அரணம்—எல்லாவகையான பாதுகாப்பும் பொருந்திய கோட்டைச சுவர்.

தொல் லெயிற்று இவர்தல் [தொ. பொ. புற. 10]

"பழமையான கோட்டைச சுவரை அழிகக விரும்புதல்.

ஆர் எயில் [தொ. பொ. புற. 10]

"அரிய வேலைப்பாடுகள் அமைந்த மதில்"

பண்டைக் காலத்திலே நகரங்களும அமைந்திருந்தன. நகருக்குப் பாதுகாப்பாக நகரைச சுற்றிச் சுவர் எழுப்பி யிருந்தனர். பகைவர்களாலும், விலங்குகளாலும் பயமில்லாமல் மக்கள் வாழவதற்காகவே அச்சுவர்கள் எழுப்பப் பட்டன. அச்சுவர்களை ஒட்டி ஆழமான பள்ளம் வெட்டி அதிலே நீரை நிரப்பி யிருந்தனர். இதற்கு அகழி என்று பெயர். இதனை.

அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்
நீர்ச் செரு வீழ்ந்த பாசியும் (தொ. பொ. புற. 11)

என்பதனாற் காணலாம்.

பகையரசன் வெளியிலே கோட்டையை முற்றுகை யிட்டபோது, உள்ளிருக்கும் மன்னன் நொச்சியணிந்து, கோட்டையைப் பாது காப்பான். இதுவே நொச்சி.

அகழியின் இரு கரைகளிலும் நின்று பகையரசர்கள் போர் செய்வதற்குப் பாசி யென்று பெயர். நீரிலே படர்ந்திருககும் பாசி காற்றினல் விலகும்; பினனர்க் கூடும். இதுபோல் படைவீரர்கள் விலகியும், நெருங்கியும் நினறு போர் செய்வார்கள்.

வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும் (தொ. பொ. புற. 7)

" வருகின்ற வேகமுடைய வெள்ளத்தைக் கல்லணைதேக்கி நிற்பது போல், எதிரியின் படையைத் தான் ஒருவனே நின்று தடுத்துத் தன் படைக்குச் சேதம் வராமல் காப் பாற்றிய பெருமையாலும் "

ஆறுகளுக்குக் கல்லணை கட்டித் தண்ணீரைத் தேக்கி அந்நீரை வயல்களுக்குப் பாய்ச்சிப் பயிர்செய்யும் வழக்கம் பண்டைத் தமிழர் காலத்தில் இருந்தது.

உலோகப் பொருள்கள்

தொல்காப்பியா காலததிலேயே தமிழ் நாட்டில் இரும்பு பொன முதலிய உலோகங்கள் வழங்கின. அவை களால் ஆயுதங்களும், அணிகளும் செய்தனர். இரும்பைக கண்டெடுத்து ஆயுதங்கள் செய்ய அறிந்த பிறகு தான் மக்களுடைய நாகரிகம வளர்ச்சியடைந்தது.

வாள் என்னும் ஆயுதம் சிறநத போர்க் கருவிகளிலே ஒன்று. இது இரும்பினலை செய்யப் பட்டதாகும்.

வாள் மலைந்து எழுந்தோன் *[தொ. பொ. புற. 5]*

வாளோர் ஆடும் அமலை
ஒள்வாள் வீசிய நூழில் *(தொ. பொ. புற. 14)*

அம்பு, வேல் முதலிய ஆயுதங்களையும் அக்காலத்தினர் போர்க் கருவிகளாகப் பயனபடுத்தினர். இவைகளும் இரும்பினால் செய்யப் பட்டவைகள் தாம.

கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்
(தொ பொ. புற. 13)

வேல்மிகு வேந்தன் *(தொ. பொ. புற. 14)*

பகைதாங்கும் வேல் *(தொ. பொ. புற. 17)*

தொல்காப்பிய காலத்தில் பொன்னும் செல்வத்திலே சிறந்த பொருளாக வழங்கி யிருநதது. அதைச செல்வப பொருளாகவும் சேமித்துப் போற்றினார்கள் ; அதனால் ஆபரணங்கள் செய்தும் அழகுக்காக அணிந்தனர்.

''**பொற்பே பொலிவு**'' *என்பது உரியியல் சூத்திரம். பொன் என்ற சொல்லிலிருந்தே பொற்பு என்னும் சொல் பிறந்தது. பொன் என்றும் மங்காத எழிலும் ஒளியும் உடையது. பொன்னிலிருந்து தோன்றிய பொற்பு என்னும் சொல்லுக்கு ஒளிஎன்று பொருள் உரைத்தார் தொல்காப்பியர்.*

காதொன்று களைதல்
அணிந்தவை திருத்தல் *[தொ. பொ. மெய்.14]*

இழையே *(தொ. பொ. கள.4)*

இவைகள் அணிந்து கொள்ளும் ஆபரணங்களைக் குறிக்கின்றன. காதொன்று களைதல்— காதில் அணிந்துள்ள தோட்டை நழுவவிடல். அணிந்தவை திருத்தல்—அணிந்திருக்கும் ஆபரணங்களைச் சரியாகத் திருத்தல். இழை— பொன்னால் செய்யப்பட்டது.

இவைகளாலும், அரசர்க்கு முடி முதலியன கூறப் படுவதாலும் பொன்னால் அரிய வேலைப்பாடுகள் அமைந்த அணிகலங்கள செய்யுந் தொழிலும—கலையும் தமிழ்நாட் டில் சிறந்திருந்த செயதியைக் காணலாம்.

உடைபெயர்த்து உடுத்தல் [தொ. பொ மெய். 14]

இதனால நெய்யுந்தொழிலும் தொல்காப்பியர் காலத தில நிலைத்திருந்தது என்பதைக் காணலாம்.

சஙகீததிற்குரிய கருவிகளைத் தோற்கருவி, துளைக் கருவி, நரமபுக கருவி, கஞ்சக் கருவி, எனறு நால்வகை யாகக் கூறுவா. பறை, முரசு, முழவு, தண்ணுமை போன்றவைகள் தோலால செய்யப்படும் கருவிகள். குழல் போனறவைகள் துளையிட்டுச செய்யப்படும கருவிகள். யாழ்போன்றவைகள் நரமபுகளால் நாதம் எழுப்பப்படும் கருவிகள். தாளம் போடுவதற்காகச் செய்யப்படும ஜாலரா கஞ்சககருவி.

இததகைய கருவிகளைச் செய்யும் கலையும் இசைக் கலையிலே வலலவாகளான தமிழர்களிடம் இருந்திருக்க வேணடும். ஓவியம் முதலிய கலைகளிலும் தமிழர்கள் உயர்ந்திருந்தனர். ஆகவே தொலகாப்பியா காலத்தில் தமிழர்கள் பல கலைகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந் தனா என்பதில் ஐயமில்லை.

18. நால்வகைப் படைகள்

தொல்காப்பிய காலததுத் தமிழர்கள் குதிரைவண்டிகள் வைததிருந்தனர். யானையின மீது ஏறி ஊர்ந்தனர். குதிரைகளின்மேலும் ஏறிசசென்றனர்.

அக்காலத்தில் தோ எனறு குறிககப்படுவது குதிரை வண்டியே. இன்றுள்ள குதிரை வண்டிகளுககும அக்காலத்திலிருந்த குதிரை வண்டிகளுக்கும் வேற்றுமையுண்டு. அக்காலக் குதிரை வண்டிகள் இனறு கோயிலகளிலே காணப்படும தேர் உருவத்தில் இருந்திருக்கலாம.

போர்ப் படைகளிலே, தேர்ப்படை, யானைபபடை, குதிரைப்படை, காலாட்படை எனற நால்வகைப படைகளும இருந்தன.

தேரும், யானையும், குதிரையும், பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப

(தொ. பொ. மெய். 17)

இச சூத்திரம தொல்காபபியர் காலத்திலிருநத ஊர்திகளைக் குறிப்பிடுகின்றது. தொல்காப்பியர் காலத் தமிழர்கள் தேரினையும், யானையையும், குதிரையையும் மற்றவைகளையும் வாகனங்களாக வைததிருநதனர் என்பதற்கு இச்சூத்திரம் உதாரணம்.

தானை, யானை, குதிரை என்ற
நோனர் உட்கும் மூவகை நிலையும்

(தொ.பொ. புற. 14)

இது சிறந்த காலாட்படை, குதிரைப்படை, யானைப் படைகள் இருநதன என்பதைக் குறிப்பிடுகிறது.

தேரோர் தோற்றிய வென்றியும, தேரோர்
வென்ற கோமான் முன்தேர்க்குரனவும்

(தொ. பொ. புற: 17)

"தேரிலே ஏறிவந்த பொருநா முதலியோர் புகழ்ந்து கூறிக் காட்டிய வெற்றியும், தேரேறிப் போர் செய்ய வந்த அரசர்களை வென்ற வேந்தன், தன வெற்றிக களிப்பால தேர்த்தட்டிலே ஏறி நின்று ஆடும குரவைக் கூததும்"

இதிலே தேர்ப்படையின சிறப்பு கூறப்படுகின்றது.

தொலகாப்பிய காலத்துத் தமிழ மக்கள் கடல் கடந்து சென்று போர் செய்ததாகத தெரியவில்லை. ஆனல் பொருள் தேடுவதற்காக அவர்கள் கடல் கடந்து சென்றனர்.

பொருள் தேடுவதற்காக அவாகள காலநடையாகவும் சென்றனா. கலததிலும சென்றனா. அதாவது கப்பலேறிக் கடல் கடந்தும் சென்றனர். காலநடையாகப் பொருள் தேடச செல்வதற்குக் **காலிற் பிரிவு** என்று பெயர். கடல் கடந்து போவதற்குக் **கலத்திற் பிரிவு** என்று பெயர்.

திரைகடலோடியும் திரவியநதேடு என்பது பண்டைத தமிழர் பண்பாட்டிலிருந்து எழுந்ததே. கடலதாணடிச் செல்வதற்குக கருவிக்ளான கபபலகளையும், ஓடஙகளை யும், கட்டுமரஙகளையும் அமைப்பதற்கு அவர்கள் அறிந்திருந்தனர். இது பிறகாலத்தில அவர்களுக்குக கபபறபடை அமைக்கும திறமை உண்டாகக் காரணமாக இருந்தது. கப்பறபடை தொலகாப்பியர் காலததில இருநததாகச் சொல்வதற்கு இடமிலலை.

19. போர்முறை

சமாதானத்துக்காகவே போர்

தமிழர்களின் போர்முறையைத் தொல்காப்பியப் புறததிணையியலிலே விரிவாகக காணலாம். தொல்காப்பியப் பொருளதிகாரததின பெரும்பகுதி காதலைப்பற்றியும், வீரத்தைப்பற்றியுமே விளககிக் கூறுகின்றது. பொருளதிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களில் ஐந்து இயல்கள் காதலைப்பற்றியே கூறுகின்றன. அவை அகத்திணை இயல், களவியல், கற்பியல, பொருளியல, மெய்ப்பாட்டியல் என பன, வீரச்செயலகளைப்பற்றிய விளககத்தைப் புறத்திணை இயலிலே காணலாம்.

செயயுளியலும், உவமவியலும இப்பொருள்களை அமைத்துப் பாடல்களை இயற்றும இலக்கணத்தை எடுத்துரைக்கின்றன. மரபியலிலே பல பழக்க வழக்கங்கள் எடுததுக் காட்டப்படுகின்றன.

தொல்காப்பியத தமிழாகள் போர்வெறி கொண்டவர்கள் அல்லா, அவர்கள் பெருமைககாகவோ, பொருளாசைக்கொண்டோ போர் புரியவிலலை. நாடுபிடிக்கும் மண்ணாசை கொணடும் அவர்கள் போர்புரியவில்லை. மககளைக கொன்று குவித்துத தங்கள் வீரத்தைக் காட்ட வேண்டும் என்ற வெறிகொண்டு சண்டைசெய்தவர்களும் அல்லர்.

தற்காப்புக்காகவே பண்டைத் தமிழர்கள போர்புரிந்து வந்தனர். அமைதியே மக்களை இன்பபுரிக்கு இழுத்துச் செல்லும. கலகமும் சண்டையும் நல்வாழ்வுக்கு உலைவைப்

பவை. இது தமிழர்கள் அறிந்த உண்மை. ஆகையால் சமாதானத்தை நிலைநாட்டவே அவர்கள் போர்செய்தனர்.

காதல்வாழ்வைக் கைக்கொண்டு இல்லற வாழ்வைச் சிறப்புடன் நடத்தி இன்புறும் எந்த மக்களும் போரை விரும்பமாட்டார்கள். அமைதி நிறைந்த சமாதானகாலத்திலதான் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான ஆக்கவேலைகளைச் செய்யமுடியும்.

நாட்டின் அமைதி குலைந்தால் குடிமக்களின் வாழ்வு சிதையும். குடிமக்களின் வாழ்வு சிதைந்தால் காதல் வாழ்வு கருகிவிடும். காதல் வாழ்வு கருகிவிட்டால் மக்களிடம் அன்பும், அமைதியும், நல்வாழ்வும் வளர இடமில்லை; அவை நசித்து நாசமாகிவிடும். போர்க்காலத்திலே உழவுத் தொழில் உருப்படியாக நடைபெறாது; மக்கள் வாழ்வுக்குப் பயனபடும் கைத்தொழில்களும் கலகலத்து நிலைகுலையும். இதனால் உணவுப் பண்டங்களின் உற்பத்தி குறையும்; ஏனைய உதவிப் பண்டங்களின் உற்பத்தியும் குறைந்துபோய்விடும். எங்கும் பற்றாக்குறையும், பஞ்சமும், வறுமையும் தோன்றி மக்கள் வாழ்க்கையைப் பாழ்படுத்தும். இவ்வுண்மைகளைத் தொல்காப்பிய காலத் தமிழர்கள் அறிந்திருந்தனர்.

ஆக்கிரமிப்புப்போரை வெறுத்தனர்

பண்டைத் தமிழர்கள் ஆக்கிரமிப்புப்போரை அடியோடு வெறுத்தனர். ஆனால் படையெடுத்து வந்தோர்க்குப்பணிந்து வாழவில்லை. அத்தகைய பயங்காளிகள் அல்ல தமிழர்கள். வெறிகொண்டு படையெடுத்துவந்த வேந்தர்களை எதிர்த்தனர். தற்காப்புப் போர்புரிந்து வெற்றி கொண்டனர். தனது குடிகளை நடுங்கவைக்கும் கொடுங்கோல் மன்னர்களைப் பண்டைத்தமிழர்கள் சும்மா விட்டு

வைக்கவில்லை. அவர்களைப் போரிலே வென்றுவிரட்டினர். நாட்டுமக்களுக்கு நலம் புரிந்துவந்தனர்.

> வஞ்சி தானே முல்லையது புறனே
> எஞ்சா மண்ணசை வேந்தனை, வேந்தன்
> அஞ்சு தகத்தலைச் சென்று அடல் குறித்தன்றே
>
> (தொ. பொ. புற. 6)

"வஞ்சியென்பது முல்லை யென்னும் அகததிணை யோடு தொடாபுளளது. அடஙகாத மண்ணைசை கொண்டு, நாடுபிடிப்பதற்காகப படையெடுத்து வந்த வேந்தனை, அறங்கருதும் மற்ரொரு வேந்தன, படை யெடுத்து வந்தோன அஞ்சும்படி படைதிரட்டிச சென்று அவனோடு போர் செய்வது"

> தும்பைதானே நெய்தலது புறனே
> மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
> சென்று தலையழிக்கும் சிறப்பிற் றென்ப
>
> (தொ. பொ. புற. 12)

"தும்பை என்பது நெய்தல என்னும் அகத்திணை யோடு தொடர்புள்ளது, தனது ஆறறலை உலகம் புகழ வேணடும் எனபதையே நோக்கமாகக கொண்டு, போர் புரிய வந்த அரசனை, எதிர்ததுச சென்று போர் செய்து அவன கர்வத்தைப் போர்க்களத்திலே அழிககும சிறந்த செயலாகும்"

தமிழர்கள் அகந்தை கொண்டு ஆக்கிரமிப்புப் போரிலே இறஙகமாட்டார்கள ; எதிரிகளுக்கு அடி பணி யவும் மாட்டார்கள. தற்காப்புப போரின் மூலம் தங்கள் வீரததையும், வாழ்க்கையையும் பாதுகாத்துக் கொள்ளும் பண்புடையவர்கள். இவ்வுண்மைகளை மேலே காட்டிய வஞ்சிததிணை தும்பைத்திணை இரண்டும் விளக்கும்.

எந்த நாட்டிலே போர் மூண்டாலும், அந்த நாட்டு மக்களின நலம் நாசமாகும். பொது மக்கள் சேர்த்து வைத்திருக்கும் பொருளகள பாழாகும். பஞ்சம், வறுமை காரணமாக மககளின் உயிரினும் சிறந்த ஒழுக்கமும் ஒழிநது விடும். அறமுறையிலே போர் நடத்த வேண்டும் எனற எண்ணம் குடிகொண்டிருந்த பண்டைக் காலத்திலும் போரினல் பொது மக்களே துன்பத்திற்கு ஆளாயினர். போர் வீரர்கள் செயத நாச வேலைகளினுல் நாட்டுச் செல்வங்கள் பாழபட்டன. இவ்வுண்மையைத தொல்காப்பியம் நமக்கு எடுத்துக் காட்டுகினறது.

போர் தொடங்குவதறகு முன்பே எதிரியின பசு மந்தைகளைக் கவாநது கொளளுவது அக்கால வழக்கம். இது தான் போருக்கு ஆரம்பம். பசு மந்தையைக் கவரும் எதிரிகளைக் காவலரும், ஊராரும் எதிர்ப்பார்கள், இநத எதிர்ப்பிலே படுகொலைகள் பல நடைபெறும். இந்தப் படுகொலைகளில் குறறமற்றவர்களும் கொல்லப் படுவார்கள்.

"ஊர்கொலை ஆகோள்"

என்ற தொ. பொ. புறத்திணை மூன்ருவது சூத்திரத்தால் இவ்வுண்மையைக் காணலாம். "எதிர்த்த ஊராரைக் கொலை செயது விட்டுப் பசு மந்தையைக் கவருதல்" என்பதே இதன் பொருள்.

வெற்றி பெறறவர்கள, தோற்றுப் போனவர்களின் ஊர்களைத் தியிட்டுப் பொசுக்குவார்கள்; அவர்கள் சேமித்து வைததிருக்கும் பண்டங்களைக் கொள்ளையடிப்பார்கள்; தோற்றுப் போனாவர்களின விளை நிலங்களைப் பாழ் பண்ணுவாாகள்; அவர்கள் கட்டியிருக்கும் கட்டிடஙகளையெல்லாம் இடிந்துத தகர்ப்பார்கள். போரினுல் இத்தகைய கொடுமைகள் நடந்தன. இதனுலதான தமிழர்கள ஆக்கிரமிப்புப் போரை வெறுத்தனர். தற்காப்புப் போரை மட்டும் மேற்கொண்டனர்.

ஆயினும் போர் வெறிகொண்டவர்களும் தமிழ் நாட்டில் இல்லாமல் இல்லை. போர் வெறி கொண்டவர்கள் இருந்ததால் தான் — இவர்கள் புகழாசை கொண்டோ, பொன்னாசை கொண்டோ, மண்ணாசை கொண்டோ, பெண்ணாசை கொண்டோ வலியச் சென்று போர் புரிந்ததனால்தான்-தற்காப்புப் போர் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

போரை வெறுத்தவர்கள் — போரினால் பொது மக்கள் தாம் துன்புறுவார்கள் என்பதை உணர்ந்தவர்கள் — தொல்காப்பியர் காலத்தில் இருந்தனர்; இவர்கள் போர் நேராமல் இருப்பதற்கு முயன்றனர், அப்படிப் போர் நேர்ந்தாலும் அதனால் பொது மக்கள் தொல்லைப்படக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு முன்னறிவிப்புச் செய்தனர்; பாதுகாப்பளித்தனர்.

20. எழுத்து மாற்றம்

தொல்காப்பியர் காலததுககு முன்னே தமிழ் எழுத துக்களின் உருவம எப்படி யிருந்தது ? இனறுள்ள உரு வத்திலா ? அல்லது கல் வெட்டுககளில் காணப்படும் உருவிலா ? அல்லது வேறு எந்த உருவத்தில் தமிழ் எழுத துக்கள இருந்தன? இதைப் பற்றித் தொல்காப்பியத்தைக கொண்டு திட்டமாக ஒனறும் கூற முடியாது. ஆனல் தொல்காப்பியர் காலததில சில தமிழ் எழுத்துக்களின வடிவங்கள் மாற்றப் பட்டன. இது மட்டும உண்மை.

தொல்காப்பியர் கூறும் எழுத்துருவம்

ம. எ. ஒ. எனற எழுத்துக்களும், மெய்யெழுத்துக களும், உயிர்மெய் யெழுத்துக்களும், எவ்வித உருவத்தில் இருக்கவேண்டும என்பதைத் தொலகாப்பியர் சொல்லு கிருர். தொல்காப்பியர் காலததுககு முன்னே இந்த எழுத்துக்கள் வெவ்வேறு வடிவஙகளில எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆதலால்தான் அவைகள இப்படித்தான் எழுதப்பட வேண்டும் எனறு வரையறுத்துக்கூற வேண் டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டது.

மெய்யெழுத்துக்களுக் கெல்லாம் புள்ளி உண்டு என்று கூறுகிருர். ஆனல் தலையில புள்ளி வைப்பதா ? பக்கத்தில் புள்ளி வைப்பதா ? இதைப் பற்றி விளக்கம் ஒனறு மில்லை.

இன்று குறிலாக வழங்கும எ, ஒ, இவைகள் தாம் தொல்காப்பிய காலத்தில் நெடிலின் உருவம். எ. ஒ. என் பவை புள்ளி பெற்ருல் குறில் ஓசை, இவற்றை

உட்பெறு புள்ளி உருவாகும்மே

(தொ. எ. நூன். 14)

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்

(தொ. எ. நூன். 15)

எகர ஒகரத்து இயற்கையும் அற்றே

[தொ. எ. நூன். 16]

என்ற சூத்திரங்களால் காணலாம்,

ப் எனபது தான் ம என்ற எழுத்தின உருவம்.

உயிரமெய் யெழுததுககள் இருவகையான உருவங்களில் வழங்கி வந்தன. மெய்யெழுத்துக்களின உருவிலே மாற்றமில்லாமல் உயிர்மெய எழுததுக்களாக வழங்கியது ஒருவகை. மெய்யெழுத்துக்களின் உருவம மாற்றமடைந்து உயிர்மெய எழுத்துககளாக வழங்கியது மற்றொரு வகை.

இந்த இரண்டுவகை யாவன :—மெயயெழுததுக்கள் புளளியில்லாமல அப்படியே எழுதப்படுமானல் அவை அகர மேறிய உயிர்மெய்கள். மெய்யெழுத்துக்கு அடையாளமான புள்ளி மட்டும் இல்லை. ஆனல மெய்யின உருவம் அப்படியே இருக்கிறது. இது ஒருவகை. க. ங. ச. ஞ.— இவை மாறுபடாத உருவம.

மெய்யெழுத்துக்கள் அகரத்தைத் தவிர மற்ற உயிர்களுடன் ,சேரும்போது தமது உருவம் மாறுபடும். இது இரண்டாவது வகை.

புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருஉருவாகி அகரமோடு உயர்த்தலும்,
ஏனை உயிரோடு உருவுதிரிந்து உயிர்த்தலும்
ஆயீரியல உயர்த்தலாறே

(தொ. எ. நூன். 17)

"புள்ளியில்லாத எல்லா மெய்யெழுத்துக்களும் தமது உருவம் அப்படியே நின்று அகர உயிரோடு சேர்ந்து உயிர் மெய்யாக உச்சரிக்கப் படுதலும், மற்ற உயிர்களோடு சேரும் போது தமது உருவம் மாறுபட்டு உயிர் மெய்யாக உச்சரித்தலும் ஆக இரண்டு வகையாக எழுதி உச்சரிப்பதே உயிர் மெய்களை உச்சரிக்கும் வழியாகும்."

அகர உயிரைத் தவிர மற்ற உயிர்களோடு சேரும் மெய் யெழுத்துக்கள் இன்னபடி மாறுபடும் என்று தொல்காப்பியர் சொல்லவில்லை. இக் காரணத்தால் தான் அவை இன்று பலவகை உருவங்களில் எழுதப் படுகின்றன.

ரு. ஞ, ஞு. ஊ. ணே. ளா. லே. கி...கீ ..கு...கூ... இவைகள் மெய்யெழுத்துக்கள் உயிர்மெய் யெழுத்துக்களாகும் போது மாறு பட்டு வழங்கும் உருவங்கள். தொல்காப்பியர் இத்தகைய மாறுதலைத் தான் குறித்திருக்க வேண்டும்.

புதியமாற்றம்

மெய்யெழுத்தின் பக்கத்தில் உயிரெழுத்தின் அடையாளத்தை அமைத்து உயிர் மெய் யெழுத்தாக எழுதும் வழக்கம் தொல்காப்பிய காலத்திற்குப் பின்னால் தான் ஏற்பட்டிருக்க வேண்டும். கா...கெ...கே...கை...கொ... கோ...கௌ...இந்த வரிசைகள் முறையே ஆ. எ. ஏ. ஐ. ஒ. ஓ. ஔ. என்ற உயிர்கள் ஏறிய மெய்யெழுத்துக்கள். இவ்வாறு மெய்யெழுத்துக்களின் பக்கத்திலே உயிரின் அடையாளமிட்டு எழுதும் போதும் மெய்யெழுத்துக்களின் உருவம் மாறுவதில்லை. மெய்யின் உருவம் சிதையாமல் அப்படியே தான் இருக்கின்றது. ஆகையால் இவைகளை உருவு திரிந்த மெய்யெழுத்துக்களாகக் கொள்ள முடியாது. இந்த முறை தொல்காப்பியத்திற்குப் பிறகு ஏற்பட்ட முறைதான்.

ஒரு எழுததை வேறு எழுததுக்களால் எழுதி அதே உச்சரிப்பை உண்டாக்கலாம் என்பதும் தொல்காப்பியர் கொளகை.

ஐ என்ற எழுத்தை அஇ. அய். எனறு இரண்டு விதமாகவும் எழுதலாம், இதனுல் ஐயின் உசசரிப்புக் கெடாது.

அகர இகரம் ஐகாரமாகும்

[தொ. எ. நூன். 21]

"அகரமும் இகரமும் சேர்நது ஐகாரமாக ஒலிக்கும்

அகரத்திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

[தொ. எ- நூன். 23]

" அகரத்தின் பககத்தில் ய எனனும் மெய் யெழுத்து வந்து ஐ என்னும் நெட்டெழுததாக உணமை உச்சரிப்புடன் தோன்றி நிற்கும் "

ஔ எனற எழுத்தை அஉ எனறு எழுதி உசசரிக்கலாம் எனபதும தொலகாப்பியர் கருதது. இதனே.

அகர உகரம் ஔகாரமாகும்.

[தொ. எ. நூன். 22]

என்பதனுல் அறியலாம.

அவ் என்று எழுதினுலும ஔ போலவே ஒலிக்கின்றது. இதைத் தொல்காப்பியத்தின் வழி நூலாகிய நன்னூல் ஒப்புக் கொள்ளுகிறது.

மேலே கூறியவைகளேக கொண்டு தமிழ் எழுத்துக்களின் உருவம் காலத்திற்கேற்ற வாறு மாறிவந்திருக்கின்றது என்பதைக காணலாம். தொல்காபபியர் குறிக்கும் உருவங்களே இனறு நாம் அப்படியே எழுதவில்லே. மாற்றி எழுதி வருகிறேம்.

ப் என்ற மகரத்தை ம என்ற உருவில். எழுதுகிறோம் எ. ஒ. என்ற குற்றெழுத்துக்களை எ. ஒ. என்ற உருவில் புள்ளியில்லாமல் எழுதுகிறோம. எ. ஒ. என்ற நெட்டெழுத் துக்களை ஏ. ஓ. என்று மாற்றி எழுதுகின்றோம்.

அகரமல்லாத மற்ற உயிர் எழுத்துக்களும், மெய் யெழுத்துக்களும் சேரும் போது மெய்யெழுத்துக்களின் உருவம திரியும எனபது தொல்காப்பியம். ஆனல் நாம் கா...கெ ..கே...கை...கொ...கோ...கௌ...என்று மெய் யெழுத்துககளின உருவங்களை மாற்ருமல முன்னும் பின் னும் அடையாளமிட்டு எழுதி வருகின்றோம்.

தமிழ் எழுத்துக்களைக் காலத்திற்கு ஏற்றவாறு படிப் பதற்கும், எழுதுவதற்கும், அச்சிடுவதற்கும் எளிதாக இருககும் வகையில் மாற்றிக் கொளளுவதில் தவறில்லை. இப்படி மாற்றிக கொள்ளுவது தமிழர் பண்பாட்டிற்கு ஏற்றதே யாகும். தமிழ் எழுத்துக்கள் தொல்காப்பியர் காலத்திறகு முன்னிருந்தே பல, மாறுதல்களைப் பெற்று வந்திருககின்றன. இந்த உண்மையைத் தொல்காப்பியம் நமக்குக கூறுகிறது. ஆகவே தமிழ் எழுத்துக்களைச் சீர் திருத்தி அமைப்பதனல் தமிழ் மொழி கெட்டு விடாது. தமிழ் வளம் பெறும் வகையிலே எததகைய எழுதது மாற்றம் ஏற்பட்டாலும் அது தமிழர் நாகரீகத்திற்கு ஏற்றது தான்.

21. மொழி வளர்ச்சி

இலக்கியம்

இலககியத்தின் தாயகம் இலக்கு; இலககு எனனும சொல்லிலிருந்தே இலக்கியம் எனனும் சொல் பிறந்தது. இலட்சியதிலிருந்து இலககியம் பிறந்ததாகவும் சொல்லு வர். இலக்கு—இடம்; திசை. இலக்கிலிருநது இலக்கியம் பிறநதாலுமசரி, அலலது இலட்சியமே இலக்கியமாக உரு மாறினுலுமசரி, இலககியம என்பதறகு இலட்சியம்; நோக்கம்; குறிக்கோள்; என்பதே பொருள்.

பண்டைக் காலத்தில ஒரு குறிக்கோளை அடிப்படை யாகக் கொண்டுதான் இலககியங்கள் எழுதப்பட்டன. குறிககோள் முற்போக்கானதாகவும் இருக்கலாம்; பிற் போக்கானதாகவும் . இருக்கலாம். குறிக்கோளைக் கொண்ட இலககியங்களை எனறும குன்றுமல் நினறு நில வும. ஆயிரங்காலத்து இலக்கியங்கள் பல இன்றும் மக்க ளால ஆவலுடன் படிக்கப்பட்டு வருகினறன. அவைகள் அருமையாகப் போற்றபபட்டும் புகழபபட்டும் வருகினறன. அவைகளைப்பற்றி ஆராய்ச்சியுரைகள் எழுதப்பட்டும் வரு கினறன. அவைகளின் அருமை பெருமைகளைப் பறறி மேடைகளிலே பேசப்பட்டும வருகினறன. இன்று எத் தனையோ புதுப் புதுப் புத்தகஙகள் கணணைக் கவரும் வண்ணப் படங்களுடன் இலக்கியம் என்ற பெயரில் வெளிவருகின்றன. இப் புத்தகங்களிலே பல ஒருமுறை படித்தவுடன் உதவாக்கரைகளாகக் கருதப்பட்டுக் குப் பைக் கூடைகளிலே இடம் பெறுகின்றன.

பழய இலககியங்கள் பல இன்றும் பாராட்டிப் போற் றப்படுவதற்குக் காரணம் என்ன ? புதிய புத்தகங்கள பல

போற்றப்படாமல் குப்பைக் கூடைகளுக்குள் குடியேறுவதற்குக் காரணம் என்ன? ஏதேனும் குறிக்கோளை அடிப்படையாக வைததுக்கொண்டுதான் பண்டைக்காலப் புலவர்கள் இலக்கியங்களைப் புனைந்தனர். ஆகையால்தான் இன்றும் அவைகள் சிரஞ்சீவிகளாய் நினறு நிலவுகின்றன. குறிக்கோளற்ற வறட்டுப் புத்தகங்களே குப்பைக் கூடைகளிலே போடப்படுகின்றன. காரணம் இதுதான்.

இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக இருக்கவேண்டும்; துன்பத்தால் துடிப்போரை இன்பக்கரையிலே ஏற்றுவதற்கான வழிகளை எடுத்துக் காட்டுவதே இலக்கியங்கள்; மக்கள அனைவரும் மனிதத் தன்மையை உணர்ந்து ஒனறுபட்டு வாழ்வதற்கான வழிதுறைகளைக் காட்டுவதே இலக்கியம். ஒற்றுமையைச் சிதைத்து மனித சமுதாயத்தை ஒன்றுசேரவொட்டாமல் தடுக்கும் சீர்கேடுகளை ஒழிப்பதற்கு உதவுவதே உயர்ந்த இலககியம். மக்களின் நல்வாழவைக் குறிக்கோ்ளாகக கொண்ட அரசியல் பொருளாதார சமுதாய அமைப்புக்களை உருவாக்கி அவைகளை நடத்திக்காட்டும் வழிகளைப் போதிப்பதே இலககியம். சுருக்கமாகச் சொன்ஞல் பெரும்பாலான மககளின் வாழ்க்கையைச சித்திரிப்பதும், அவர்களுடைய வாழ்க்கைககு வழி காட்டுவதுமே இலக்கியமாகும்.

ஒரு மொழியின் செல்வம அந்த மொழியில் உள்ள இலக்கியங்கள்தாம். சிறந்த இலக்கியங்கள நிறைந்தமொழிகளே உயர்ந்த மொழிகள் என உலகினரால் போற்றப்படுகின்றன. ஓருசிறந்த இலக்கியம் எந்த மொழியிலே தோனறிஞலும் அது உலகில் உள்ள பல மொழிகளிலும் மொழிபெயர்க்கபபடுமம; எல்லா மக்கள் கையிலும் ஏறிவிடும்.

மொழி வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை

இன்று இலககிய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி என்னும் பெயரால் எத்தனையோ புத்தகங்கள் வெளிவருகின்றன.

அவைகளெல்லாம் இலக்கியங்களா? அவைகளால் மக்களுக்கு ஏதேனும் பயன் உண்டா? குறிக்கோளற்ற இத்தகைய வெறும் புத்தகங்கள் வெளிவரத்தான் வேண்டுமா? இவைகளைப்பற்றியெல்லாம் நாம் சிந்திக்காமலிருக்க முடியாது.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தடைக்கற்களாயிருப்பவர்களில் இருவகையினர் உள்ளனர். தமிழ் மொழியிலே வேறு எம்மொழிச் சொற்களும இணையவே கூடாது. அதுவும் குறிப்பாக வடமொழிச் சொற்கள் தமிழிலே கலந்தால் தமிழின் வடிவமே குலைந்து போகும். ஆகையால் தனித் தமிழிலேதான் எழுதவேண்டும்; தனித் தமிழிலேதான் பேசவேண்டும்; என்று சொல்லுகின்றனர் சிலர். இவர்களுடைய தமிழ்ப் பேரன்பைப் பாராட்டததான் வேண்டும்.

குறிக்கோளைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல், அடுக்குச் சொற்களைச் சேர்த்து அழகுபட எழுதுவதையே இலக்கியம் என்று எண்ணுகின்றனர் மற்றொரு சாரார். மறுமலர்ச்சி இலக்கியங்கள் என்ற பெயரில் வெறும் காம விகாரத்தை வளர்க்கும் கட்டுக் கதைகளே இப்பொழுது மலிந்து வருகின்றன. தமிழர் நாகரிகம்; தமிழர் பண்பாடு; என்று சொல்லிக்கொண்டு எந்த எதையோ எழுதிக் குவித்து வருகின்றனர்.

தனித் தமிழ் அன்பர்களும், காதல் வெறியர்களும் எழுதி வெளியிடும் புத்தகங்களிலே பெரும்பாலானவை தமிழையோ, தமிழ் இலக்கியங்களையோ வளர்ப்பதற்கு வழிகாட்டவேயில்லை. இவைகளிலே பெரும்பாலான புத்தகங்கள் மொழிவெறி, சாதிவெறி, இனவெறி, மதவெறி, இவைகளையே அடிப்படையாக வைத்துக்கொண்டு எழுதப்படுவன. மக்களிடம் இன்று வேரோடியிருக்கும் இத்தகைய வெறிகள் எல்லாம் அழிந்துபடவேண்டும் என்னும்

ஆர்வத்துடன் எழுதப்படும் புத்தகங்கள் மிகச் சிலதான். ஆதலால் இன்று வெளிவரும் மறுமலர்ச்சித் தமிழ்ப்புத்தகங்களிலே பல, மக்களிடம் நேசப்பான்மையை நிலை நிறுத்த உதவவில்லை. இதற்கு மாறாக வெறுப்பையும் விரோதப்பான்மையுமே வளர்த்து வருகின்றன. இது தமிழ் வளர்ச்சியா ? இலக்கிய வளர்ச்சியா ? தமிழர் பண்பாட்டை எடுத்துக்காட்டும் வழியா ?

தொல்காப்பியர் காட்டும் வழி

தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு முன்னும் இலக்கியங்கள் நால்வகைப் பாடல்களிலே இயற்றப் பட்டன. அந்த நால்வகைப் பாடல்கள், ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா, என்பன. இதனை

ஆசிரியம், வஞ்சி, வெண்பாக், கலியே
நால் இயற்று என்ப பாவகை விரியே

(தொ. பொ. செய். **101**)

என்னும் சூத்திரத்தால் காணலாம். "ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா, என்னும் நான்கு பகுதியுடையது என்பார்கள் பாடல் வகைகளின் விரிவை" என்பதே இதன் பொருள்.

இப்பாடல்களால் செய்யப்படும் நூல் மூன்று பொருள்களை உணர்த்துவதாக இருக்கும். மூன்றுபொருள்கள், அறம், பொருள், இன்பம் என்பன. இவ்வுலகில் மக்கள் இம்மூன்றைத்தான் காணமுடியும். மக்கள் வாழ்க்கை இந்த மூன்றையும் அடிப்படையாகக் கொண்டது. பொருளீட்டுதல், அறம் புரிதல், இன்பம் நுகர்தல் இவைகளே மக்கள் வாழ்க்கையின் குறிக்கோள். மக்கள் வாழப்பிறந்தவர்கள் என்பதை இந்த மூன்று குறிக்கோளைக் கொண்டு அறியலாம். வீடு என்பதைப்பற்றிப் பழந்தமிழர்கள் கவலைப்பட்டார்கள் என்று சொல்லுவதற்கு இல்லை.

மூன்று அறங்களையும் பின்பற்றும் ஒருவன் வீட்டைப்பற்றிக் கவலைப்படவேண்டியதுதான் எதற்கு ?

இவ்வுலகில் உள்ள மக்கள் அனைவரும் பொருள் பெற்று, அறம்புரிந்து, இன்பம் துய்த்து வாழ்வார்களா ஞல், இவ்வுலகமே வானுலகமாகும். வீடு என்னும் சொல் லின் பொருளான விடுதலை என்பதைப் பெற்ற உலகமா கும்; இதுவே தொல்காப்பியத் தமிழர் கருத்து.

"அந்நிலை மருங்கின் அறமுதலாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப

(தொ. பொ. செய். 102)

"அந்த நிலையில் உள்ள செய்யுட்கள், அறம் பொருள் இன்பம் முதலான மூன்று சிறந்த பொருளையும் அமைத் துப் பாடுதற்கு உரியன என்பர்"

இச் சூத்திரத்தினால் பாடல்கள், நூல்கள் — இலக்கியங் கள் — எந்தக் குறிக்கோளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைக் காணலாம்.

மொழி வளர்ச்சிக்குத் தொல்காப்பியர் காட்டியிருக் கும் வழி சிறந்தவழி. அவர் வழியைப் பின்பற்றினால் தமி ழிலே எண்ணற்ற இலக்கியங்களை —சிறந்த பல இலக்கி யங்களைச்— செய்து குவிக்க முடியும். பண்டைத் தமிழர் இலக்கியங்களை எப்படி வளர்த்தனர் ? எந்த முறையிலே பெருக்கினர் ? என்பதைத் தொல்காப்பியர் தெளிவாகச் சொல்லுகின்றார். அவர் இலக்கிய வளர்ச்சிக்குக் காட்டும் வழியைக் காண்போம்.

இலக்கியங்கள் முதல் நூல், வழிநூல் என இரு வகைப்படும். முதல்நூல் என்பது ஒரு ஆசிரியர் தானே பல செய்திகளை ஆராய்ந்து கண்டறிந்த உண்மைகளை மக்கள் அறியும்படி எழுதி வைப்பது. இந்த முதல் நூலைச் சுருக்கியோ பெருக்கியோ எழுதுவது வழிநூல்.

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்

(தொ. பொ. மரபு. 91)

'தீவினைகள் செய்வதை ஒழித்து நல்லொழுக்க முடையவனும் சிறந்த அறிவினையுடைய தலை சிறந்த ஆசிரியன் செய்தது முதல் நூல் ஆகும்.''

வழியெனப்படுவது அதன் வழித்தாகும்

(தொ. பொ. மர. 92)

"வழிநூல் எனப்படுவது அந்த முதல் நூலைப் பின்பற்றி எழுதப் படுவதாகும்"

இந்த இரண்டு சூத்திரங்களும் முதல்நூல் என்றால் என்ன? வழிநூல் என்றால் என்ன? என்பதை விளக்கி விட்டன,

வழிநூல்கள் நான்கு வகைப்படும் என்று கூறுகிறார் தொல்காப்பியர்.

தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்து
அதர்ப்படயாத்தலோடு அனைமரபினவே

(தொ. பொ. மர. 94)

1. முதல் நூலில் விரிவாகச் சொல்லப் பட்டிருப்பதைச் சுருக்கி எழுதுதல்.

2. முதல் நூலில் சுருக்கமாகக் கூறப்பட்டிருப்பதை விரித்து எழுதுதல்.

3. முதல் நூலிலே விரிவாக உள்ளதைச் சுருக்கியும், சுருக்கமாக உள்ளதை விரித்தும் மக்களுக்கு விளங்கும் முறையிலே எழுதுதல்.

4. வேறு மொழிகளிலே உள்ள சிறந்த இலக்கியங்களை மொழிபெயர்த்து எழுதிவைத்தல்,

இவ்வாறு நான்கு வகையாக எழுதப்படுவன வழி நூல்கள் என்று கூறுகிறார் தொல்காப்பியர்.

சிறந்த நூல்கள எநத மொழிகளிலே இருந்தாலும் அவைகளை மொழி பெயர்ததுக் கொளளும் உயர்நத வழக்கம் தமிழரிடம் இருநதது. பண்டைத தமிழாகள் பலமொழிப் பயிற்சி யுடையவர்களாயிருந்தனர். இடைச சங்க காலத்திலே இருந்தன என்று சொலலப்படும், மாபுராணம, பூதபுராணம் போனற நூல்கள் மொழி பெயர்ப்பு நூல்களாக இருந்திருக்க வேண்டும ; எனறு நாம் தெரிந்து கொள்ளலாம்.

மொழிபெயர்ப்பு நூல்களும் புது நூல்களும்

மொழிபபற்றுடைய பல மொழியினரும் தஙகள் இலககியங்களை வளர்ப்பதறகு இனறும இந்தமொழி பெயர்ப்பு முறையைப் பினபற்றி வருவதைக காண்கிறோம. உலக மககளுககுள் ஒறறுமையும், கலாசாரத் தொடாபும் வளர்வதற்கு ஒரு மொழியிலே தோனறும் சிறந்த இலக்கியங்கள பல மொழிகளிலும பரவ வேண்டும. இக கொள்கை பண்டைததமிழா பண்பாடுகளில ஒன்றெனபதைத் தொல்காபபியம் நமக்கு எடுத்துக காட்டுகின்றது.

> சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்
> செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்று பாரதியாரைப பாடும்படி தூண்டியது தமிழரின் இந்தப பண்பாடுதான.

> பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
> தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்

இது வழிநூல்களைப பெருக்கி இலககியங்களை வளர்க்கும் வழியாகும்.

> இறவாத புகழுடைய புதுநூல்கள்
> தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்

இது முதல நூல்களைப பெருக்குவதற்கு எடுத்துக் காட்டும் சிறந்த முறையாகும்.

இவ்வாறு வழிநூல்களையும், முதல நூல்களையும் வளர்த்துத் தமிழை இலக்கியங்கள் நிறைந்த சிறந்த மொழியாகவேண்டும் என்பது பாரதியார் கருத்து. இக்கருத்தும் தொல்காப்பியர் சொல்லியிருக்கும் கருத்தும் ஒத்து வருவதைக் காணலாம்.

தனித்தமிழ் அன்பர்கள் உலகப்போக்கைக் கவனிக்க வேண்டும். வளர்ந்திருக்கும் மொழிகளின் வரலாற்றையும் எண்ணிப் பார்க்கவேண்டும். வளர்ந்துவரும் எந்த மொழிகளிலும் பிறமொழிச் சொற்கள் கலப்பது இயற்கை. இதைத் தடுக்க முயல்வது மொழி வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போடுவதாகவே முடியும். இன்று வளர்ச்சியடைந்திருக்கும் எந்த மொழிகளைப் பார்த்தாலும் இவ்வுண்மை விளங்கும்.

பிறமொழிச் சொற்கள்

இலக்கியச் செல்வங்கள் நிறைந்திருப்பதாக எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படும் ஆங்கில மொழியிலே எத்தனையோ வேறு பல மொழிச் சொற்கள் இணைந்து விட்டன. ஆங்கிலேயர் எந்தெந்த நாடுகளிலே குடியேறி ஆட்சி புரிந்தார்களோ அந்தந்த நாட்டு மொழிச் சொற்களும் ஆங்கிலத்திலே கலந்திருக்கின்றன. இதனால் அம்மொழி அழிந்து சிதைந்து போய் விடவில்லை. வளர்ச்சியடைந்து வற்றாத இலக்கியச் செல்வத்தை ஈட்டியிருக்கின்றது. இந்த உண்மை தனித்தமிழ்க் காதலர்களின் கருத்திலே பதிய வேண்டும்.

தமிழ் மொழி தொல்காப்பிய காலத்திற்கு முன்னிருந்தே பிறமொழிச் செல்வங்களை ஏற்றுக் கொண்டே வளர்ந்து வந்திருக்கின்றது. பிற மொழிச் சொற்கள் தமிழிலே கலக்கக் கூடாது என்ற எண்ணம் பண்டைத் தமிழரிடம் தோன்றியதே யில்லை. நாம் பல மொழியினருடன் கலந்து உறவாடும்போது அவர்களுடைய மொழியும் நமது

மொழியில் கலப்பது இயற்கை. இதுபோலவே பலதிறப் பட்ட நாகரிகமுள்ள மக்களுடன் சேர்ந்து பழகும் போது அவர்களுடைய நாகரிகமும், நமது நாகரிகமும ஒன்றுபடு வதும் இயற்கை. பிற மொழிச சொற்கள் நமது மொழி யிலே கலககக் கூடாது எனருல் பிறமொழி பேசும் மககளுடன நமக்குத் தொடர்பே இருக்கக் கூடாது. உலகத்தி லிருந்தே நாம பிரிநது தனித்து விலகி நிற்கவேணடும். இது நடக்குமா?

பிறமொழிச் சொற்கள தமிழிலே கலப்பதைப் பற்றித் தொல்காப்பியர் தெளிவாகக் கூறிவிட்டார். இயற் சொல, திரிசொல், திசைச சொல், வடசொல் என்ற நான்கு வகைச் சொற்களும் செய்யுட்களிலே சேர்ந்து வரலாம் என்பது தொல்காப்பியர் கூற்று.

இயற்சொல் திரிசொல்
திசைச்சொல் வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே

(தொ. சொ. எச்ச. 1)

" இயற்சொல், திரிசொல, திசைசசொல், வட சொல் எனறு சொலலப்படும் அவைகளே செய்யுளில் சேர்க்கப்படும் சொற்கள் "

இச்சூத்திரததிலே திசைச் சொல்லும், வடசொல்லும செய்யுளிலே சேர்ந்து வரலாம் என்று கூறுவது குறிப்பிடத தக்கது.

இயற்சொல் என்பது எல்லோருக்கும் பொருள விளங் கும்படி வழககத்திலிருக்கும் சொற்கள்,

திரிசொல் எனபது பேச்சு வழககில் பெரும் பானமை யாக வழங்காமல் இலக்கிய வழக்கிலே உள்ள சொற்கள், ஒரு சொல்லுக்குப் பல பொருள் உள்ள சொற்களும, ஒரே பொருளைக் குறிககும பல சொறகளும் திரிசொற்களின் வகைகளாகும்.

திசைச்சொல என்பது செந்தமிழ்நாட்டை அடுத்திருக்கும் பனிரெண்டு நாடுகளிலும் வழங்கும சொற்கள் என்று கூறுகிறார் தொல்காப்பியர்.

போக்கு வரத்து வசதிகள குறைந்திருந்த பண்டைக காலத்தில், தமிழர்கள பக்கத்து நாடுகளுக்குத்தான் அடிக்கடி போய்வர முடியும. அநத நாட்டு மக்களுடன் தான் அடிககடி பழகவும் முடியும். ஆகையால் பக்கத்து நாட்டு மொழிகளின சொற்களையே திசைச் சொல் என்று குறித்தார். இக்காலத்தைப் போலத் தொல்காப்பியா காலததில் உலக முழுவதும சுற்றிவரககூடிய சாதனங்கள் இருந்திருநதால வேற்று நாட்டுச சொற்களையெல்லாம் திசைச சொறகள என்று தீரமானமாகக கூறியிருப்பார் அவர்.

வடமொழியும் தமிழும்

வடசொல் என்பது வடமொழிச சொல். வடசொற்கள் தமிழிலே கலக்கும் போது, அவற்றின் உருவம் மாறும். வட மொழிச சொற்களில உள்ள வடமொழி எழுத்துக்கள் மறையும. தமிழ எழுத்துக்கள் வடமொழி எழுத்துக்கள் மறைந்த இடத்தைநிரப்பும. அந்த வடமொழிச் சொற்களின் ஓசையும் தமிழோசையாக மாறும். இக் கருத்தைத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

திசைச சொல—வடசொல் — எனறு ஏன தனித்தனியே சொல்லபபடவேண்டும் எனற ஐயம் கிளம்பலாம். இதற்குக் காரணம உண்டு. தொல்காப்பியர் காலத்தில் தமிழுக்கும் வடமொழிககுந்தான் அதிகத் தொடர்பிருந்தது. அக்காலத்தில் வடமொழியில தான் சிறந்த இலக்கியங்கள் இருநதன. தமிழர்கள் பலர் வடமொழிப் பயிற்சியுளளவாகளாயிருநதனா. இதனால வடசொற்கள் தாம் தமிழிலே மிகுதியாகக கலந்து வரும் நிலைமையும், நிர்ப்பந்தமும் இருந்தன; திசைச் சொற்களைவிட வட சொறகளே மிகுதியாகத் தமிழிலே கலந்து வந்தன. ஆகையால தான்

திசைச்சொற்களைத் தனியாகவும்—வடசொற்களைப் பற்றித் தனியாகவும் கூறினார்.

தமிழிலே பிறமொழிச் சொற்கள் கலக்கக் கூடாது என்ற பிடிவாதம் பழந்தமிழ் மக்களிடம் இருந்ததில்லை. இன்றியமையாத இடங்களிலே திசைச் சொற்களோ, வடசொற்களோ தமிழுடன் கலந்து வருவது மொழிவளர்ச்சிக்கு இடஞ்செய்யுமே யன்றித் தடை செய்யாது இதுவே பழந்தமிழர் கருத்து.

பழந்தமிழ்ச் செல்வமாகிய தொல்காப்பியத்திலேயே பல வடசொற்கள் கலந்திருப்பதைக் காணலாம். திசை, பூதம், தெய்வம், பிண்டம், ஏது (ஹேது) பயம், மந்திரம், நிமித்தம், தாபதம், அவிப்பலி, அமரர், மங்கலம், மாயம், காரணம், கருமம், கரணம், அந்தம், அந்தரம், புதல்வன், வதுவை பதி, மாத்திரை, படலம், அதிகாரம், வைசிகன், ஞாபகம் இவைகள் எல்லாம் வடசொற்கள் என்று கருதப் படுகின்றன. இன்னும் பல வடசொற்களும் தொல்காப்பியத்தில் பலவிடங்களில் காணப்படுகின்றன. இன்றுள்ள தமிழ் நூல்களிலே தலைமையான நூல் என்று எண்ணப்படும் தொல்காப்பியத்திலேயே இவ்வாறு வடசொற்கள் கலந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

தொல்காப்பிய காலத்தமிழர்கள் இலக்கியத்தை வளர்க்க மொழிபெயர்ப்பு நூல்களும் இன்றியமையாதவை என்று எண்ணினார்கள். மொழி வளர்ந்து செழிப்படைவதற்கு—பொருட் செல்வத்தைக் குவிப்பதற்கான சொற் செல்வம் பெருகுவதற்கு—வடமொழிச் சொற்களும் பிற நாட்டுச் சொற்களும் தமிழிலே கலப்பது தவறல்ல என்று கொண்டனர். அக்காலத்தில் மொழி வெறுப்போ, சாதி வெறுப்போ, இன வெறுப்போ தமிழிடம் சிறிதும் தலை காட்டியதே இல்லை. இதனால் தமிழும் வளர்ந்தது; தமிழரும் இன்பமும் புகழும் பெற்று வாழ்ந்தனர்.

22. தமிழ் நாட்டின் எல்லை

தொல்காபபியம தோன்றிய காலத்திலே தமிழ் நாட்டின் எல்லைகள எவை? தமிழ் நாட்டை அடுததிருந்த நாடுகள் எவை? இவைகளைத் தெரிநது கொள்ளுவதற்குத தொல்காபபியத்துள் தகக ஆதரவொனறும் அகப்படவில்லை.

தொலகாப்பியத்தின சிறப்புபபாயிரம பனம்பாரனூர் என்னும் புலவரால் பாடப் பட்டது. அது.

> வடவேங்கம், தென்குமரி
> ஆயிடைத்
> தமிழ் கூறும் நல்லுலகத்து

எனறு தொடங்குகிறது.

> வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்
> வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம் என்று
> அந்நான் கெல்லை

எனறு காக்கை பாடினியாரால் பாடப்பட்டதாக வழங்கும் பாடல் ஒனறும் உண்டு.

இவைகளைக் கொண்டே தமிழ நாட்டின் வடக்கெல்லை வேங்கடம்; தெற்கெலலை குமரி; மேற்கெல்லையும், கிழக்கெல்லையும் கடல்கள் எனறு கூறிவருகினறனர்.

தமிழ் இலககியங்களிலே அன்று தொட்டு இன்று வரையிலும் இவ்வாறே தமிழ் நாட்டின் எல்லையைக் குறிதது வருகின்றனர்.

இன்றும் தமிழ் நாட்டின் எலலை இது தான் என்று சொல்லுவது பொருந்தாது. இனறு தமிழ் நாட்டின் எல்லை குறுகி விட்டது. மேலகடற்கரைப் பகுதியிலே மலையாள

மும், கன்னட நாடும் தோன்றிவிட்டன. வடபகுதியிலும் தமிழ்நாட்டின் எல்லையை ஆந்திரநாடு ஆக்கிரமித்து விட்டது. ஆகவே இனறு தமிழ் நாட்டின எலலை குறுகி விட்டது. ஒருநாட்டின எலலை குறுகுவதும் விரிவதும் இயற்கையாகும்.

தமிழ்நாட்டின் எல்லை, குறுகிப் பல நூறு ஆணடுகள் ஆகிவிட்டன. இதற்குந தொலகாப்பிய உரையில் ஆதர வுணடு. தொலகாப்பியச சொலலதிகாரம எச்சவியலில் தமிழ்நாட்டை அடுததுளள நாடுகள் குறிககப் படுகின் றன. திசைச் சொல் இனனதெனறு விளககும சூத்திரத திலே இக் குறிப்புக் காணப்படுகினறது.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப்பினவே திசைச் சொற்கிளவி

எனபது திசைச் சொல்லை விளககும சூத்திரம்,

" செந்தமிழ நாட்டைச சேர்நத பன்னிரு நாடுகளி லும், தாம் குறித்த பொருளில் வழஙகும் சொறகள, அதே, பொருளில் தமிழில கலநது வழஙகும் போது திசைச் சொல என்று பெயர் பெறும் "

செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரண்டு நாடுகள் பொங்கர்நாடு, ஒளிநாடு. தெனபாண்டிநாடு, குடடநாடு குடநாடு, பனறிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவா வடதலைநாடு எனறு கூறுவர். இது சில உரையாசிரியாகளின் கூற்று. பாண்டி நாட்டைச் செந்தமிழ் நாடாகக் கொண்டு அதைச் சூழ்ந் துள்ள இந்தப பனனிரண்டு நாடுகளையும் கொடுந்தமிழ் நாடென்று எண்ணியவர்களே கூறும் உரையிது. இது பொருந்தா உரையெனறு மறுப்போரும் உண்டு.

இந்தப் பன்னிரண்டு நாடுகளும தமிழ் நாட்டிலேயே இருப்பன. இவை தமிழ் வழங்கும் நாடுகள். தமிழர்

வாழும் நாடுகள். இந்த நாட்டுச் சொற்கள் திசைச் சொற்கள் அல்ல. செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்துள்ள வேற்று மொழிகள் வழங்கும் நாட்டுச சொற்கள் தமிழிலே வந்து வழங்கும்போதுதான அவைகளுக்குத திசைச் சொற்கள் என்று பெயா.

இவவாறு உரை கூறியிருக்கின்றனர் சில உரையாசிரியாகள. இதுதான் பொருத்தமான உரை. இவர்கள் காட்டும் செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பனனிரண்டு நாடுகளாவன :—குமரியாற்றின் தென் கரையிலே உள்ள பழந்தீபம, கொல்லம், கூபகம், சிங்களம், சையமலைக்கு மேற்கேயுள்ள கொங்கணம், துளுவம், குடகம், குன்றகம். சையமலைககும் கிழககேயுள்ள கருநடம, வடுகம், தெலிங்கம், கலிங்கம, ஆகிய பனனிரண்டு நாடுகள்.

பழந்தீபம், கூபகம் இரண்டு நாடுகளும கடலிலே மறைந்து விட்டதாகக் கருதுகின்றனர். கொல்லம்—மலையாள நாடு. சிங்களம்—இலஙகைத்தீவு. கருநடம்—கனனட தேசம். வடுகம்—தெலுஙகு நாடு. தெலிங்கம்—தெலிங்கானு. கலிஙகம—கோதாவிரியின வடககில உள்ள நாடு.

கலிங்கத்தைத் தமிழ் நாட்டை அடுத்துள்ள நாடாகக் குறிப்பிட டிருப்பதனுல் கோதாவிரி நதிவரையிலும் உள்ள கீழ்க்கடற்கரைப் பகுதி ஒரு காலததில் தமிழ் நாடாக இருந்தது எனறு ஊகிக்க இடம் உண்டு.

“வடவேஙகடம் தெனகுமரி” எனறு தொடங்கும பனமபாரனார் பாட்டு தொலகாப்பியர் காலத்திலேயே தோன்றியதானுல் அதில் கூறப்படும் எல்லை சரியாக இருக்கலாம்; அப்பாடல் தொல்காப்பியர்க்குப பின்னே தோன்றியதானுல், தொல்காப்பியர் காலத்தில் தமிழ் நாட்டின் எல்லை எது எனறு வரையறுத்துச் சொல்ல வழியிலலை. அதற்கான ஆதரவு ஒன்றும் கிடைக்கவில்லை.

23. பழக்க வழக்கங்கள்

இதற்கு முன் கூறப்பட்டவை

1. தொல்காப்பியம் செந்தமிழ் மொழியின் சிறந்த இலக்கண நூல்; தொல்காப்பியர் என்ற புலவரால் அது இயற்றப்பட்டது.

2. இன்றுள்ள தமிழ் நூல்களிலே காலத்தால் முற்பட்ட நூல் தொல்காப்பியந்தான்.

3. தொல்காப்பியம் வழிநூல்; அதற்கு முதல்நூல் அகத்தியமாகும்.

4. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் முப்பகுதிகளைக் கொண்டது தொல்காப்பியம். இலக்கணத்தை மூவகையாகப் பிரித்துக் கூறுவதே பழந்தமிழர் முறை.

5. மக்கள் வாழ்வு அகவாழ்வு, புறவாழ்வு என இருவகைப்படும். அகப்பொருளிலே அகவாழ்வைப்பற்றியும் புறப்பொருளிலே புறவாழ்வைப்பற்றியும் சொல்லப்படுகின்றன.

6. பழந்தமிழர் மணமுறை களவு, கற்பு என்று இருவகைப்படும். களவுமணம் இல்லாமல் கற்புமணம் நடைபெறுவதில்லை. பழங்காலத்தமிழர்களிடம் திருமணச் சடங்குகள் எவையும் இருந்ததில்லை. பிற்காலத்திலேதான் சடங்குகள் செய்யும் வழக்கம் உண்டாயிற்று. பலதார மணம் பழந்தமிழ் நாட்டில் உண்டு.

7. ஆண்கள் உயர்ந்தவர்கள்; பெண்கள் தாழ்ந்தவர்கள். ஆணுக்கிருந்த உரிமை பெண்ணுக்கு இருந்ததில்லை. பெண்கள் அடிமைகளாகவே யிருந்தனர்.

8. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பிரிவுகளும் தமிழ் மக்களிடம் இருந்தன. இவைகளைததவிர இன்னும பல பிரிவுகளும் இருந்தன. சாதிபபிரிவுகள் தமிழரிடம தாமாகவே தோன்றியவை.

9. நிலத்தலைவன், விவசாயி என்ற பிரிவுகளும் தொல்காப்பியர் காலத்தில் நிலைத்திருந்தன. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நாலவகையினருள ளும் நிலக்கிழவர்கள் இருந்தனர்.

10. நிலத்தலைமை காரணமாகவே உயர்வு தாழ்வு கள், ஆண்டான அடிமை முறைகள் தோன்றின.

11. பார்ப்பார் என்பவர்கள வேறு; அந்தணர் என பவர்கள் வேறு; இரு பிரிவினரும் தமிழாகளே தாம.

12. தொல்காப்பியர் காலத்திலே வடமொழி வேதங் களைத் தமிழர் படித்திருந்தனர்.

13. உலகம் பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உண் டானது.

14. பல தெய்வ வணக்கம் தமிழர்களிடம் இருந் தது. சூரியன், சந்திரன, அக்கினி முதலியவைகளையும தமி ழர்கள் தெய்வங்களாக வணங்கி வந்தனர்.

15. விக்கிரக வணக்கம் தமிழ்நாட்டில் உண்டு. இதுவே சிற்பக்கலைவளர்ச்சிக்குக் காரணம்.

16. தொல்காப்பியர் காலத்தில் உள்ள மதம் இன னதென்று கூறமுடியாது. தமிழர்கள் உயிர்வேறு, உடல வேறு என்று நம்பினர். ஊழ்வினையிலும் அவர்களுக்கு நம் பிக்கை உண்டு.

17. தமிழகத்திலே இசை, நாடகம்போன்ற கலைகள் வளர்ந்திருந்தன. தமிழர்கள சிற்பக்கலை, ஓவியக்கலைகளில் சிறந்திருந்தனர். வாத்தியங்களைச் செய்தமைக்கும் கலை

யிலும் வல்லவர்கள்; ஆயுதங்கள் செய்தல், அணிகள் செய்தல், வாகனங்கள் அமைத்தல், நெசவு நெய்தல் ஆகிய தொழில்களும் அவர்களுக்குத் தெரியும்.

18. தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நாலவகைப் படைகளும் தமிழ் நாட்டில் இருந்தன. கப்பல்கட்டும் தொழிலும் தமிழர்களுக்குத் தெரியும்

19. தமிழர்கள் போரின் கொடுமையை உணர்ந்திருந்தனர். ஆக்கிரமிப்புப் போரைப் பெரும்பாலான தமிழர்கள் விரும்பவில்லை. அவர்கள் செய்த போர்கள் பெரும்பாலும் தற்காப்புப்போர்கள்தாம். ஆயினும் போர்வெறி கொண்டவர்களும் தமிழ்நாட்டில் இருந்தனர்.

20. தொல்காப்பிய காலத்திலே வழங்கிய எழுத்துக்கள் சிலவற்றின் உருவங்கள் இப்பொழுது மாறியிருக்கின்றன. எழுத்து மாற்றம்—அதாவது எழுத்துச் சீர்திருத்தம் தமிழர் பண்பாட்டுக்கு விரோதமானதன்று.

21. பிறமொழியில் உள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழில் பெயர்த்தெழுதுவது, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்றதாகும். சிறந்த குறிக்கோளையுடைய நூல்களே இலக்கியங்கள். தமிழிலே வடமொழிச் சொற்கள் கலந்தால் தமிழ்மொழியின் வளர்ச்சி தடைப்படும் என்பது தவறு.

22. தொல்காப்பிய காலத்தில் தமிழ்நாட்டின் எல்லை எது என்பதைப்பற்றித் திட்டமாகச் சொல்ல முடியாது. தமிழ்நாட்டின் எல்லை ஒரேவிதமாக இல்லாமல், நீண்டும், சுருங்கியும் இருந்தது என்று கருத இடமுண்டு.

இவைகளைப்பற்றியே இதற்கு முன்னுள்ள பகுதிகளில் விரிவாக விளக்கப்பட்டன. இவைகளால் தொல்காப்பியர்காலத்தில் இருந்த தமிழ்நாட்டின் நிலைமையை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். அக்காலத்தில் இருந்த

பல பழக்க வழக்கங்களைப்பற்றிக் கீழ்வரும் இப்பகுதியிலே சுருக்கமாகக் கூறபபடுகின்றது.

நம்பிக்கையும் செயலும்

1. பண்டங்களை அளப்பதற்கான மரக்கால், படி, நாழி போனற அளவு கருவிகள் பண்டைநதமிழர்களிடம் இருநதன.

பண்டங்களை நிறுப்பதறகான துலாக்கோல போன்ற கருவிகளும், நிறையைக் காட்டும் படிக்கலபோன்றவை களும் அக்காலத்தில் இருந்தன.

நூறு, ஆயிரம, பதினாயிரம், நூறாயிரம என்னும் எண்ணல் முறைகளையும் தொல்காப்பியத தமிழர்கள் அறிந்திருந்தனர்.

பண்டங்களை எண்ணவும், நிறுக்கவும், அளக்கவும் அறிந்தவர்களே நாகரிகமுடைய மக்கள. தொல்காப்பிய காலத்திற்கு முன்பே தமிழர்கள விவசாயிகளாகவும், பணடங்களை உற்பததி செயபவர்களாகவும், வாணிகம் செயபவர்களாகவும் இருந்தனர். ஆதலால் அவர்களுக்கு எண்ணவும், நிறுக்கவும், அளக்கவும் தெரிநதிருந்ததில் ஆசசரியம் இல்லை.

2. தொலகாப்பிய காலத தமிழர்களுககு மந்திரத்திலே நம்பிக்கையுண்டு. இப்பொழுதும யாருக்கும மந்திரச் சொற்களுக்குப் பொருள் தெரியாது. அக் காலததிலும் பெரியோர்களால சொல்லப்பட்ட பொருள் தெரியாத சொற்களையே மந்திரங்கள் என்று மக்கள் நம்பினர்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழிதானே மந்திரம் என்ப

[தொ. பொ. செய்.171]

“ பெரியோர்களின் கட்டளையால தோன்றுகின்ற பொருள் மறைந்த மொழிகளையே மந்திரம் என்று கூறுவர் ”

3, நல்ல நாள், கெட்டநாள் பார்க்கும வழக்கம் தமிழரிடம் இருந்தது.

மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற்கில்லை

(தொ. பொ. கள. 45)

“ களவுமணம் நிகழுங காலததிலே கெட்ட ராசியிலும கெட்ட நாளிலும் காதலியுடன் சோரமல இருககும ஒழுககம தலைவனிடம் இலலை.”

நல்ல ராசி, தீய ராசி நல்ல நாள், கெட்ட நாள் எந்த நாளிலும் களவுமணம் நடந்து கொண்டுதான் இருக்கும். கற்பு மணத் தம்பதிகள் தீய ராசியிலும், தீய நாளிலும் ஒன்றுசேர மாட்டார்கள.

4. நாள் பார்ப்பதோடு சகுனம் பார்க்கும் வழக்கமும் தமிழர்களிடம் உண்டு.

நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்

[தொ. பொ. புற. 30]

“ நாளாலும் பறவைகளாலும், பிற பொருள்களாலும் உண்டாகும் காரணங்களும்”

5. மாண்ட கணவனுடன் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கமும் பழந் தமிழர்களிடம் உண்டு. இதனை பாலை நிலை என்று கூறுகிறார் ஆசிரியர்.

நல்லோள் கணவனொடு நளியழற்புகீஇச்
சொல்லிடையிட்ட பாலை நிலையும்

[தொ. பொ. புற. 19]

"கற்புடைய மனைவி தன் கணவனோடு உடன் கட்டை ஏறப் போகும்போது, அதை வேண்டாம் என்று சொல்லி விலக்குவாரோடு எதிர்த்துக் கூறும் பாலை நிலையும" என்பதனாற் காணலாம்.

6. இல்லறம நடத்துவோர்க்குப் பல கடமைகள் உண்டு. அவைகளில், அந்தணர், அறிஞர், தேவர்கள் இவர்களை வணங்கி வழிபாடு செய்வதும் அவர்கள் கடமையாகும்.

அந்தணர் திறத்தும், சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பிற் பிறர் பிறர் திறத்தினும்
ஒழுக்கங் காட்டிய குறிப்பினும்

(தொ. பொ. கற்பு. 5)

"அந்தணாமாட்டும், அறிஞர்களிடத்தும், தேவர்கள் பாலும் நடந்துகொள்ளும் முறையைக் காட்டும் குறிப்பினும்" எனபதனால் காணலாம்.

7. இலலறததை நடத்தும் பெரும் பொறுப்பை இல்லாள் நிலையிற் சுமததினர் பழந் தமிழர். இல்லறத்தை இனிது நடத்துவதற்கேற்ற செல்வததைச் சேர்ப்பது ஆண்களின பொறுப்பாக அமைத்தனர். ஆண் பெண் இருவருள் பெண்களுககே பொறுபபு மிகுதி.

"பெறறோ நம் மற்றோரும் கற்பித்த நல்லுரைகளை மறவாது பினபற்றுதல. காதலனிடம் அன்பு காட்டுதல். நல்லொழுக்கத்துடன நடந்து கொளளுதல். இளகிய நெஞ்சுடன் பொறுமை காட்டுதல். இரகசியங்களை ஒருவர்க்கும உரைக்காமல் உள்ளத்திலேயே நிறுத்தி வைத்துக் கொள்ளுதல். இயன்றவாறு விருந்தினர்களை உபசரித்தல். தன்னைச் சூழ்ந்திருப்போரையும், சூழ்ந்திருக்கும்

பொருள்களையும் பாதுகாத்தல், இவைகள் எல்லாம் இல்லாளுக்கு வேண்டிய இன்றியமையாத குணங்கள்." இதுவே சிறந்த கற்பாகும். இதனை

> கற்பும், காமமும், நற்பால் ஒழுக்கமும்
> மெல்லியல் பொறையும், நிறையும், வல்லிதின்
> விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும்,
> பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள
>
> [தொ. பொ. கற்பு. 11]

என்ற சூத்திரத்தால் காணலாம். இதில் "வல்லிதின் விருந்து புறந்தருதல்" என்று கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது. விருந்தினர் வேறு; சுற்றத்தார் வேறு. சுற்றத்தார் தன்னைச் சூழ்ந்திருப்பவர்கள், விருந்தினர் முன்பின் அறியாத புதியவர்கள். தமது இல்லத்திற்கு வந்த புதியவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் தம் நாட்டவராயினும், பிற நாட்டவராயினும் அவர்களை வரவேற்று உபசரிக்கும் வழக்கம் பண்டைத் தமிழர்களிடம் குடிகொண்டிருந்தது. இதனால் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த மனப்பான்மை படைத்தவர்கள் தமிழர்கள் என்பதை அறியலாம்.

8. பெற்றோரின் குணம் பிள்ளைகளுக்கும் உண்டு. இதை இப்பொழுதும் கண்கூடாகக் காண்கிறோம். இக்குணம் பழக்கத்தினால் உண்டாகிறதா? பிறவியிலேயே தோன்றுகிறதா? இது ஆராய்ச்சிக்குரியது. பழக்க வழக்கங்களும், சுற்றுச் சார்பும், சூழ்நிலையுமே ஒருவருடைய நடத்தைக்கும் குணத்திற்கும் காரணம் என்பதே அறிஞர் கொள்கை. ஆனால் குழந்தைகளின் குணம் எப்படியிருந்தாலும், அவர்களின் உருவம் தாயைப் போலவோ, தந்தையைப் போலவோ, அல்லது பாட்டன் பாட்டியைப்

போலவோ அமைந்திருப்பதைக் காண்கிறோம். தந்தையின் குணம் மகனுக்கும் உண்டு என்பதே பழந் தமிழர் கொள்கை. இதனை "தந்தையர் ஒப்பர் மக்கள்" (தொ. பொ. கற்பு. 7) என்ற பகுதியால் அறியலாம்.

9. மனைவி மக்களைத் துறந்து தனித்துறையும் துறவறம் என்பது பழந் தமிழர்களிடம் இருந்த வழக்கமல்ல. இத்தகைய "சந்நியாசம்" பழந்தமிழ் நாட்டில் இல்லை. தமிழர்களின் துறவற முறை வேறு.

தமிழர்கள் காம உணர்ச்சி மறைந்துபோன கடைசிக் காலத்தில்தான்—அதாவது இல்லற இன்பத்தைப் பூரணமாக அனுபவித்த பிறகுதான்—துறவறத்தை மேற் கொள்ளுவர். கணவனும், மனைவியும் தம்மைப் பாதுகாக்கும் மக்களோடும், நன்னெறியில் ஒழுகும் சுற்றத்தாரோடும் சேர்ந்து வாழ்ந்தே சிறந்த செயல்களைச் செய்வார்கள். இதுதான் இல்லறத்திற்குப் பிறகு பின்பற்றப்படும் துறவற வாழ்வாகும். இதனை

காமம் சான்ற கடைக்கோட் காலை,
ஏமம்சான்ற மக்களொடு துவன்றி,
அறம்புரி சுற்றமொடு, கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.

(தொ பொ. புற. 51)

என்பதனால் அறியலாம். இதுவே தமிழர்கள் பின்பற்றி வந்த துறவற வாழ்வு. தன்னலந் துறந்து பிறர் நலத்துக்காக உழைக்கும் தூய வாழ்வே துறவறம் என்பதை இதனால் அறியலாம்.

10. இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலங்களிலும் குற்றங் குறைகள் ஏற்படாமல் அற நெறியிலே வாழ்ந்த அறிஞர்கள் பலர் தமிழ் நாட்டில் வாழ்ந்தனர்.

(தொ. பொ. புற. 16)

11 உணவிலே ஆசையின்மை. நீரிலே விருப்பம் இன்மை. வெப்பம் பொறுத்தல். குளிர்ச்சியைத் தாங்குதல். அமைதியான இடத்தைத் தேடிக் கொள்ளுதல். யோகாசன முறையில அமர்தல் : உண்ணும்போது உரையாடாமை. மவுனமா யிருத்தல். இந்த எண் வகைப் பயிற்சிகளையும் உடைய தவசிகளும் தமிழ் நாட்டில் இருந்தனர்.

12. செலவமுடையவன் தன் செல்வததால் வறியோரின் துயரைப் போக்க வேண்டும். இதுவே அவன் கடமை. பிறருக்கு உதவி செய்யாமல தமக்காகமட்டும் பொருளீட்டி வாழ்ந்த தந்நலககாரர்கள மக்களால் பழிககப்பட்டனர். அறிஞர்களாலும் புலவர்களாலும் வெறுக்கப்பட்டனர்.

கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்

[தொ. பொ. புற. 29]

என்பதனல் இந்த உண்மையைக் காணலாம.

13. மக்கட் சமுதாயத்திலே உயர்வு தாழ்வு ஏற்படுவதற்கான காரணங்களில் முதற் காரணம் செல்வந்தான். செல்வம் உடைய மக்களே சிறந்தவர்களாகக் கருதப்பட்டனர். செல்வமற்ற வறியவர்கள் தாழ்ந்தவர்களாக எண்ணப்பட்டனர். உள்ளவர் உயர்ந்தோர். இல்லாதவர் இழிந்தோர். இந்த நீதி தொல்காப்பிய காலத்திலே நிலவியிருந்தது. (தொ. பொ. அக. 44)

14. தமிழாகள் புகழுடனும் மானததுடனும வாழ்வதையே சிறந்த வாழ்க்கையெனக் கொண்டனர்.

(தொ .பொ. அக. 44)

15. போர்க்களததிலே வெற்றி பெற்ற வீரர்களுக்கும், படைத் தலைவர்களுக்கும் மன்னர்கள், பட்டமும்,

பரிசும் அளித்துப் பாராட்டுவார்கள். ஒரு நாட்டையே அவர்களுக்குப் பரிசாகக் கொடுப்பதும் உண்டு; ஒரு ஊரையோ, பல ஊர்களையோ இறையாக வழங்குவதும் உண்டு. ஏனாதி, காவிதி போன்ற பட்டங்கள் கொடுப்பதும் உண்டு. இவைகள் அவரவர்கள் ஆற்றிய வீரச் செயல்களுக்கு ஏற்றவாறு வழங்கப்படும். இப் பரிசையும், பட்டத்தையும் மாராயம் என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர்.

மாராயம் பெற்ற நெடுமொழியானும்

(தொ, பொ. புற. 7)

அரசனிடம் மாராயம் பெற்றதனால் புகழ்ந்து பேசப்படும் சொல்லாலும்'' இது இவ் வழக்கத்தை விளக்கும்.

16 போர் செய்யப் புறப்படும் வேந்தன், குறித்த நேரத்திலே புறப்படுவதற்குத் தாமதமானால், குறித்த நல்ல நேரத்திலே தன் குடையையும் வாளையும் ஊருக்குப் புறத்தே அனுப்பி வைப்பான். இதனை

குடையும் வாளும் நாள்கோள் (தொ. பொ. புற. 69)

என்பதனால் காணலாம்.

17. "நான் நினைக்கும் காரியம் நிறைவேறினால் உனக்கு இன்னது செய்வேன்'' என்று தெய்வத்தை வேண்டிக்கொள்ளும் வழக்கம் பழந் தமிழர்களிடம் இருந்தது. இதைப் பிரார்த்தனை என்றும், வேண்டுதல் என்றும், நேர்த்திக் கடன் என்றும் இக்காலத்தினர் இயம்புவர். தொல்காப்பியம் இதைத் **தெய்வக் கடம்** என்று குறிப்பிடுகிறது. (தொ. பொ. கற். 9)

18. போர்க்களத்திலே புகுந்து நிற்கும் படை வீரர்கள், தாங்கள் இன்ன அரசன் படை வீரர்கள் என்பதைக்

காட்டுவதற்காக, அவர்கள் தங்கள் அரசர்களுக்குரிய மலர் மாலைகளை அணிந்து நிற்பார்கள்.

(தொ பொ புற. 63)

19. "கூற்றுவன் வருமநாள் இன்னதென்று குறிப்பிட்டுரைக்க முடியாது. அவன் எப்போதாயினும் வருவான். உயிரைக் கவர்ந்து செல்வான். ஆதலால் வாழ் நாள் உறுதியன்று. இப்பொழுதே நல்லன செய்யுங்கள். நாளைக்குப் பார்க்கலாம் என்று தள்ளி வைக்காதீர்கள்" என்று அறிஞர்கள் நல்லுரை வழங்குவார்கள்.

20. வயது முதிர்ந்தவர்கள், இளைஞர்களுக்கு முதியவர்களைச் சுட்டிக் காட்டுவார்கள். அவர்களைப் போல நீங்களும் பழுத்து முதிர்ந்த கிழவர்களாகி விடுவீர்கள்; ஆதலால் இளைஞர்களாயிருக்கும் இப்பொழுதே நல்ல காரியங்களைச் செய்து புகழ்பெற்று வாழுங்கள்; என்று சொல்லுவார்கள்.

21. மனைவியை இழந்த கணவன் மறுமணம் செய்து கொள்ளாமல் வாழ்வானாயின் அவனுடைய நிலையைத் **தபுதார நிலை** என்று கூறுவர். தாரமிழந்தான் தபுதாரன். ஆனால், மனைவியை இழந்தவன் தபுதாரனாகத்தான் வாழ வேண்டும் என்ற கட்டாயமில்லை.

காதலனை இழந்து தனித்து வாழும் மனைவியின் நிலையைத் **தாபத நிலை** என்று கூறுவர். கணவனை இழந்த மனைவி மறுமணம் செய்து கொள்ளாமல் தவம் செய்து கொண்டிருப்பாள். உடன்கட்டை ஏறாத மனைவி தவஞ் செய்து வாழ்தல் அக்கால வழக்கம், தவம் செய்வோள் தாபதியாவாள்.

22. போர் நின்றவுடன் பெண்கள் போர்க்களத்திலே புகுவர். எதிரிகளின் வேற்படைகளால் தாக்கப

பட்டு இறந்து கிடக்கும் தஙகள கணவன்மார்களின் உடம் பைத் தேடி யெடுத்து வைததுக்கொண்டு வாய்விட்டு அழுவார்கள்.

23. போர்க்களததிலே மாண்டு போன வீரனுடைய உடம்பை நடுவிலே போட்டு, அதைச் சுற்றிலும பெண்கள் உட்கார்நது கொண்டு ஒப்பாரி வைத்து அழுவார்கள. ஒப்பாரி பண்டைத் தமிழர் வழக்கம்.

24. "உன மகன போர்க்களத்திலே எதிரிகளுடன இறுதி வரையிலும் எதிர்த்து நின்று சண்டையிடவில்லை. எதிரிகளுக்கு அஞ்சிப் புறமிட்டு ஓடி விட்டான்" என்று யாரேனும ஒருவர், ஒரு போர் வீரனுடைய அன்னையிடம் கூறிவிட்டாலபோதும. உடனே அவள் ஆததிரமடைவாள். இது உண்மையானல நான் தற்கொலை செயது கொளளுவேன் என்று சூளுரைப்பாள். போர்ககளத்திற்கு ஓடுவாள். தன் மகன உடம்பைத தேடுவாள். அவன் எதிரிகளின வாளுககோ, வேலுக்கோ இரையாகி இறந்து கிடந்தால் "ஈனற ஞானறினும்" மகிழ்ச்சி யடைவாள். இன்றேல் — அவன் புறமிட்டோடியது உண்மையானல் - தறகொலை செய்து கொள்ளுவாள.

இவைகளைத தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியல் 77-வது சூததிரத்திலே காணலாம்.

25. தாங்கள் பிறநதநாளிலே வெள்ளாடையணிந்து யாருக்கும துன்பம் செய்யாமல் தான தருமம் செய்வது தமிழ் வேநதர்களின வழக்கமாகும்.

26. தாங்கள் அரியணையேறி முடி சூட்டிக்கொண்ட நாளைக் கொண்டாடும் வழக்கமும் தமிழ் வேந்தர்களிடம் இருந்தது.

இவைகளைத் தொ. பொ. புறத்திணையியலின் 87-வது சூத்திரத்திலே காணலாம்.

27 வானுலகில் வாழ்வோர் தேவர்கள். அவர்கள் உண்ணும் உணவு அமிர்தம். அது மிகவும் சுவையுடையது. இந்த நம்பிக்கை தமிழர்களிடம் இருந்தது.

28. குழந்தை பிறந்த சில நாட்கள் கழிந்து அக்குழந்தையின் பொருட்டுச் சில சடங்குகள் செய்வர். அப்பொழுது குழந்தையின் நல் வாழ்வைக் கருதிப் பெரியோர்களை உபசரிப்பார்கள். தேவர்களையும் வேண்டிக் கொள்ளுவார்கள்.

29. பொருள் தேடும்பொருட்டோ, போர் செய்யும் பொருட்டோ, தூதனாகவோ போர் வீரனாகவோ, சென்று வெற்றியுடன் திரும்பிவந்த தலைவனை அவனுடைய மனைவிமார்களும், மக்களும், சுற்றத்தார்களும், மாலையிட்டு, வரவேற்று மகிழ்ச்சி யடைவார்கள்.

இவைகளைத் தொ. பொ. கற்பியலின் ஐந்தாவது சூத்திரத்தால் அறியலாம்.

30. ஆண்மகன் பரத்தையர்களுடன் கூடி வாழும் வழக்கத்தைக் கொடுமையான வழக்கம் என்று கூறுகின்றார் தொல்காப்பியர். ஆண் மக்களின் இவ்வழக்கத்தைப் பெண்களும் கண்டித்தனர். மனைவிமார்களும் இவ்வழக்கமுடைய கணவன்மார்களை வெறுத்தனர். இது ஒழுக்கத்திற்கு முரணானது என்பதே தொல்காப்பியர் கருத்து, ஆதலால் **கொடுமை ஒழுக்கம்** என்று இதற்குப் பெயர் சூட்டியுள்ளார். (தொ. பொ. பு.ற. 6)

31. மக்களுக்குப் பயனளிக்கும் இலக்கியங்களைப் புதிய பாடல்களிலே இயற்றுவது தவறாகாது. "பழைய

இலக்கணத்தைப் பின்பற்றி எழுதப்படும் பாடல்கள்தாம் சிறந்தவை; புதிய முறையிலே எழுதப்படும் பாடல்கள் பழய இலக்கணத்திற்கு எதிரானவை; அவைகளைப் பாடல்கள் என்று ஒப்புக்கொள்ள முடியாது'' என்று கூறுவோர் சிலர் உண்டு, இதைத் தொல்காப்பியம் ஒப்புக்கொள்ளவில்லை. சிறந்த செய்திகளை எளிதிலே மக்கள புரிநது கொள்ளுமபடி புதிய பாடல்களிலே நூல்கள இயற்றலாம். இது இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்ற வழியுமாகும். இம்முறையைத் தொலகாப்பியர் ஒப்புக் கொள்ளுகிருர். இப்படிப் புதிதாக எழுதபபடும் பாடல்களுக்கு விருந்து என்று பெயர் சொல்லுகிருர்.

விருந்தே தானும்

புதுவது கிளந்த யாப்பின் மேற்றே


(தொ. பொ. செய். 231)

''விருந்தாவது புதிய பொருள்களைப் புதிய வகையிலே எழுதப்படும பாடலுக்குப் பெயராகும்.''

இதுவரையிலும் கூறியவைகளைக் கொண்டு தொல்காப்பியர் காலததிலே தமிழர் வாழ்வு எவ்வளவு தலை சிறந்திருந்தது என்பதைக் காணலாம். தொல்காப்பிய காலத் தமிழர்கள், வகுபபு வெறியற்றவர்கள்; மொழி வெறியற்றவர்கள். அவர்களிடையிலே ஒழுக்கத்தால, தொழில்களால் உயர்வு தாழ்வுகள ஏற்பட்டிருந்த போதிலும் எலலோரும் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு வாழ்ந்தனர். நடு நிலையிலிருந்து தொல்காப்பியத்தைப் படிப்போர் இந்த உண்மைகளைக் காணலாம்,

பிழையும், திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
22	2	ஆட்டுகளுக்கு	ஆண்டுகளுக்கு
29	3	வேற்றமை	வேற்றுமை
34	4	பாலைத்	பாலை
66	30	வர்கள்	இவர்கள்
70	5	விணைவலர்	வினைவலர்
90	6	செலவழங்கு	செலவழுங்கு
90	7	பார்ப்பார்குரிய	பார்ப்பார்க்குரிய
107	12	தமிர்களின்	தமிழர்களின்
135	5	பான்மையுமே	பான்மையையுமே


டி.கே.சி.
வரலாறு
ஸ்டார்
பிரசுரம்